R & C PROPERTY LAWYERS LLP
& NOTARY PUBLIC
10a Upper Tooting Road , London SW17 7PG
Telephone: 02087724920
Conveyancing Services:
Residential , Commercial Conveyancing ,
Notarial Services:
Notarisation & Legalisation of Documents
Power of Attorneys,
SENTHURAN THAVARAJA LLB (Hons) Solicitor & Notary Public
Consultant : RAJA THAVARAJA LLB Solicitor

A Freely Circulated Monthly

# புதினம்

PUTHINAM

செல்வராஜா
கோல்டு ஹவுஸின்
தங்கத் திருவிழா
அட்சய திருதியை முன்னிட்டு எதிர்வரும் ஏப்ரல் 20, 21ம் திகதிகளில் நம்ப முடியாத விலைகளில் நகைகள்
162 B, Mitcham Road London SW17 9NJ
Tel: 020 8767 3795 / 07825 005 269

மலர் 18 APRIL 2015 இதழ் 3


SNM PAWN BROKERS
அனைத்து தங்க நகைகளும் இங்கே அடகு பிடிக்கப்படும்.
21.04.2015, அட்சய திருதியை தங்க நகைவாங்கி கொண்டாடுங்கள்
MITHUS JEWELLERS
லண்டனில் தமிழர்கள் விரும்பிச் செல்லும் நகைமாளிகை
நியாயமான விலை, உறுதியான வேலைப்பாடு
பழைய நகைகளுக்கு அதிக விலை அல்லது புதிய நகை
322 LONDON ROAD, CROYDONCRO 2TJ 020 8683 1756

# பிச்சை வேண்டாம்!

காணி ஒப்படைப்பு பற்றிய செய்தியைப் பார்க்கும்போது, க.பாலேந்திராவின் நாடகத் தலைப்புத்தான் நினைவில் வருகிறது.

'கொடுப்பதைப் பெற்று சிறப்புடன் வாழப் பழகுங்கள்' என்று அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் சொல்வதைப் பார்த்தால், 'பிச்சை' என்பதை இப்படியான பூடகமான வார்த்தைகளாலும் புரிய வைக்கலாம் என்று தெரிகிறது.

நாங்கள் 60 வருசமாக உங்களை ஏமாற்றியும் நீங்கள் எங்களை நம்புகிறீர்களா? என்று சம்பந்தரைப் பார்த்து சந்திரிகா கிண்டலடித்ததைப் பார்த்தால், இனிப் பிச்சை எடுப்பதைத் தவிர உங்களுக்கு வேறுவழி இல்லையென்று சொல்வது போலிருக்கிறது.

தமது சொந்த நிலங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட மக்கள், அரசினதும், என்.ஜி.ஓ.க்களினதும் ஆதரவில் (அதுவும் பிச்சைதான்) அகதி முகாம்களில் வாழும்போது, சிங்கள இராணுவம் 'அவர்கள்' நிலங்களில் விதைத்துக் கொண்டிருந்தன.

பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதி கோத்தபாய கும்பலின் சட்டைப்பைக்குள் செல்ல, இராணுவத்தினரின் சாப்பாட்டிற்கு தமிழர் நிலங்கள் பயன்படுத்தப்பட்டன.

இப்படிப்பார்த்தால், நிலத்தை மீளப்பெறும் குடும்பம் ஒன்றுக்கு ஒரு கோடி ரூபா நட்ட ஈடாகக் கொடுத்தாலும் போதாது.

நிலத்தைக் குத்தகைக்கு விட்டாலே வருசத்துக்கு பல்லாயிரம் ரூபா வருமானம் வரும்.

நிலத்தை திருப்பிக் கொடுக்கும்போதே ஏதோ பிச்சை போடுவது போல நினைக்கும் சிங்கள ஆக்கிரமிப்பாளர்கள், குந்தியிருந்த நாட்களுக்கு நட்டஈடு வழங்குவார்கள் என்று எதிர்பார்ப்பது மடமைத்தனமானது.

அது மட்டுமா... சிறியளவு காணியை மைத்திரி திருப்பிக் கொடுக்கும்போது, அது தங்களின் ராசதந்திரத்தால் கிடைத்தது என்று தமிழ் மக்களுக்கு 'படம்' காட்டுபவர்களை நினைத்தால் வெட்கம் கலந்த சிரிப்புத்தான் வருகிறது.

இதனை சிங்கள தேசத்தின் அப்பட்டமான ஆக்கிரமிப்பு என்று கூறுவதே பொருத்தமானது.

'கொடுப்பதைப் பெற்றுக்கொள்ளுங்கள்' என்பது நல்லிணக்கத்திற்கான சமிக்ஞை அல்ல. அது, 'ஒற்றை ஆட்சிக்குள் வாழப் பழகிக் கொள்ளுங்கள்' என்று தமிழ் 'திவான்' சுவாமிநாதன் ஊடாக ரணில் 'மாமன்னர்' தமிழர்க்குச் சொல்லும் செய்தி.

- தொடர்ச்சி 20ம் பக்கத்தில்

குடிவரவு விண்ணப்பங்கள் & மேன்முறையீடுகள்
Immigration Application and Appeals
- அரசியல் அடைக்கல விண்ணப்பங்கள் Fresh Applications
- உங்கள் உறவினர்களை வரவழைக்கும் விண்ணப்பம்
- இலங்கை-இந்தியாவில் பிரித்தானிய விசா நிராகரிப்புக்கு எதிரான மேன்முறையீடு
- குழந்தைகள் 7 வருடம் தொடர்ச்சியாக வசித்திருப்பின் வதிவிட விசா விண்ணப்பம்
- பிரித்தானிய குடியுரிமை விண்ணப்பங்கள்–நிரந்தர குடியுரிமை விண்ணப்பங்கள்
- நாடு கடத்தலுக்கு எதிரான விண்ணப்பங்கள்
- ஐரோப்பிய நாடுகளிலிருந்து வருவோர், திருமணம் செய்வோருக்கான EEA விண்ணப்பங்கள்


Visitors & Dependent Visa – Human rights Claim – Immigration Detention Matters – Bail Applications

- Social Welfare Benefits – Visa Extension
- Entry Clearance Applications (Spouse – Family Reunion Visitor – Settlement – Student – Prospective Student)
- Point based Applications : Tier 1 – Tier 5 (Student / Entrepreneur Visas)

Kulendran Immigration Law Chambers, 90 High Street, Colliers Wood, SW19 2BT, 0208 682 4494 / 0208 542 8222 / 07769185592, email: kilc_work@yahoo.co.uk

CALL US 24x7 on 0207 132 32 32
Colombo பயணமா?
எங்குமில்லாத சிறப்பு சலுகை.
LycaFly
PLUS £20 FREE
LYCAMOBILE TOP-UP WHEN YOU BOOK WITH US


தரமான தங்கத்திற்கு லண்டனில் சிறந்த இடம்
LAKSHMIS JEWELLERS
276, High Street North, London E12 6SA,
Tel: 020 8470 5600 FAX: 020 8470 3448
21.04.2015, அட்சய திருதியை எங்களிடம் தங்க நகை வாங்கி தங்கத்தை குவியுங்கள்!


ELAKKIA
Brand
SAVOURIES
FROZEN SNACKS
FROZEN MEALS
FROZEN CURRIES
+44 (0) 208 799 7180, www.elakkia.com, sales@elakkia.com
Ruby's Food Products Limited, Unicorn House, Unit 4, Walmgate road, Perivale, UB6 7LH, UK.
A Brand From RUBY'S

**ப.ஸ்ரீஸ்கந்தன்**

# யாழ்ப்பாணம் அந்த மாதிரி!

**புலிகளின் காலத்தில் இனம் ஒழுங்காகக் கட்டுப்பாட்டோடு வாழ்ந்து வந்தது. ஆனால் இன்று ஒழுக்கச் சீர்கேடுகள் மலிந்துவிட்டன. பண்பாட்டைச் சிதைத்த ஒரு இனம் நீண்ட காலம் வாழ்ந்ததாகச் சரித்திரம் இல்லை.**

"கண்டி றோட் அந்த மாதிரி, காப்பற் றோட்டில் பஸ் காற்றுப்போல் பறக்கிறது. யாழ்தேவி யாழ்ப்பாணம் போட்டுது, பயங்கர டெவலப்மன்ற் நடக்குது, ஜி.ஜி. பொன்னம்பலம், அல்பிரட் துரையப்பாவுக்குப் பிறகு இப்பதான் அபிவிருத்தியைப் பார்க்கிறோம்."

இவையெல்லாம் வெளிநாடுகளிலிருந்து யாழ்ப் பாணம் போய் வருபவர்கள் சாதாரணமாகச் சொல்கிற சங்கதிகள், நானும் அண்மையில் யாழ்ப்பாணம் போய் வந்தேன். அவர்கள் சொல்வதெல்லாம் உண்மைதான். ஆயினும் இவற்றையெல்லாம் ஊடறுத்துச் சென்று பார்த்தால் பல விடயங்கள் நெஞ்சைப் பிழிகின்ற சோகத்தைத் தருகின்றன. இதயத்தை வருடுகின்றன.

1984 இல் மண்ணைவிட்டு வெளியேறியபோது எனக்குத் தெரிந்தவரை கைதடி அநாதைகள் இல்லம், கைதடி முதியோர் இல்லம், முத்துத்தம்பி அநா தைச் சிறுவர் இல்லம் (திருநெல்வேலி) மற்றும் கிளி நொச்சியில் நவஜீவனம், மகாதேவா ஆச்சிரமம் போன்ற சில பராமரிப்பு நிலையங்கள் மட்டுமே இருந்தன. ஆனால், இன்று அப்படியல்ல. ஊருக்கு ஊர் ஏதாவது ஒரு நிலையம் இருப்பதைப் பார்க்கலாம்.





கைதடிக்குப் பக்கத்தில் இருக்கும் எனது ஊரான அரியாலையிலும் ஒரு முதியோர் இல்லம் வந்துவிட்டது. சற்றுத் தள்ளி நாயன்மார்கட்டுப் பகுதியில் பெரியதொரு சிறுவர் இல்லம் இயங்குகிறது. இவ்வாறு எங்கு பார்த்தாலும் சிறுவர் இல்லம், முதியோர் இல்லம், மனநலம் குன்றிய சிறுவர் இல்லம், பெண்கள் பரா மரிப்பு நிலையம், திருமணமாகாத கர்ப்பிணிப் பெண்கள் ஆதரவு இல்லம், உளவள நிலையம், வலுவிழந்தோர் இல்லம் என்று எக்கச்சக்கமான நிலையங்கள் இயங்கி வருகின்றன.

யாழ்ப்பாணம் அந்த மாதிரி என்று சொல்பவர்கள் காப்பற் வீதியிலிருந்து இறங்கி உள்ளே சென்று பார்த்தால் போரின் எஞ்சிய வடுக்களின் வலியை உணர முடியும்.

நான் அங்கு பெண்களைப் பராமரிக்கும் ஒரு இல்லத்துக்குச் சென்றிருந்தேன். குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்கள், துஷ்பிரயோகம் செய்யப்பட்ட பெண்கள், குழந்தைகள் என்று பலர் அங்கு இருந்தார்கள். போரில் மரணித்த அல்லது காணாமல் போனவர்களின் மனைவிமார் படுகின்ற துயரம் இதில் முக்கியமானது. தனியாகப் பிள்ளைகளுடன் வாழ்ந்துவரும் அவர்களை வல்லுறவுக்கு வற்புறுத்துவது அல்லது உள்ளாக்குவது வேறு யாருமல்ல, எம்மவர்கள்தான். சித்தப்பனும், பெரியப்பனும், மாமனும், மச்சானும் சில இடங்களிலும் கட்டிய இரண்டாவது புருஷனும்... கேட்பதற்கு ஆச்சரியமாக இருக்கும். ஆனால் இதுதான் அங்கு நடக்கிறது. இதற்காக அரச படைகள் ஒன்றும் வல்லுறவு செய்யாமல் அமைதியாக இருக்கிறார்கள் என்று நான் சொல்ல வரவில்லை.

ஒரு போராளியின் மனைவி தனது 12 வயது மகளுடன் அந்த இல்லத்தில் இருந்தார். அவரது சகோதரியின் கணவர் உதவி செய்கின்ற போர்வையில் அடிக்கடி வீட்டுக்கு வந்து போனார். ஒருநாள் தாய் கூலி வேலை செய்ய வெளியே போன சமயம் மகளைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார். இன்று அந்தத் தாயும் மகளும் அந்த இல்லத்தில் வைத்து உடல், உளவள ரீதியாக சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறார்கள்.

அடுத்தது. "நான் கடவுள்" கதையல்ல. உண்மையான சம்பவம். முள்ளிவாய்க்காலில் தனது மனைவியைப் பறிகொடுத்த ஒருவர் தன் இரு சிறு குழந்தைகளுடன் தப்பி கிளிநொச்சியில் வாழ்ந்து வந்தார். குடிபோதைக்கு அடிமையாகிய அவரால் குழந்தைகளைப் பராமரிக்க முடியவில்லை. போதைக்கும் காசு போதாமல் இருந்தது.

இரு குழந்தைகளையும் பஸ் நிலையத்தில் கொளுத்தும் வெயிலில் பிச்சையெடுக்க விட்டார். அயலவர் ஒருவரால் குழந்தைகள் இந்நிலையத்தில் சேர்க்கப்பட்டனர்.

இவ்வாறு அங்கிருந்த ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒவ்வொரு கதை இருந்தது.

கோண்டாவிலுள்ள ஒரு இல்லத்துக்குச் சென்றபோது இரு சிறுவர்கள் வானத்தைப் பார்த்தபடி கையைச் சுழற்றிக்கொண்டு நடந்து திரிந்தார்கள். இவர்களைப் போன்ற பலரை அங்கு காண முடிந்தது.

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் ஒரு ஆசிரியர் சங் கத்தின் முக்கிய பிரமுகர் ஒருவருடன் கதைத்தேன். ஏறத்




தாழ 140 ஆசிரியர்கள் பாடம் கற்பிக்க முடியாத அள வுக்கு மனநிலை பாதிக்கப்பட்டவர்களாக வெறுமனே பாடசாலைகளுக்கு வந்து போகிறார்கள். வன்னியில் பாடசாலைகளில் கற்று வந்த சில மாணவர்களை இன்னமும் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஆனால், அவர்களுக்கான புத்தகங்களை அரசு தொடர்ந்து அனுப்பி வருகிறது. மாணவர்களுக்கு நடந்ததை மூடிமறைக்கும் அரசின் தந்திரமாகவே ஆசிரியர்கள் அதனைப் பார்க்கிறார்கள்.

போரின் வடுக்களைத் தவிர, அந்த மண்ணில் இங்கு உள்ளது போன்ற சமுதாயச் சீரழிவுகள் வெளிச்சத்துக்கு வர ஆரம்பித்துள்ளன. குடும்ப வன்முறை, பெண்கள் துஷ்பிரயோகம் என்பன எமது சமுதாயத்தில் இன்று நேற்று ஆரம்பமானதல்ல.

போராட்டம் வளர்த்த பெண்ணிய விடுதலை காரண மாக இவ்வாறான விடயங்கள் தற்போது வெளியே தெரியத் தொடங்கியுள்ளன. குடும்பம் நடத்தப் பணம் போதாமை, குடிப்பழக்கத்துக்கு அடிமையாதல், வேறு ஒருவருடன் கள்ளத் தொடர்பு மற்றும் தராதரம் பார்த்தல் போன்ற காரணிகளால் குடும்ப வன்முறை நடக்கிறது.

தொடர்ச்சி 24ம் பக்கம்

செல்வராஜா கோல்டு ஹவுஸின்
தங்கத் திருவிழா
அட்சய திருதியை முன்னிட்டு எதிர்வரும் 20, 21 ம் திகதிகளில் நகைகள் அனைத்தும் நம்பமுடியாத விலைகளில்!
அனைவருக்கும் எமது இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்
162 B, Mitcham Road London SW17 9NJ
Tel: 020 8767 3795 / 07825 005 269
300 மேல் நகைகள் கொள்வனவு செய்பவர்களுக்கு ஒரு லட்சுமி Coin முற்றிலும் இலவசம்!


# புதினம்

PUTHINAM

லண்டன் தமிழர்களின் அபிமான இலவச இதழ்

ஆசிரியர்:

ஈ.கே.ராஜகோபால்

E.K.Rajagopal

வடிவமைப்பு
சத்யன் லே-அவுட்
9551395516

அலுவலக முகவரி:

PUTHINAM
38 MOFFAT ROAD
LONDON SW 17 7EZ
TEL: 020 8767 8004
MOB: 077 353 46890
EMAIL:
editor@londonputhinam.co.uk

'ஈழகேசரி' வெளியீட்டு நிறுவனத்துக்காக 18 ஆண்டுகளாக வெளிவரும் இலவச இதழ். தபாலில் பெற விரும்புவோர் முத்திரைச் செலவான 25 பவுண்களை மட்டும் Puthinam என்ற பெயருக்கு காசோலையாக அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.



## இலவச சேவை
## கல்யாணமாலை

மணமகள், மணமகன் அறிமுகம்

தொடர்புகளுக்கு
kalyanamalaiuk@yahoo.co.uk

தொலைபேசி 07466846911

## லண்டனில் தமிழக ஜோதிடர்
## பிரபல தமிழக ஜோதிடர், சாஸ்திரியார்

திருச்சி தில்லை நடராஜர்

லண்டனில் நியூமோல்டன் பகுதியில் தங்கியுள்ளார். உங்கள் பிறந்த திகதியைக் கொண்டு, ஐந்து நிமிடங்களில் குறிப்பு எழுதி, கடந்த காலம், நிகழ்காலம், வருங்காலம் - படிப்பு, திருமணம், தொழில், அதிர்ஷ்டம் போன்றவற்றைத் தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொல்வார்.

07960734968 - 0741559790


அச்சகத் தொழில் செய்வோர்,
பத்திரிகை நடாத்துபவர்கள்,
புத்தகங்கள் வெளியிடுவோர்,
மாதாந்திர சஞ்சிகை
நடாத்துபவர்களுக்காக....

புத்தக வடிவமைப்பு, டி.டி.பி., திருமண அழைப்பிதழ்கள், சிறப்பு மலர்கள், உங்கள் வீட்டு விஷேச நிகழ்வுகளுக்கான அழைப்பிதழ்கள் என சிறந்த வேலைகளை இந்தியாவிலிருந்து வழங்குகிறோம்

Call: 9551395516
www.satyanlayout.com

Looking for an
## ACCOUNTANT ?

We are next to you!
We provide solutions for your Accountancy needs


உங்கள் தனிப்பட்ட மற்றும் வியாபார
ACCOUNTANCY
தேவைகளுக்கு
LONDON இல்
இயங்கும் நனித்துவமான ஸ்தாபனம்

Initial consultation is free
No fee for first three months

P & K ASSOCIATES
CIMA
PRACTISING CERTIFICATE HOLDER

183, Burnt Oak Broadway,
Edgware, Middlesex,
HA8 5EH

020 8958 8883
079 1613 4976
(Mr.P. Navendran)

www.pandkgroup.co.uk
pandkassociates@aol.com

A-Lanka Travel Ltd
We make it easy to take it easy

171 Tooting High Street, Tooting, London SW17 0SZ
020 8672 5551, 020 8672 2010

TOOTING BROADWAY

வாரத்தில் 7 நாட்களும் எமது முழுமையான சேவை

6495 ATOL PROTECTED

We Serve all 7 Days in a week

உலகின் எப்பாகத்திற்கும் நியாயமான விலையில் விமானச் சீட்டுக்களை உடன் பெற்றிட நம்பிக்கையான தமிழர் ஸ்தாபனம்

For Special Family Discount and Emergency Ticket Only.
Please Contact Wimal on 07956 206 709

உங்கள் சகல பிரயாணத் தேவைகளுக்கும் அழையுங்கள்...

020 8672 5551
020 8672 2010

Worldwide Travel Agent

Special Rates for
(Subject to availability)
Colombo £210 + tax,
Madras £235 + tax,
(with British Airways)
Canada £?? + tax,
(with Sri Lankan Airlines)

SriLankan
Emirates
SINGAPORE AIRLINES
ETIHAD
QATAR AIRWAYS
BRITISH AIRWAYS

For special offers please listen to Sooriyoothayam Radio on 1035MW Mon - Fri 10 to 11 pm

Indian Visa services available

A-Lanka Travel

அவசர உடன் டிக்கட்களுக்கு
அழையுங்கள் : 07956 206 709
விமல் / விஜி 07957 121 696
Wimal / Viji

Email: wimal@a-lankatravel.co.uk | Web: www.a-lankatravel.co.uk




மண்ணில் 19.05.1927
விண்ணில் 16.03.2015

## எமது இதயத்திலிருந்து...

## திரு.இரா.நாகலிங்கம் ஐயா

செருமனி நாட்டில் தமிழ்ப் பள்ளிகளைத் தொடக்கி வளர்த்தெடுத்த திரு.இரா.நாகலிங்கம் ஐயா அவர்கள் இறையடியில் இணைந்த செய்தி கேட்டு தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஐக்கிய இராச்சியக்கிளை ஆழ்ந்த துயர் அடைகிறது.

"உலகமெல்லாம் தேமதுரத் தமிழோசை பரவ வேண்டும்" என்ற உயரிய நோக்கோடு ஐயா அவர்கள் தொடக்கிய பள்ளிகள் இன்று எமது தாய் மொழியாம் தமிழ் மொழியை உயர்விற்குக் கொண்டு சென்று கொண்டிருக்கின்றன.

எமது மொழியும், குமுகாயமும் நலிவு கண்ட வேளையில் சரியான அடித்தளமிட்டு அயராது உழைத்து எதிர்கால மாணவச் செல்வங்களை வளமாக்கிய மதிப்புக்குரிய இரா. நாகலிங்கம் ஐயா அவர்களை தமிழ்க் குமுகாயம் என்றென்றும் நினைவில் வைத்திருக்கும்.

ஐயா! நீங்கள் தமிழுக்காகச் செய்த கல்விப்பணி மேன்மையானது!

அது என்றென்றும் தமிழர் உள்ளங்களில் நிலைத்திருக்கும்!

அமரர் இரா.நாகலிங்கம் ஐயா அவர்களின் இழப்பால் துன்புற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் அனைத்துத் தமிழ் உள்ளங்களுக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஐக்கிய இராச்சியக்கிளை, TEDC U.K.

## பிரித்தானிய தமிழ் மொழிப் பரீட்சை சபையால் நடத்தப்படும் வருடாந்த பரீட்சை

BTEB

மே மாதம் 30ம் திகதி (30.05.2015)

தமிழ் மொழிக்கு OCR (Oxford, Cambridge, RSA) தேர்வு இல்லாத நிலையில், அதற்கு இணையான தேர்வை நடத்த ஒரு தேர்வு வாரியம் அவசியம், தமிழ் மொழியில் தேர்வு நடத்தவும் மற்றும் ஐக்கியராட்சிய ஒப்புதல் நிறுவனம் மூலம் அங்கீகாரம் பெற்று தகுதி பெறவும் பிரித்தானிய தமிழ் மொழிப் பரீட்சை சபை (BTEB) அமைக்கப்பட்டுள்ளது.

தொடர்புக்கு: **Administration Officer -**

**Mrs Vidyarubini SOODAMANI SARMA**

**Email: vidyadin2000@gmail.com Contact No: +44 7854 917 683**

**Chairperson - Mr. Karapathipillai SIVAGURUNATHAPILLAI,**

**Email: pillaisiva@gmail.com Contact No: +44 7951 476706**



# விமலின் பக்கம்

பிரிட்டனில், கடந்த மாதம் 15ம் திகதி அன்னையர் தினம் (மதர்ஸ்டே) கொண்டாடப்பட்டது. சிறியோர், பெரியோர் என்ற பாகுபாடின்றி எல்லோரும் (வீட்டில் உள்ள நாய்க் குட்டி உட்பட) தம்மை அரவணைத்துத் தினமும் உணவூட்டும் அன்னையைப் போற்றி, அவளுக்குப் பரிசளித்து, அவளுக்கு உணவூட்டி மகிழ்ந்த தினம். எம்மவர்கள் பலர் தமது அன்னையை அணைத்து மகிழும் காட்சியைப் படம் பிடித்து முகநூலில் (பேஸ் புக்கில்) விளம்பரப்படுத்தியிருந்தார்கள்! சரி; அவர்களை விட்டு விடுவோம். பாவம் அவர்கள்!



ஜோதி நிர்பயா

அன்னையர் தினத்திற்கு சுமார் ஒரு வார காலம் முன்னதாக, உலக மங்கையர் தினம், உலக நாடுகள் எங்கும் அனுஷ்டிக்கப்பட்டது. 2012 டிசம்பரில், புதுதில்லியில் பல காடையர்களினால் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு, உயிரிழந்த 23 வயது மருத்துவ மாணவி நிர்பயா (நிஜப்பெயர் ஜோதி) பற்றிய ஆவணப் படம் ஒன்றைத் தயாரித்த பிபிசி நிறுவனம், அதனை மங்கையர் தினத்தன்று வெளியிடத் திட்டமிட்டு இருந்தது.

இந்த விஷயம் கசிய ஆரம்பித்ததும், இந்திய மத்திய அரசு அந்தப் படத்தை இந்தியாவில் தடை செய்து உத்தரவிட்டது. பிபிசி நிறுவனமும் விடாப்பிடியாக நின்று, கூகுள் நிறுவனத்தின் யூடியூப் மூலம் பதிவேற்றியது. இந்திய அரசு கூகுளுடன் இணைந்து, இந்தியாவில் உள்ளவர்கள் யூடியூப்பில் இந்தப் படத்தைப் பார்க்க முடியாமல் தடுத்தது!



ஜோதியின் தாய் தந்தை

அப்படி என்ன அந்தப் படத்தில் இருந்தது? எதையும் ஒரு பக்கமாகப் பார்க்காமல், இரு பக்க விஷயங்களையும் வெளியிட்டு, முடிவெடுக்கும் பொறுப்பை மக்களிடமே விட்டு விடுவது பிபிசியின் ஒளிபரப்பு மாண்பு.

நிர்பயா வல்லுறவு சம்பவத்தில், நிர்பயா பற்றியும் அவருடைய வறிய பெற்றொர் பற்றியும் மிகத் தத்ரூபமாகக் காட்டிய பிபிசி ஆவணப்படம் நிர்பயாவைச் சீரழித்துச் சிறையில் இருக்கும் மூவரில் ஒருவனைப் பேட்டி கண்டு, படம்பிடித்து ஒளிபரப்பியது, பலரையும் திகைக்க வைத்தது! இந்திய அரசின் தடை உத்தரவுக்கு இது காரணமாக அமைந்தது.

"நாங்கள் நிர்பயாவுடன் உறவு கொள்ள முற்பட்டபோது, அவர் சம்மதிக்கவில்லை. எதிர்த்துப் போராடினார். எங்களுக்கு இசைந்து இவர் ஒத்துழைத்து இருந்தால், பலாத்காரம் இல்லை; வன்புணர்வு இல்லை..." என்ற தொனியில் திமிருடன் பேசினான் அந்தக் கைதி.

நிர்பயாவின் கொலைக் கைதியின் பேட்டியைவிட அந்தக் கைதியின் வழக்கறிஞர் சர்மா என்பவர் பிபிசி ஆவணப்படத்துக்கு வழங்கியிருந்த பேட்டி, எந்த அப்பாவிக்கும் ஆத்திரம் ஊட்டக்கூடியது! "எனக்கு ஒரு மகள் இருக்கிறாள். அவள் இரவு வேளையில் வேற்று ஆடவனுடன் சுற்றித்திரிகிறாள் என்று நான் அறிந்தால், அவள் உடலில் எண்ணெய் ஊற்றி, நானே அவளைக் கொளுத்தி எரித்திருப்பேன்" என்றார். கொலையின் அதே



வழக்கறிஞர், கொலையாளி

மனப் போக்குக்கொண்ட, கறுப்பு அங்கி அணிந்த, கறுப்பு உள்ளம் கொண்ட அந்தப் புதுதில்லி வழக்கறிஞர் சர்மா!

கொலையாளிக்கும் அவனது வழக்கறிஞருக்கும் ஆவணப்படத்தில் இடம் கொடுத்த சம்பவத்தைப் பார்க்கும்போது, என் அபிமான அரசியல் தலைவி மார்க்கிரட் தச்சர் அம்மையார் கூறிய கருத்துக்கள் என் மனதில் நிழலாடுகின்றன.

"பயங்கரவாதிகளும், சட்ட விரோதக் கும்பல்களைச் சேர்ந்தவர்களும் ஊடகங்களில் கருத்து வெளியிட நாம் அனுமதிக்கவே கூடாது. ஏனென்றால், இந்த ஜந்துக்கள், இந்த சமூக விரோதிகள் சுவாசிப்பதற்கும், மேலும் பரவுவதற்கும் தேவையான பிராணவாயுவே இந்த ஊடகம் மூலம் கிடைக்கும் பிரச்சாரம்தான்..." என்று 1980களில் ஐ.ஆர்.ஏ. கும்பல், லண்டனிலும் பிரிட்டிஷ் நகரங்களிலும் தாக்குதல் வெறியாட்டம் நடத்திய காலத்தில், இரும்புத் தலைவி மார்க்கிரட் தட்சர் உதிர்த்த அற்புதமான வார்த்தைகள் இவை!

இப்படியாக 2012 டிசம்பரில், தனது நண்பருடன் பஸ் வரும் வரை காத்திருந்த ஜோதி என்ற நிர்பயாவை, எருமைக் கடாவில் வந்து அழைத்துச் சென்றான் எமதர்மராஜன். தானுண்டு, தன் அன்றாட கடமைகள் உண்டு என்று உலாவருபவன். அவனை யாரும் எதிர்கொண்டு வரவேற்றதுமில்லை; கைதட்டிக் கூப்பிடுவதும் இல்லை!

ஆனால், அப்படிக் கைதட்டிக் கூப்பிடும் முஸ்லிம் யுவதிகள் (14 முதல் 25 வரை வயதுள்ள யுவதிகள்) பற்றிய செய்திகள் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளில் இப்போது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. இவற்றுள் மிக வியப்பானது, இங்கு கிழக்கு லண்டனில் உள்ள பாடசாலை ஒன்றில் படித்துக் கொண்டிருந்த 15 வயது மாணவியர் இருவர், 16 வயது மாணவி ஒருத்தி, மூவரும் திடீரென வீட்டில் இருந்து பெற்றோரின் நகைகளையும், தமது கடவுச் சீட்டுக்களையும் எடுத்துக்கொண்டு பொன்னுலகம் நோக்கிப் புறப்பட்டார்கள்! பயண முகவரிடம் ஆயிரம் பவுண்கள் ரொக்கமாகக் கொடுத்து, லண்டன் கற்விக் விமான நிலையத்தில் இருந்து, துருக்கி நாட்டின் இஸ்ரன்புல் நோக்கி பெப்ரவரி 17ம் திகதி இந்த மூவரும் பறந்தார்கள். இஸ்ரன்புல் விமான நிலையத்தில் இவர்களைச் சந்திக்க ஒருவன், இந்த மூவரையும் காரில் ஏற்றி சிரியாவுக்கு அனுப்பி வைத்தானாம்!

கிளுகிளுப்பான இந்த விடலைப் பருவத்தில் இஸ்லாம் மதத்திற்கு சேவை செய்வதுதான் இவர்களைப் போன்றவர்களின் நோக்கமா? இல்லவே இல்லை!

உலகின் மிக உயர்ந்த உன்னதமான மதங்களில் ஒன்று இஸ்லாம். இஸ்லாத்தில் நபிகள் நாயகம் காட்டும் வழியில் ஒருவர் நடந்தால், ஜீவகாருண்யமூர்த்தி புத்த பெருமானின் சன்மார்க்க போதனைகளை ஒருவர் படித்து அதன்படி நடந்தால், சாட்சாத் இறைவன் எங்கள் கண்முன்னால் வந்து காட்சி தருவான் என்பது உறுதி! ஆனால், அரபு உலகில் இஸ்லாமிய வன்மைவாதிகள் ஐசிஸ் என்ற பெயரில் நடத்தும் சிரச் சேதங்கள், முன்னாள் மஹிந்தரும் பர்மாவின் இன்னாள் விராட்பிக்குவும் நடாத்தும் கொடுமைகள் இஸ்லாத்தையும், புத்த மதத்தையும் சாக்கடையில் தள்ளிக் கொண்டிருக்கின்றன.

இந்த அந்நிய இங்கிலாந்து எங்களுக்கு வேண்டாம் என்று ஓடி ஒழியும் இந்தக் காரிகையர் ஒரே ஒரு நிமிடம் சிந்திக்க வேண்டும்! எங்கோ பங்களாதேஷில் குக் கிராமத்தில், சமூகத்தில் பின்தங்கியிருந்த பெற்றோர் இங்குவர அனுமதித்து பிள்ளைகள் பெற்று கல்வி புகட்டி, வசதியுடன் வாழ ஓசிப்பணம் தந்தது இந்த இங்கிலாந்து! இந்த இங்கிலாந்தின் அரண்மனையையும் - நாடாளுமன்றத்தையும் தகர்க்கப் போவதாகச் சூளுரைத்து வரும் ஐசிஸ் மூர்க்கர்களுக்கு மனைவிகளாக வெறிகொண்டு ஓடுகிறார்கள் இந்தக் காரிகையர். தங்களைப் போன்ற இதர கன்னியரை ஆசைவார்த்தை காட்டி பசப்பு மொழியால் மடக்குவது இந்தப் புதிய பெண்களின் முதலாவது பணி.



லண்டனிலிருந்து சென்ற 3 மாணவிகள்

கணனி வலையத்தில் ஏராளமான தளங்கள், ஐசிஸ் போராட்டம் பற்றித் தம்பட்டம் அடிக்கின்றன. நவீன தொழில்நுட்ப சாதனங்கள் ஐசிஸ் பிரசாரத்திற்கு ஆள்திரட்டும் பணிக்கு உதவுகின்றன.

உங்களைப்போன்ற இளவயது மங்கையர் எங்கள் இயக்கத்தில் பணிபுரிய வாருங்கள் என்று யூடியூப்பில் காட்டப்படும் படங்கள் சினிமா நடிகைகளின் படங்களைவிடப் படுகவர்ச்சியாகத் தெரிகின்றன. கண்களில் பிரகாசிக்கும் கான்டாக்ட் லென்ஸ், உதட்டில் பளிச்சிடும் லிப்ஸ்டிக். ஸ்கொட்லாந்து, கிளாஸ்கோவிலிருந்து வந்த 20 வயதான மாணவி அக்ஸா மஹ்மூட்டின் படம் இது. லண்டனில் சட்டப்படிப்பைக் கைவிட்டு ஓடி வந்துள்ள 22 வயதான மாணவி அப்ஸானா கையூமின் படம் இது என்று விபரிக்கும் படங்களைப் பார்க்கிறீர்கள். (இந்தச் சட்ட மாணவி அப்ஸானாவுக்கு பிரிட்டிஷ் நீதிமன்றம் கடந்த மாதம் 18ம் திகதி சிறைத் தண்டனை வழங்கியது)

சிரியா நாட்டுக்குப் போய்ச்சேரும் இக்கன்னியர், ஐசிஸ் படையில் என்ன செய்கிறார்கள்? சிலர் 'வீரர்களை' (?) திருமணம் செய்துகொள்கிறார்கள். சிலர் பெண் பொலிஸ் படையில் சேர்ந்து ஷரியத் சட்டத்தைக் கடைப்பிடிக்காதவர்களைக் கைது செய்து தண்டிக்கிறார்கள்.

சிலர் ஐசிஸ் போராளிகளுக்காக நடத்தப்படும் விபச்சார விடுதிகளை மேற்பார்வை செய்கிறார்கள். பிரிட்டனிலிருந்து 50 பெண்கள், ஜேர்மனியிலிருந்து 40 பெண்கள், பிரான்சிலிருந்து 60 பெண்கள் ஏற்கனவே சிரியாவில் தங்கியிருக்கிறார்கள்.

இந்த இளம் யுவதிகளின் உடலில் ஓடும் துடிப்பான இரத்தத்தின் வேகம் தணிய ஆரம்பித்ததும், ஒரு உண்மை அவர்களுக்கு மெதுவாகப் புரியத் தொடங்கும்: "ஐசிஸ் கலீபாக்களின் நிர்வாகத்தில் மக்களும் உரிமைகளும் இல்லை; சுதந்திரமும் இல்லை. திரும்பி வரமுடியாத (வன்வே ட்ராபிக்) ஒரு வழிப்பாதை அது!" என்பது மிகக் கசப்பான உண்மை!

CROYDON இல் நம்மவர் தங்க நகைமாளிகை



# JK gold House & Fashion House



சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு (14.04.2015)
அதிரடி மலிவு விற்பனை

- புத்தம் புதிய டிசைன்களில் தங்க நகைகள்
- கண்கவர் ஆடைகள்
- அலங்காரப் பொருட்கள்
- நகை அடகு பிடித்தல்
- பணமாற்றுச் சேவை





எதிர்வரும்
21.4.2015 செவ்வாய்
அட்சய திருதியை அன்று
தங்கம் வாங்க மறந்து
விடாதீர்கள். அன்றைய
தினம் வாங்கினால், தங்கம்
தங்கமாக உங்கள் வீட்டில்
குவியும்!

வாடிக்கையாளர்
அனைவருக்கும் எங்கள்
புத்தாண்டு வாழ்த்துகள்

JK gold House & Fashion House
314-316 London Road, Croydon CR0 2TJ
Tel : 020 86844577
(Best Food Super Market முன்பாக)

# ENGINE TEC MOTORS

we offer Facilities for

- Servicing
- Clutches
- Brakes
- Overhauls
- Car Electricals
- Pre - MOT Checks
- ALL Types of Repair & Body Work
- Insurance Work Undertaken

என்ஜின் ரெக் மோட்டர்ஸ்
உங்கள் கார் திருத்த
வேலைகளுக்கு
நம்பிக்கையான நிறுவனம்

Ask for Vel or Rajan
Tel: 020 8640 8000
020 8640 1230
Mob: 0786 0226 476
07860 770 945

Email: vel@etmluk.com
rajan 339c@gmail.com
www.etmluk.com



Unit 5,339 London Road, Mitcham, Surrey CR4 4BE

தமிழிலேயே பேசி உங்கள் கார் பிரச்சனையைத் தீர்த்துக் கொள்ளலாம்.




## Buy Vijay TV Viewing Card Worth £60 and get 2 x £30 Super Singer Concert Tickets Free*

VIJAY

* Till Stocks last.

### Tickets available for £15 £30 £45 £60 & £75

### Tickets Available at

EAST HAM - Seelans superstore - 020 85488945,
Akilan Video - 020 85480033, Lakshmis Jewellers- 020 84705600

BARKING - Veena's Cash & Carry -020 85502700

WEMBLEY - SGA Video - 07940795145, Western Jewellers - 020 89030909,
Ganapathy Cash & Carry - 020 87954627

TOOTING - Jai Off License - 020 86822666, Western Jewellers - 020 87673445

SOUTH HARROW - Global Video - 020 84239988, South Harrow Food & Wine - 020 84236321

SUTTON - Sureyan Express - 020 86417483

HAYES - Asian Fresh Fish - 020 85731161, Krishna Cash & Carry - 020 88481250

CROYDON - Eelam Video - 020 86648351

MILTON KEYNES - Asian Fresh Fish – 078070 09425

LIVERPOOL - Aananthan – 074559 84051

COVENTRY – Myooran Dreams Media – 07961277728

BIRMINGHAM – Sivamyooran - 077526 52626, Prabha – 0121 5683630

HOUNSLOW – Best Foods - 020 85776002

TOLWORTH – Vaishna Superfoods - 02083994488

NEW MALDEN – Kings Food store - 020 89493538

**FOR ONLINE BOOKING WWW.AXS.COM | WWW.SSEARENA.CO.UK**

TITLE SPONSOR: SunLand REFINED SUNFLOWER OIL

POWERED BY: Lebara mobile

CO - PRESENTED BY: Aachi "The Mother of Good Taste", POOMALAI HOUSING PRIVATE LIMITED, BHARATHRATION.COM (Your Online Supermarket)

ASSOCIATE SPONSORS: ELAKKIA, VENISONS, SOUTHINDIA PROPERTIES, CASA GRANDE, RRP HOUSING, Classic Kitchen, Jay, Bigboss, KIBS LUNGIES, SAKTHI MASALA & PICKLES, Karbonn, internet.org



# பிரித்தானியாவில் கராத்தே அகடமி
## (Henshou Isshinryu Karate Academy)
# 11வது Black Belt பட்டமளிப்பு விழா





தமிழரால் நடாத்தப்படும் கென்சோ இஷின்ரியு கராத்தே அகடமியின் (Henshou Isshinryu Karate Academy) 11 வது Black Belt பட்டமளிப்பு விழா வெகு விமரிசையாக Londonல், Catford இல் அமைந்திருக்கும் Broadway Theatreல் பெருந்திரளான மக்கள் மத்தியில் கடந்த மார்ச் மாதம் 7ம் திகதி சனிக்கிழமை மாலை நடாத்தப்பட்டது.

இந்நிகழ்விற்கு அமெரிக்காவிலிருந்து Okinawa Isshinryu Karate & Kobu-do Association (OIKKA) வின் தலைவர் Grand Master Hanshi Christopher Chase அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு 9 பெண் பிள்ளைகள் உட்பட 53 மாணவர்களுக்கு பட்டமளித்து கௌரவித்தார். இந்நிகழ்வில் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள், கல்வி மான்கள், சமூக அமைப்புகளை சேர்ந்தவர்கள் சிறப்பு விருந்தினர்களாக பலர் கலந்துகொண்டனர்.

henshou isshinryu karate academy யானது 15 வருடங்களிற்கு முன்னர் Renshi கந்தையா ரவீந்திரன் (Black Belt 6th Dan) அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு பிரித்தானியாவில் 14 கிளைகளுடனும், யாழ்ப்பாணம் வல்வெட்டியில் 1 கிளையுடனும் நடாத்தப்பட்டு வருகின்றது. இக்கல்லூரியில் 1000ற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிற்சி பெற்று வருவதுடன் 2013ல் அமெரிக்காவில் நடாத்தப்பட்ட World Isshinryu Karate உலகளாவிய போட்டியில் கலந்து பல பதக்கங்களை வெற்றி பெற்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு ஆண்டும் பிரமாண்டமான நிகழ்வாக நடைபெறும் பட்டமளிப்பு விழாவில், இவ்வாண்டு Black Belt பெற்ற சிறார்களின் பெற்றோர்களுக்கு மேடையில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். பிள்ளைகளே இந்தக் கேடயங்களை வழங்கினார்கள்.














இந்நிகழ்வை அழகாகத் தொகுத்து அளித்தார் நிவாணி ஜெயச்சந்திரன். வரவேற்புரை நிகழ்த்தினார் த.உதயகுமார். நன்றியுரை கூறினார் அப்புத்துரை நந்தகுமார்.

லண்டனில் பல கிளைகளை நிறுவி, ஆற்றல்மிக்க வீரர்களை உருவாக்கும் பயிற்சியாளர் ஹென்சி ரவீந்திரனின் ஆற்றலைப் பலரும் பாராட்டினார்கள். இந்த கராத்தே நிறுவனம் தாயக தர்மஸ்தாபனங்களுக்கு உதவுகிறது.

Since 1999

FAST CASH
SEND TODAY - COLLECT TODAY

The Most Trusted Name in Money Transfer to
# Sri Lanka

## Central Bank Approved Money Transfers from the UK

Collect your money immediately at any Commercial Bank or have your funds credited swiftly to any bank account

Open 7 Days

OUR PROMISE
Your Money is Sent from the UK and not Credited Locally by Unknown Sources.
Official Transfers



SEND FASTCASH FROM 30 BRANCHES

Credit our account online with & call us for immediate transfer BARCLAYS
A/C Name : C.E.C. LTD // A/C No : 70713945 // Sort : 20-36-47

**0208 886 4488**
**www.cecltd.com**

FCA Fastcash is a FCA & HM Customs and Excise / registered business. MSB 12112819 / FCA -PI 540536.

HNB BOC PEOPLE'S BANK NSB SEYLAN NDB bank HSBC PAN ASIA



QUALITY
1,2 & 3 BED
**APARTMENTS**
for Rent in
**Mt.Lavinia**
Sea Side - Close to St. Thomas & Mt.Lavinia Hotel



Prices From £25 Per Day *

- Fully Furnished with AC & Lift
- 3 min to Galle Rd, 5 Min to Beach

Contact : Mike on 07733 261 999
Visit our website
www.stayatmount.com



## BEST DEALS TO SRI LANKA

Do not book your air ticket with any other travel agent until you speak to us!



الطيران العماني
OMAN AIR
**£409**
Including Taxes
from London Heathrow

LIMITED OFFER! Call for Seat Availability

Baggage 30kg + 7kg First Change Free of Charge

Outbound Travel : 05th APRIL - 31st MAY 2015
06 Months valid Ticket - Must be issued on or before 31st March 2015. Subject to Availability*

| SriLankan | JET AIRWAYS | ETIHAD | Emirates | QATAR |
|---|---|---|---|---|
| from £475 incl. taxes | from £435 incl. taxes | from £465 incl. taxes | from £489 incl. taxes | from £470 incl. taxes |
| 1st Change Free<br>40kg Baggage + 7kg H. Carry | 35kg Baggage + 7kg H. Carry | 30kg Baggage + 7kg H. Carry | 30kg Baggage + 7kg H. Carry | 1st Change Free<br>40kg Baggage + 7kg H. Carry |

All fares are valid on off-peak season, Subject to availability. Terms and conditions apply..

130 High Street, Barnet, EN5 5XQ | www.holidayair.com
IATA **0208 440 0770**
HolidayAir
A Travel Experience to Remember

# ஜெயராணியின் வஞ்சம்

1 "பெண்களைத் தெய்வங்களாகப் பார்க்கும் நாகரிகமடைந்த மனிதர்களைப்பற்றி கதைகளிலும் காவியங்களிலும் நாம் படித்ததுண்டு. ஆனால் நடைமுறை வாழ்க்கையில் இந்தப் பண்பை நாம் கண்ணால் கண்டதில்லை. எங்களைத் தெய்வங்களாகப் பார்க்க வேண்டாம். அடிப்படை மனிதாபிமானத்தோடு சாதாரண மனிதர்களாகப் பார்த்தாலே போதும். அன்பு, இரக்கம், பரிவு, பாசம் என்ற குணங்கள் இந்தச் சிங்கள இராணுவத்தினருக்கு கிஞ்சித்தும் கிடையாதா? இவர்களுக்குத் தாயோ, தாரமோ, சகோதரிகளோ இல்லையா? இவர்கள் எப்படித் தங்களைப் பௌத்தர்கள் எனக் கூறிக் கொள்ள முடியும்? புனிதமான புத்தபிரானின் பெயரைச் சொல்வதற்கே இந்த அரக்கர்களுக்கு அருகதை இல்லை"

இவ்வாறு கூறிக்கொண்டே காந்திமதி தனது கதையை மேலே தொடர்ந்தாள். அவள் தொடர்ந்து கூறிய கதை இது:

மாவிட்டபுரம் காங்கேசன்துறை வீதியில் அமைந்திருந்து சூர்யா ஹோட்டலின் 13ம் இலக்கமிட்ட அறையை மேஜர் ஜேசுதாஸ், அவரது நண்பர் யோசேப் ஆகியோரின் வேண்டுதலின் பேரில் திறந்துவிட்ட மானேஜர் சுரேஷிற்கு அங்கே கண்ட காட்சி அவர் எதிர்பார்க்காத அதிர்ச்சியைக் கொடுத்தது.

அறையின் நடுவிலிருந்த பெரிய கட்டிலின் மேல் இரண்டு கைகளும் பின்னால், முதுகுப்புறமாகக் கட்டப்பட்டிருந்த நிலையில் அழகான ஒரு இளம் பெண் படுத்திருந்தாள். அவளது கரங்களைக் கட்டியிருந்த கயிற்றின் மறுமுனை கட்டிலின் தலைப்பக்கம் பொருத்தப்பட்டிருந்த இரும்பு 'பிரேமில்' கட்டப்பட்டிருந்தது. அவளது வாயை மூடி ஒரு பிளாஸ்டர் துண்டு ஒட்டப்பட்டிருந்தது. அவளது கண்கள் பீதியால் கலவரமடைந்திருந்தன.

அவளுக்குப் பதினேழு அல்லது பதினெட்டு வயதுதான் இருக்கும். நடுவில் வகிடெடுத்து தலை மயிரைப் பின்புறமாக வாரிப் பின்னல் போட்டிருந்தாள். அழகான, வசீகரமான முகம். அவள் அணிந்திருந்த உயர்தரமான ஸ்கேர்ட்டும், மேல் பிளவுசும் அவளை வசதியான ஒரு குடும்பத்துப் பெண்ணாக எடுத்துக்காட்டின. அவள் படுத்திருந்த தோற்றத்தில்கூட ஒரு வகையான தேஜஸ் காணப்பட்டது. யாழ்ப்பாணத்திலுள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினர் அழகிய தமிழ்ப் பெண்களைக் கடத்திக்கொண்டுபோய் பாலியல் வல்லுறவிற்கு ஆளாக்குகிறார்கள் என்று பத்திரிகைகளில் படிக்கும் போதெல்லாம் இது அதீதமான கற்பனையாக இருக்கக் கூடுமோ என்றெல்லாம் சுரேஷ் எண்ணியதுண்டு. இன்று அவனது குடும்பம் நடத்தும் இந்த ஹோட்டலிலேயே இப்படியொரு அசம்பாவிதம் நடக்கப்போகிறதே என எண்ணும்போது அவனுக்கு இந்த இராணுவத்தினர் மேல் வெறுப்பாகவும், இத்தகைய கேவலமானவர்களிடம் பணம் பெற்று வர்த்தகம் செய்கிறோமே என்பதை நினைக்க வேதனையாகவும் இருந்தது. தந்தையாரிடம் சொல்லி இந்த ஹோட்டல் பிஸ்னெஸ்ஸை மூடிவிடவேண்டும் என எண்ணிக்கொண்டான்,

முன்னால் வந்த ஜேசுதாஸ் தனது விரலை வாயின் மேல் வைத்து அவளைக் கூச்சல் போடாமல் இருக்கும்படி சைகை செய்துவிட்டு ஜெயராணியின் வாயின் மேல் ஒட்டப்பட்டிருந்த பிளாஸ்டரை மெதுவாகக் கழற்றி எடுத்தார்.

"என்னைக் காப்பாற்றுங்கள் ஸேர், கொடூரமான ஒரு ஆமி காப்டனிடம் நான் மாட்டிக் கொண்டிருக்கிறேன்" என்றாள்.

"உன்னைக் காப்பாற்றுவதற்காகத்தானே இப்போது வந்திருக்கிறேன்" எனக் கூறியவாறு அவளது கைகளைக் கட்டியிருந்த கட்டை அவிழ்த்துவிட்டார் ஜேசுதாஸ்.

"மகளே, உன்னைப் ப்ார்த்தால் படித்த, பெரிய இடத்துப் பிள்ளை போலத் தெரிகிறது, எப்படி இந்த இராணுவத்தானிடம் மாட்டிக் கொண்டாய்?"

அவள் தன்னை ஆசுவாசப்படுத்த சிறிது நேரம் எடுத்துக்கொண்டாள், முன்பின் தெரியாத இந்த மனிதனிடம் தன்னைப் பற்றிய முழு விவரங்களையும் தெரிவிக்கலாமா? வேண்டாமா? என யோசித்த ஜெயராணி ஒரு பகுதி உண்மையை மட்டும் கூறினாள்.

தான் தெல்லிப்பழையில் வசிப்பதாகவும், நோய் வாய்ப்பட்டிருந்த தன் தம்பியை யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்வதற்காக பஸ் ஸ்ராண்டில் யாழ்ப்பாணம் பஸ்ஸிற்காகக் காத்துக்கொண்டிருந்த சமயம் இராணுவத்தினர் மற்றவர்களோடு தன்னையும் பிடித்துக் கொண்டு தெல்லிப்பழை முகாமிற்குக் கொண்டு சென்றதையும், பின்னர் அங்கிருந்து விசாரணை என்ற பெயரில் அந்த ஆமி காப்டன் தன்னையும், தனது தம்பியையும் இங்கே அழைத்து வந்ததையும், தன்னைக் கட்டி வைத்துவிட்டு




நோய்வாய்ப்பட்ட தம்பி படுத்திருந்த பிரம்புக் கூடையை எடுத்துக் கொண்டு அந்த இராணுவ அதிகாரி வெளியே சென்று விட்டதாகவும் தெரிவித்தாள்.

"உனக்கு அப்பா அம்மா இல்லையா? நோயுற்ற தம்பியை அவர்கள் கவனிக்கவில்லையா?"

"அம்மா சமீபத்தில் இறந்துவிட்டார். அப்பா கொழும்பில் வேலை பார்க்கிறார். மூன்று மாதத்திற்கொரு தடவை வந்து போவார்."

"ஸ்கூலுக்குப் போறதில்லையா?"

"போகிறனான். மகாஜனாக் கல்லூரியில் ஏ லெவல் படிக்கிறேன்."

"எனது பெயர் ஜேசுதாஸ். நான் முன்னர் இலங்கை இராணுவத்தில் மேஜராக இருந்து ரிரையர்ட் ஆனவன். இராணுவக் கட்டுப்பாடுகள் பற்றி எனக்குத் தெரியும். நீ இங்கே கட்டப்பட்டு வைக்கப்பட்டிருந்ததற்கு நாங்கள் எல்லோரும் சாட்சி. உன்னை இங்கிருந்து விடுவித்துக்கொண்டு போய் இராணுவப் பொலிஸில் உன்னைக் கடத்தி வந்த காப்டனுக்கெதிராக முறையீடு கொடுக்கலாம். அவர்கள் விசாரணை செய்து அவனைத் தண்டிப்பார்களோ என்னவோ தெரியாது; ஆனால் நீ இங்கிருந்து தப்பிப் போய்விடலாம்."

"மேஜர் சார், இப்பெண்ணை இங்கிருந்து அவர்களுக்குத் தெரியாமல் தப்பவைத்தால் ஆமிக்காரர்கள் எங்களுக்குப் பெரிய பிரச்சனைகளைக் கொண்டு வருவார்களே" என்றான் சுரேஷ்.

"என்ன தம்பி சொல்லுறாய்; அந்த காப்டன் எங்கட ஒரு தமிழ்ப் பிள்ளையை பலாத்காரம் செய்யும் நோக்கோடு கட்டிப்போட்டு வைத்திருக்கிறான். இதே ஒரு பெரிய குற்றச் செயல். அவர்கள் புரியும் குற்றங்களுக்கு நாமும் எப்படி உடந்தையாக இருக்க முடியும்? இவளை எப்படியும் இங்கிருந்து விடுவிப்பதுதான் மனிதாபிமானம்" என்றார் ஜேசுதாஸ்.

ஜெயராணி குறுக்கிட்டுப் பேசினாள்.

"ஸேர், எனது தம்பியை கூடையோடு அந்த ஆமி காப்டன் எடுத்துக்கொண்டு போய்விட்டான். அவன் திரும்பி வந்த பின் எனது தம்பியையும் கூட்டிக் கொண்டுதான் என்னால் இங்கிருந்து போக முடியும்."

"தம்பியைப் பகடையாக வைத்து அவன் உன்னைப் பலாத்காரம் செய்தால் என்ன செய்வாய்?"

"அது என் தலைவிதி. தம்பியில்லாமல் நான் இங்கிருந்து போகவே மாட்டேன்" என்றாள் ஜெயராணி.

சற்று நேரம் சிந்தித்து ஜேசுதாஸ் கேட்டார்-

"உனக்கு கைத்துப்பாக்கி சுடத் தெரியுமா?"

"படங்களில் பார்த்திருக்கிறேன்; காட்டித்தந்தால்' சுடுவேன்" என்றாள்.

தனது கைப்பையிலிருந்த சிறிய துப்பாக்கியை வெளியே எடுத்தார் ஜேசுதாஸ்.

"இதோ இந்தத் துப்பாக்கியைப் பார். இதன் பிடியின் மேல் பக்கத்தில் இருக்கும் பாதுகாப்புப் பிடியை - Safety catch பார். இதை ஒரு தடவை பின்னால் இழுத்துவிட்டால் துப்பாக்கி சுடுவதற்கு ரெடி. பிடிக்கு முன்னால் உள்ள வில்லை அழுத்தினால் சுடும். இதில் எட்டு ரவுண்டுகள் உள்ளன. இதை உன்னிடம் தருகிறேன். உனது ஸ்கேட்டிற்கு உள்ளே தொடையின் உட்பகுதியில் பொருத்திவிட்டால் வெளியே தெரியாது. உன் பெண்மையைக் காப்பாற்றிக்கொள்ள புத்திசாலித் தனமாக உபயோகித்துக்கொள்" என்றார்.

"ஏதாவது சாப்பிட்டாயா?"

"இல்லை ஸேர்"

"தம்பி சுரேஷ், இவளுக்கு சாப்பிட ஏதாவது சிற்றுண்டியும் குடிப்பதற்கு ஏதாவது பானமும் கொண்டு வந்து கொடுத்துவிடு" என்றார்.

அவள் சாப்பிட்டதும் பாத்ரூம் போய்வரச் செய்துவிட்டு கைத்துப்பாக்கியை அதன் உறையிலிட்டு அவளது தொடையின் உட்பக்கத்தில் தோல் பட்டையினால் இறுகப் பொருத்திவிட்டார்.

"நாங்கள் இனிமேல் அதிக நேரம் இங்கே இருக்க முடியாது. அந்த காப்டன் எந்த நேரமும் திரும்பி விடலாம். இனிமேல் உனது சாமர்த்தியம்தான் உன்னைக் காப்பாற்றும்."

"மிக்க நன்றி ஸார், இந்த உதவியை என் வாழ்நாளில் மறக்க மாட்டேன்" என்றாள் ஜெயராணி.

"உன்னைப் பார்த்தால் இளவயதில் எனது மகள் ரூபி இருந்ததைப்போல இருக்கிறாய். இன்று இதைச் செய்யாவிட்டால் நான் இறக்குமட்டும் இது என்னை உறுத்திக்கொண்டே இருக்கும்."

"உங்கள் பெயர், விலாசம் அறியலாமா ஸேர்?"

"போல் ஜேசுதாஸ், ரிரையர்ட் மேஜர், மாவிட்டபுரம்" என்றார் ஜேசுதாஸ்.

அவளது கைகளை முன்பிருந்தது போலக்கட்டி, கயிற்றின் முனையை அவளது ஒரு கைக்குள் திணித்தார். மறுமுனை கட்டில் சட்டத்தில் கட்டப்பட்டிருந்தது.

"கையிலிருக்கும் கயிற்று முனையை இறுக்கி இழுத்தால் கைக்கட்டு தளர்ந்து போகும்." என்றார்.

அவளது வாயை மூடி மீண்டும் பிளாஸ்டரை ஒட்டினார்.

கைகளை ஆட்டி மூவரும் விடைபெற்றார்கள்.

ஜெயராணி முன்போலப் படுக்கையில் சாய்ந்தாள்.

சுரேஷ் அறைக்கதவைப் பூட்டிவிட்டு வரவேற்பு அறைக்குச் சென்றான்.

2 மாலை ஆறு மணியிருக்கும்.

வானத்தில் மழை மேகங்கள் கூடுகட்டிக் கொண்டிருந்தன.

பூமியில் இருள் கவிந்து கொண்டிருந்தது.

அவசர அவசரமாக அறைக் கதவைத்திறந்து கொண்டு உள்ளே வந்த காப்டன் குணசேனா உள்ளே வந்ததும் இடுப்பிலிருந்த துப்பாக்கியை எடுத்துக் கொண்டான். ஜெயராணியின் வாயை மூடியிருந்த பிளாஸ்டரை அகற்றினான்.

"கூச்சல் போட்டாயோ இந்த இடத்திலேயே கொன்று விடுவேன். நல்ல பிள்ளையாக நடந்தால் நாளைக் காலை நீ வீட்டுக்குப் போகலாம்."

"எங்கே தம்பி மோகன்?"

"கீழே ஜீப்பில் இருக்கிறான்."

"டாக்டரிடம் காட்டினீர்களா?"

"ஆம், டாக்டர் பார்த்து மருந்து கொடுத்தவர்."

இடுப்பிலிருந்து கத்தியை உருவி கட்டிலோடு இணைத்திருந்த கயிற்றை வெட்டினான். அவளது கைகள் பின்னால் கட்டப்பட்ட நிலையிலேயே இருந்தன.

தனது நீண்ட கறுப்புக் கோட்டை எடுத்து அவளது தோள்களில் போட்டான். நீண்ட அந்தக் கோட் கட்டப்பட்டிருந்த அவளது கைகளை மறைத்துக் கொண்டது.

"நாங்கள் இப்போது கீரிமலையிலிருக்கும் ஒரு விடுதிக்குப் போகிறோம். நாளைக் காலை நீ தம்பியையும் கூட்டிக் கொண்டு வீட்டுக்குப் போகலாம்."

"எனது முதுகுப் பையை (back-pach) மறக்காமல் கொண்டு வரவேணும்"

"அதை நான் எடுத்து வருகிறேன்" என்றான்.

அவளை முன்னால் நடக்கவிட்டு, அவளது பையை எடுத்துக்கொண்டு அவன் பின் தொடர்ந்தான்.

வெளியே மழை பெய்ய ஆரம்பித்திருந்தது.

ஹோட்டலின் முன் முற்றத்தில் இராணுவ ஜீப் நின்றிருந்தது. முன் பாஸஞ்சர் இருக்கையில் மோகன் படுத்திருக்கும் பிரம்புக் கூடை இருந்தது.

ஜீப்பின் பின் கதவைத் திறந்து அவளை ஏற்றிவிட்டு அவளது தோள் பாக்கை அருகில் போட்டான்.

கொட்டும்மழையில் தலைவிளக்குகளைப் போட்டு, மழை வைப்பர்களையும் போட்டுக்கொண்டு ஜீப்பை ஓட்டினான் குணசேனா. மாவிட்டபுரத்திலிருந்து கீரிமலை செல்லும் தார் வீதியில் வண்டி சென்றது.

அவ்வீதியின் இரு மருங்கும் வீடுகளோ, மனைகளோ இல்லாமல் ஒரு பொட்டல் வெளியாக இருந்தது. வீதியும் வேறு வாகனங்களோ மனித நடமாட்டமோ இல்லாமல் வெறிச்சென்றிருந்தது.

காப்டன் குணசேனா எதுவுமே பேசாமல் ஜீப் வண்டியை ஓட்டிக்கொண்டிருந்தான். அவனது கவன மெல்லாம் கொட்டும் மழையில், தலை வெளிச் சத்தில், ஜீப் வண்டியை கவனமாக ஓட்டுவதிலே பதிந்திருந்தது.

தனது கைகளை விடுவித்துக்கொண்டு துப்பாக் கியை எடுத்து அவனது தலையை நோக்கிச் சுடுவோமா? என ஒரு கணம் எண்ணினாள் ஜெயராணி. ஆனால் ஓடும் ஜீப்பின் டிரைவரைச் சுடுவதால் வண்டி தறிகெட்டு ஓடி தானும் தம்பி மோகனும் உயிர் பிழைப்பதற்கு உத்தரவாதமில்லை என உணர்ந்து அந்த எண்ணத்தைக் கைவிட்டாள்.

இன்னொரு சந்தர்ப்பம் கிடைக்காமலா போகிறது?

அவர்கள் கீரிமலையை அடைந்தபோது நன்றாக இருண்டு போயிருந்தது. வீதிக்கரையிலிருந்த ஒரு பங்களாவின் போர்ட்டிக்கோவில் ஜீப் நிறுத்தப்பட்டது.

ஜீப்பிலிருந்து இறங்கிய குணசேனா ஒரு கையில் தனது தோல் பையை எடுத்துக்கொண்டு வந்து பின் கதவைத் திறந்து ஜெயராணியை வெளியே வருமாறு பணித்தான்.

"தம்பி மோகன்?"

"அவன் நித்திரை கொள்ளட்டும், அவனைப் பிறகு எடுக்கலாம். நீ முதலிலை உள்ளே போ"

அவனது குரல் கடுமையாகக் கட்டளையிட்டது.

வாசற் கதவு மணியை அடித்தபோது ஒரு இராணுவ வீரன் வந்து சல்யூட் அடித்தான்.

"ஹெட்டி, சுந்தரம் கடையிலை இரவுச் சாப்பாட்டுக்குச் சொல்லியிருக்கிறேன். குடையை எடுத்துக் கொண்டு போய் மூன்று பேருக்கான சாப்பாடு பெற்றுக்கொண்டு, ஒரு 'ஜோனிவாக்கர்' போத்தலும் சோடாவும் வாங்கிக் கொண்டு வா"

"இன்றிரவு வேட்டைதான்" என எண்ணிய ஹெட்டி யாராச்சி "சரி சார்" எனக் கூறிவிட்டு குடையை எடுத்துக் கொண்டு வெளியே போனான்.

உள்ளே ஹாலில் நுழைந்த குணசேனா சோபாவைக் காட்டி "உட்கார்ந்து கொள், நான் பாத்ரூம் போயிட்டு வர்றேன். வெளியிலை ஓடிப் போகலாம் என்று நினைக்காதை; பின்னாலை கையைக் கட்டிக்கொண்டு வெகுதூரம் போகமாட்டாய், இப்போது இங்கே ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கிறது"

கையிலிருந்த தோல்பையை சோபாவில் போட்டுவிட்டு



அவன் பாத்ரூமிற்குள் நுழைந்தான்.

அவன் பாத்ரூமிற்குள் சென்று உள்ளே தாழிட்டுக் கொண்டதும் ஜெயராணி பரபரப்பாக எழுந்தாள்.

முதுகிலிருந்த கோட்டை உதறித் தள்ளினாள்.

கைகளைப் பிணைத்திருந்த கயிற்றின் முனையை இழுத்து கைக்கட்டை அவிழ்த்தாள்.

உள் தொடையில் பொருத்தியிருந்த துப்பாக்கி உறையிலிருந்து கைத்துப்பாக்கியை உருவி எடுத்தாள்.

துப்பாக்கியின் பாதுகாப்புப் பிடியை விடுவித்துக் கொண்டாள்.

கண்களில் கனல் பறக்க அந்த துர்க்காதேவியைப் போல குளியலறை வாசலிலே நின்றாள்.

துவாலையால் முகத்தைத் துடைத்த வண்ணம் காப்டன் குணசேனா பாத்ரூம் கதவைத் திறந்தபோது...

காது செவிடாகும் படியான சத்தத்தோடு துப்பாக்கி வெடித்தது.

முதலாவது குண்டு வலது காலைத் துளைத்தது.

இரண்டாவது குண்டு இடது காலைச் சிதறடித்தது.

"மட்ட அம்மே" என்று கதறிய வண்ணம் அவன் முழங்கால்களில் நின்று கெஞ்சிக் கதறினான்.

"எனக்கு ஏன் இந்த தண்டனை? நான் இதுவரை உனக்கு ஒரு கெடுதலும் செய்யலையே"

"நேற்று இரவு கட்டுவன் கிராமத்தில் நிறைமாத கர்ப்பிணியாக இருந்த எனதருமை அம்மாவின் வயிற்றில் கிஞ்சித்தேனும் இரக்கமில்லாமல் கதறக் கதற - வெறிபிடித்த மிருகம்போல உனது பூட்ஸ் காலால் அடித்துக் கொன்றாயே அதற்கான தண்டனையை நீ அனுபவிக்க வேண்டாமா?"

"ஏதோ ஒரு வேகத்தில் - எனது சகாக்கள் தந்த உந்துதலில் என்னையறியாமல் அப்படியான பாதகத்தைச் செய்துவிட்டேன். என்னை மன்னித்துவிடு. எனக்கு உயிர்ப்பிச்சை தா!"

"நீ ஈவு இரக்கமில்லாத ஓர் அரக்கன்.

மனித உருவத்திலே நடமாடும் பயங்கரமான மிருகம்; கடைகெட்ட மிருகம். உனக்கு இந்தப் பிறப்பில் மட்டுமல்ல ஏழேழு ஜென்மங்களிலும் பாவ மன்னிப்புக் கிடைக்காது"

"என்னை மன்னித்து விடு. என்னை கொன்றுவிட வேண்டாம். எனக்கு உயிர்ப் பிச்சை தா"

இரு கரங்களையும் கூப்பிய வண்ணம் ஜெயராணியின் காலடியில் மண்டியிட்டுக் கெஞ்சினான் காப்டன் குணசேனா.

"உனக்கு உயிர்ப்பிச்சை தருகிறேன். ஏனெனில் உன்னைக் கொன்று விடுவது, உனக்கேற்ற தண்டனையாக இருக்காது. நீ செய்த பாவங்களுக்காகப் பச்சாதாபப்படவும், பாவமன்னிப்புக் கோரவும் நீண்ட அவகாசம் தேவை. அதற்கு உன் உடலிலே உயிர் தங்கியிருக்க வேணும். ஆனால் நீ இனிமேல் எழுந்து நடமாடமாட்டாய், அதற்கு உனக்குக் கால்கள் இருக்காது. எஞ்சிய வாழ்நாளை இனிமேல் சக்கர நாற்காலியிலேயே கழிக்கப் போகிறாய்"

இவ்வாறு கூறிய ஜெயராணி அவனை வெறுப்புடன் பார்த்துவிட்டு அந்த இடத்தைவிட்டு வெளியே வந்தாள்.

காப்டன் குணசேனா அந்தக் குளியலறையிலே மயங்கிச் சரிந்தான்.

(தொடரும்)

# இரட்டை வேடத்தில் நீத்து சந்திரா!



கொஞ்சநாள் தமிழ் சினிமாவில் காணாமல் போயிருந்த நடிகை நீத்து சந்திரா கடைசியாக நடித்த பெரிய படம் அமீரின் 'ஆதி பகவான்'. வேறு படங்களே இல்லாத நிலையில், இப்போது பெரிய படம் ஒன்றில் இரட்டை வேடத்தில் நடிக்கிறார்.

'வைகை எக்ஸ்பிரஸ்' என்ற படத்தில் இரட்டை வேடத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். தொழில் அதிபரும், நடிகருமான ஆர்.கே.யின் பிரமாண்டமான தயாரிப்பு இது. ஷாஜி கைலாஷ் இப்படத்தை டைரக்ட் செய்கிறார்.

# அதுக்குள்ளே என்ன அவசரம்? கல்யாணம் பற்றி தமன்னா!



நடிகைகளில் சிலர்தான் புகழோடு இருக்கும்போதே திருமணமாகி செட்டில் ஆகிவிடுகின்றனர். சில நடிகைகளோ நடித்து மார்க்கெட் அவுட் ஆன பின்னர் தொழில் அதிபருக்குக் கழுத்தை நீட்டுவார்கள்.

தமன்னா நடிக்க வந்து பத்து ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. 'திருமணத்துக்கு ரெடியாகிவிட்டீர்களா?' என்று கேட்டால், அதற்குள் என்ன அவசரம்? என்று கேட்கிறார்.

"எனக்குத் திருமணத்துக்கான வயது ஆகவில்லை" என்கிறார்.

2005ம் ஆண்டில் சினிமாவுக்குள் நுழைந்த தமன்னா, தமிழில் 2006இல் 'கேடி' என்ற படத்தில் அறிமுகமானார்.

படிக்காதவன், அயன், பையா, சிறுத்தை என வெற்றிப் படங்களில் நடித்த இவர் சில காலம் தமிழ் சினிமாவில் ஒதுங்கியிருந்தார். மீண்டும் அஜித்தின் வீரம் படத்தின் மூலம் 2வது இன்னிங்ஸை ஆரம்பித்தார். தற்போது தமிழில் ஒரு படம் கைவசம் உள்ளது.

"உதட்டோடு உதடு வைத்து முத்தக் காட்சியில் நடிக்கக்கூடாது. நீச்சல் உடையிலும் நடிக்கக்கூடாது" என்று இன்று வரை இருந்து வருகிறேன்.

தயாரிப்பாளர்களும், டைரக்டர்களும் வற்புறுத்தினார்கள், 'இப்படி நடி' என்று. ஆனால் முத்தம், நீச்சல் உடையில் நடிக்க முடியாது என்று சொல்லிவிட்டேன். மற்ற நடிகைகள் நடிப்பது பற்றி எனக்குத் தெரியாது. அது அவர்கள் விருப்பம் என்கிறார்.

"எனக்கென்ன, ட்வென்டீஸில்தானே இருக்கேன். மூணு வருஷத்துக்கு கலியாணம் என்ற பேச்சே இல்லை. எனக்கு நன்றாகத் தெரிந்தவரைத்தான் மணமுடிப்பேன்" என்று கூறுகிறார்.

# அரைப்பக்க வசனத்தை அழகாக பேசிய ஹன்சிகா!



புலி படத்தில் வசனத்தை மனப்பாடம் செய்ய இரண்டு மணி நேரம் கஷ்டப்பட்ட ஹன்சிகாவிற்கு சீனியர் நடிகை ஸ்ரீதேவி உதவி செய்து எளிதில் புரிய வைத்துப் பேச வைத்தாராம்.

விஜய்யுடன் 'புலி' படத்தில் ஜோடியாக நடித்து வருகிறார் ஹன்சிகா. இந்தப்படம் மன்னர் காலத்துக் கதை. அரசி ஸ்ரீதேவி மகளாக (இளவரசியாக) ஹன்சிகா நடிக்கிறார். அழகி ஹன்சிகாவை கஷ்டப்படுத்தக்கூடாதே என்று இதுவரை நடித்த படங்களில் சின்னச் சின்ன வரிகளில் மட்டுமே வசனம் பேசி நடித்துள்ளார் ஹன்சிகா. 'புலி' இயக்குனர் சிம்புதேவன், அரைப் பக்க வசனத்தை எழுதிக்கொடுத்துவிட்டு, அதை மனப்பாடம் செய்துவிட்டு வருமாறு கூறிவிட்டாராம். இரண்டு மணி நேரம் டென்ஷனோடு உட்கார்ந்து மனப்பாடம் செய்தாராம். அம்மாவாக நடிக்கும் ஒரு காலத்து பிரபல நடிகை ஸ்ரீதேவி எளிதில் எப்படிப் பேசுவது என்று முழு முகபாவத்தோடு பேசி நடித்துக் காட்டினாராம். இதன் பின்னர் இயக்குனர் ஹன்சிகா அந்த டயலாக் பேசி நடித்ததைப் பாராட்டினாராம். சிறுவயது முதல் ஸ்ரீதேவியின் நடிப்பைப் பல முறை பார்த்து மகிழ்ந்த தனக்குத் தற்போது அவருடன் நடிக்க வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி மிக சந்தோஷமடைவதாக ஹன்சிகா கூறினார். 80, 90களில் கோலிவுட், பாலிவுட் பட உலகைத் தனது நடிப்பால் அசரடித்தவர் அல்லவா ஸ்ரீதேவி!

# மீண்டும் ஜோதிகா!



திருமணத்துக்குப் பிறகு முதல்முறையாக தன் கணவர் சூர்யா தயாரிப்பில் ஜோதிகா நடிக்கும் புதிய படத்துக்கு '36 வயதினிலே...' என்று பெயரிட்டுள்ளனர்.

காதலித்துக் கைப்பிடித்து இரண்டு குழந்தைகளைப் பெற்ற பிறகு ஜோதிகா மீண்டும் நடிக்க ஆரம்பித்துள்ளார். மலையாளத்தில் மஞ்சு வாரியார் நடித்துப் பெரும் வெற்றி பெற்ற 'HOW OLD ARE YOU' படத்தின் ரீ மேக்கில் நாயகியாக நடிக்கிறார். சூர்யா இப்படத்தை 2 D என்டர்டெயின்மென்ட்ஸ் மூலம் தயாரிக்கிறார். ஒரு காட்சியில் சிறப்புத் தோற்றத்தில் வருகிறார். மலையாளப் படத்தை இயக்கிய ரோஷன் ஆன்ட்ரூஸ்தான் தமிழ் பதிப்பையும் இயக்குகிறார்.

# அஜித் புதிய படத்திற்கு நாயகி ஸ்ருதி!



சிறுத்தை சிவா இயக்கத்தில் அஜித் நடிக்கவுள்ள படத்தின் நாயகி யார் என்ற குழப்பம் தீர்ந்துவிட்டது. ஸ்ருதிஹாஸன் என்பது உறுதியாகிவிட்டது. ஏப்ரல் 14ம் திகதி 'அச்சமில்லை' என்ற இப்படத்தின் தொடக்க விழா நடக்கிறது. ஸ்ருதியின் மார்க்கட் சூப்பராக உள்ளதால், அஜித்தும், தயாரிப்பாளர் ஏ எம் ரத்தினமும் ஒப்புதல் வழங்கிவிட்டார்கள். முதலில் தமன்னாவை யோசித்தார்கள். அவருக்கு மார்க்கட் சரிந்துவிட்டதாம்!

# சமத்தா இருந்த சமந்தா இப்படி ஆயிட்டாரே!



மனம் கவர்ந்தவரைப் பிரிந்ததால், நடிகை சமந்தா எப்போதும் சோகத்துடன், எதையோ பறிகொடுத்ததைப்போலக் காணப்படுகிறாராம்! திரிஷாவைத் தொடர்ந்து விரைவில் திருமணச் செய்தி சொல்வார் எனப் பெயர் பெற்றவர் சமந்தா. தன் காதலை வெளிப்படையாக ஒப்புக்கொண்டவர் அவர்.

இருவரும் இணைந்து பட விழாக்கள், கோவில், குளம் என்று சுற்றியதில் மனம் திருடியவர் யார் என்பதை உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை!

இந்நிலையில் இருவரும் பிரிந்துவிட்டனர். இரண்டு வருட காதல்!

பொதுவாகச் சமந்தா இருக்கும் இடம் கலகலப்பாக இருக்கும். ஆனால் இப்போது படு 'அப்செட்'டில் இருக்கிறார். ஒரு 'ஜோக்'கை யாராவது சொன்னாலும், சிரிக்கிறார் இல்லை!

# கவர்ச்சி காட்டுவதும் நடிப்புத்தானே!



எஸ்.ஜே.சூர்யாவின் படத்தை விரும்பிப் பார்ப்பவர்களும் இருக்கிறார்கள்! என்ன இருக்கோ, இல்லையோ, 'கிளுகிளுப்பு'க்குப் பஞ்சமில்லை. அதுதான் அவர் தனித்துவம்! அதற்கேற்றாற்போல அவருக்கு நடிகைகளும் கிடைத்து விடுகிறார்கள்! அவரது 'இசை' படத்துக்குக் கிடைத்த புதிய நடிகை சாவித்ரி, கவர்ச்சியாக நடிப்பதில் என்ன தப்பு என்று கேட்கிறார். பார்ப்பதற்கு கவர்ச்சியும் ரசிகர்களுக்குப் பரவசத்தை ஏற்படுத்துவதும்தான் நடிப்பு. அதை நான் 'இசை'யில் செய்திருக்கிறேன் என்கிறார்.

அந்தக்காலத்து நடிகை சாவித்திரி நடிப்பால் உயர்ந்து விளங்கினார். எஸ்.ஜே.சூர்யா கண்டுபிடித்த இந்த சாவித்ரி சில்மிஷம் செய்து கலக்கினார்.

## 'ஆம்பள' ஓடவில்லை' இது எப்படியோ?



விஷால் நடித்த 'ஆம்பள' எதிர்பார்த்த அளவு ஓடவில்லை! இதனால் இன்னொரு படத்தில் பொலிஸ் அதிகாரியாக வந்து கலக்கலாம் என்று பார்க்கிறார். சுசீந்தரன் இயக்கும் இப்படத்துக்கு 'காவல் கோட்டம்', 'வேட்டையன்' என்ற பெயர்களை வைக்க நினைத்து, அவற்றைக் கைவிட்டு, ஏப்ரல் முதல் வாரத்தில் பெயர் இல்லாமல் படப்பிடிப்பை தொடங்கவுள்ளனர். காஜல் அகர்வால் நாயகி! பொலிஸ் அதிகாரியாக எத்தனைபேர் நடித்து, கடைசியில் கொமடி நடிகர் சிவகார்த்திகேயன்வரை பார்த்துப் புளித்துப்போய்விட்ட 'காக்கிச்சட்டை'யில் விஷால் எப்படி இருப்பாரோ? தமிழ்பட ரசிகர்களின் தலையெழுத்து!

## விவாகரத்தான மனைவியுடன் பூக்கும் புதிய உறவு!



நடிகர் பிரகாஷ்ராஜ் தன் காதல் மனைவி லலிதா குமாரியை விவாகரத்துச் செய்துவிட்டு, நாட்டியத் தாரகை மீது காதல் கொண்டு கலியாணம் செய்து வாழ்க்கை நடத்துகிறார் என்பது பழைய கதை.

புதிய கதை டிஸ்கோ சாந்தி சகோதரியான விவாகரத்தான முன்னாள் மனைவியுடன் இப்போது மீண்டும் உறவுகொண்டு இனிக்க இனிக்கப் பேசுகிறாராம்.

நுங்கம்பாக்கத்தில் உள்ள 4ம் இலக்க பிரிவியூ தியேட்டரில் இருவரும் அடிக்கடி சந்தித்துக் கொள்கிறார்கள். பிரகாஷ்ராஜ் அந்தத் தியேட்டருக்கு 'டப்பிங்' பேச வந்தால் மாஜி மனைவி ருசியா சமைத்து எடுத்து வருகிறார். நடிகருக்கு ருசிக்கத் தொடங்கியுள்ளதாம்! எதிர்காலம் குறித்தும் ருசிக்க ருசிக்கப் பேசுகிறார்களாம்!

# இவர்கள் எப்படி?

## சிம்பு



"தனுஷ் அண்ணன் செல்வராகவன் இயக்கத்தில், நான் நடிக்கவிருக்கும் படப்பிடிப்பு வேலைகள் வரும் ஏப்ரல் மாதத்தில் துவங்கவுள்ளது. படப்பிடிப்பு நாட்களை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்"

-டுவிட்டரில் சிம்பு.

## கவுதமி



நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் நடிக்க வந்துள்ளது தனக்கு மன ஆறுதலை அளிப்பதாகக் கூறியுள்ளார் நடிகை கவுதமி. கமலுடன் வாழ்வதை விடவா?

## சிம்ரன்



தமிழ் சினிமாவில் வெற்றிகரமான தன் மூன்றாவது இன்னிங்ஸை துவங்கியுள்ளார் சிம்ரன். 'திரிஷா இல்லைன்னா நயன்தாரா'படத்தில் அவருக்கு வெயிட்டான ரோலாம்.



## லண்டனில் CINEWORLD திரைகளில் லண்டன் பாபாவின் 'எம்ஜ 7'

பிரபலமான தமிழக நடிகர்கள், இயக்குனர்களின் படங்களை வெளியிடும் 'ஐங்கரன்', 'லைக்கா மொபைல்' பனர்களில் 'லண்டன் பாபா' சுரேஷ் கிருஷ்ணா என்ற நம்மவரது லண்டனில் தயாரான தமிழ் படமான 'தமிழ் எம்.ஐ.7' (தமிழ் MI 7) படமும் கடந்த மாதம், லண்டன் CINE WORLD சினிமாத் தியேட்டர்களில் ஒரு வாரம் வரை திரையிடப்பட்டது மகிழ்ச்சிக்குரிய செய்தி.

சமுதாயத்தை போதைமருந்து கெடுத்துச் சீரழித்து கோடீஸ்வரர் களாகும் திமிங்கிலங்களையும், எடுபிடிகளையும் வளைத்துப் பிடிக்கும் குற்றத் தடுப்பு பிரிவின் உயர் அதிகாரியாக் லண்டன் பாபா நடிக்கிறார். ஆங்கிலேயர்கள் அடங்கிய அக்குழுவில் ஒரே தமிழ் அதிகாரி அவர்தான். தமிழ் எம்.ஐ.7. கடமையோடு காதலும் இருக்கிறது. தன் கீழ் பணியாற்றும் விக்டோரியா என்ற ஆங்கிலப் பெண்ணின் காதலை நிராகரித்து விடுகிறார். தான் தங்கியிருக்கும் வீட்டுத் தமிழ் பெண் லலிதா காதலித்து, லண்டன் பாபாவுடன் நெருக்கமான 'காதல் கனவுகள்' கண்டாலும் நிஜத்தில் கடமை முடிந்த பின்னர்தான் அவரை ஏற்றுக்கொள்கிறார். சக நடிகர்கள் பரவாயில்லை. அப்படி ஒரு நடை நடக்க லண்டன் பாபாவால்தான் முடியும். அவரது டைரக்ஷன் தனித்துவமானது.

லண்டன் பாபா நடித்து சண் எடுத்த 'தீர்வு', 'நீரைக் காணாத வேர்கள்' நம் தாயக மண்ணின் கதை. அந்தப் படங்களிலும் ஒரு நல்ல செய்தி கூறப்பட்டது. அதே போன்றுதான், பாபாவின் இயக்கத்தில் வந்துள்ள இப்படத்திலும் ஒரு செய்தி உள்ளது.

- தமிழன்

## எதிர்பார்த்து ஏமாந்த நடிகை!

பார்த்திபன் இயக்கிய 'கதை - திரைக்கதை - வசனம் - இயக்கம்' படத்தில் தனது சிறப்பான நடிப்பால் பலரையும் ஈர்த்தார் நாயகி அகிலா கிஷோர்! இப்படத்தைப்பார்த்த இயக்குனர் பாரதிராஜாவே பார்த்திபனிடம் அகிலா கிஷோரின் நடிப்பு அற்புதமாக இருக்கிறது என்று புகழ்ந்தார். இதனால் தனக்கு தமிழ்ப்பட வாய்ப்புக்கள் தொடர்ந்து வரிசைகட்டி வரப்போகிறது என்று பெரிதும் எதிர்பார்த்தார். ஆனால் 'மூன்றாம் உலகப் போர்' என்ற ஒரே ஒரு படம் மட்டுமே நடிக்க வாய்ப்பு வந்தது. நயன்தாராவைப் போன்று இவர் இருப்பதாக வேறு சிலர் இவரைப் பாராட்டியதால், நயன்தாராபோல் முன்னுக்கு வந்து விடலாம் என்று நம்பினார். ஆனால், எந்த வாய்ப்புமே கிடைக்கவில்லை. இப்போது தன் தாய் மொழியான கன்னடப் பக்கம் போய் தீவிரமாக முயன்று கொண்டிருக்கிறார்.




## வரலட்சுமியை நெகிழவைத்த டைரக்டர் பாலா!


பாலாவின் புதிய படம் 'தாரைதப்பட்டை' விறுவிறுப்பாக வளர்ந்து கொண்டிருக்கிறது. தஞ்சாவூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் படப்பிடிப்பு இப்போது நடைபெறுகிறது. சசிகுமார் நாயகன். சரத்குமார் மூத்த மனைவி மகள் வரலட்சுமி நாயகி. வில்லன்கள் வரலட்சுமியை அடிப்பது போன்ற காட்சி படமாக்கப்பட்டது. அப்போது வரலட்சுமி எலும்பு பாதிக்கப்பட்டது. இதனை வெளியே சொன்னால் படப்பிடிப்பு நின்று விடுமோ என்று எண்ணி, சொல்லாமல் அக்காட்சியில் நடித்து முடித்தார். மாலையில் படப்பிடிப்பு முடிந்தவுடன், மருத்துவமனை சென்று சிகிச்சை எடுத்தார். உதவியாளர்கள் மூலம் இதனைத் தெரிந்துகொண்ட பாலா, வரலட்சுமியைப் பாராட்டி, தங்கச் சங்கிலி ஒன்றையும் பரிசாக அளித்தார். நெகிழ்ந்து போனார் நாயகி!



# ஆயிரம் பூக்கள் மலரட்டும்!

## Hey Fever






குளிர்காலம் விலகி, மெதுவாக கோடையின் சுகத்தை அனுபவிக்கத் தயாராகிற சமயத்தில் நமது ஹோமியோபதி டாக்டர் ஆர். தியாகராஜன் லண்டன் வந்திருக்கிறார். வந்து சேர்ந்த கையோடு அவரைச் சந்தித்தேன்.

தமிழகத்தின் திருச்சி நகரிலுள்ள 'ஹோமியோ கேர்' தலைமையகத்திலிருந்து சில நாட்கள் கொழும்பு நகரில் கழித்துவிட்டு, இங்கு விஜயம் செய்துள்ள அவருடன் 'புதினம்' வாசகர்களுக்காக சந்தித்தபோது, உற்சாகமாகத் தனது ஆலோசனைகளைப் பகிர்ந்து கொண்டார்.

குளிர்காலம் முடிந்து, கடும் பனியும், கைகால் விறைப்பும், சோர்வைத் தரும் மனநிலையும் மாறுகின்ற நேரம் இது. உச்சக்கட்டக் குளிரான பெப்ரவரி மாதத்திலிருந்து மெதுவாக விடுபட்டு மொட்டையாகக் காணப்படும் மரங்கள், செடிகள் எல்லாம் துளிர்விடப் போகின்றன. மலர்கள் பூத்துக் குலுங்கப் போகிற வசந்த காலம் (SPRING) வரப்போகிறது. வாழ்வில் எப்போது வசந்தம் வீசும் என்று ஏங்கும் பலரும் சுறுசுறுப்பாகிவிட்டார்கள். புதிய திட்டங்கள், கடின உழைப்பு என்று புதிய தெம்பையும், புதிய மனோ நிலையையும் கொடுக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் டாக்டர் வந்திருக்கிறார்.

டாக்டர் ஆர்.தியாகராஜன் என்ன சொல்கிறார் என்று கேட்போமா? அவரே மனம் திறந்து பேசுகிறார்!

"ஆயிரம் பூக்கள் மலரட்டும்! அழகான, அற்புதமான தருணத்தில் லண்டன் என்னை வரவேற்பது போன்ற உணர்வு ஏற்படுகின்றது. அதேநேரத்தில் பெரும்பாலோருக்கு மகிழ்ச்சியும், சில பேருக்கு சோகமும் ஆரம்பிக்கிறது. இவர்களுக்குப் பூக்கள் பூப்பதைப் பார்த்தாலே ஒருவித அச்சம் ஏற்படுகிறது. மூக்கு லேசாகக் கடிக்கத் தொடங்குகிறது. கண்களும் நூடிக்கிறது. தும்மல் வேறு எதையும் செய்யவிடாது தடுக்கிறது. ஒருவித உடல் வலி; சோர்வு; காய்ச்சல் குணம்- ஒரு நாளா? இரண்டு நாளா? நாள் தோறுமல்லவா வாட்டி எடுக்கிறது! பூக்களிலிருந்து வரும் மகரந்தங்கள் செய்யும் சாகசங்கள் இவை. மார்ச் மாதத்திலிருந்து செப்ரெம்பர் மாதம் வரை இவர்களுக்குச் சோககாலம்.



**ஹோமியோபதி வைத்திய நிபுணர் ஆர். தியாகராஜன் பேசுகிறார்**

HEY FEVER என்ற நோய்க் கொடுமையின் அறிகுறிகள்தான் மேலே நான் சொன்னவை. வருடம் தவறாமல், இந்தக் காலப் பகுதியில் ஆரம்பமாகி, எவ்வளவு நாள் இருக்கும்? எப்போது முடியும்? என்ற அச்சமே, இந்தப் பிரச்சனைகளுக்குள்ளாகும் அன்பர்களின் அதிருப்திக்குக் காரணம். ஆகஸ்ட் மாதத்துக்குப் பின்னரும் தொடர்ந்து சளி, தும்மல், அலர்ஜி, ஆஸ்துமா போன்ற நீண்ட, நெடுங்காலத் தொடர் பிரச்சினைகளாக இவை மாறிவிடுவதும் உண்டு.

இந்த HEY FEVER க்குத் தடுப்பு ஊசிகள் பல வந்தாலும், மருந்துகள் அவ்வப்போது 'பாமசிகள்' என்ற மருந்துக்கடைகளில் தாராளமாகக் கிடைத்தாலும் சிரமம் இன்னமும் குறைந்தபாடில்லை. இதிலிருந்து முற்றாக மீண்டு வரமுடியாதா? இதனால் பாதிக்கப்படும் பலருக்கும் இந்தக் கேள்வி எழுவது இயற்கை.

இந்தப் பிரச்சினைக்கான அடிப்படைக் காரணத்தை உணர்ந்துகொண்டால், முற்றிலுமாக மீண்டு வரமுடியும் என்று உறுதியாகச் சொல்வேன்.

நம்முடைய உடல் ஆரோக்கியத்தின் முக்கிய கவசமான, நோய் எதிர்ப்புச் சக்தி வெகுவாகக் குறைகிறபோது, சிறு சிறு தூசிகள், துரும்புகள் கூட (DUST AND POLEN) நம்மைத் தாக்கி, நமக்குப் பாரிய பாதிப்புக்களை உண்டாக்குகின்றன. நம் உடலுக்கு ஒத்துக்கொள்ளாத இதுபோன்ற தூசி, துரும்புகளால், நமது உடம்பில் ஒவ்வாமை (ALLERGY) ஏற்படுவதால், அது HEY FEVER பிரச்சனையாகிவிடுகிறது. அநேகமானவர்களுக்கு காலை தொடக்கம் கண் கடி, தும்மல் மாலை வரை தொடர்ந்து, இரவு படுக்கப் போகும் வரை கூட நீடிக்கிறது; வாட்டி வதைக்கிறது; இது மாதக் கணக்கில் நீண்டு போகிறது!

நமது உடலின் நோய் எதிர்ப்புச் சக்திக்குப் பேருதவியாக இருக்கும் நித்திரை குறைபாடு (SLEEP APONEA), ஆரோக்கிய மற்ற வாழ்க்கை முறையே (UNHEALTHY LIFE STYLE) இவற்றுக்கு முக்கிய காரணங்களாகின்றன. மற்றும், சமீபகால ஆராய்ச்சி முடிவுகள், இங்கு கோடை காலத்தில் இயற்கையாக அமையப்பெற்ற நீண்ட பகல் நேரம் நம்முடைய நித்திரை குறைபாட்டுக்கு முக்கிய காரணம் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சரியான வாழ்க்கை முறை, ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கம் போன்றவைகளுடன் இந்த HEY FEVER க்கு ஹோமியோபதி வைத்தியத்தில் நிரந்தரத் தீர்வு காணலாம் என்பதை இதனால் பாதிக்கப்படும் உறவுகளுக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். நோய் எதிர்ப்புச் சக்தியை மிகவும் உயர்வான நிலையில் வைத்திருந்து HEY FEVER மற்றும் இதுபோன்ற நாட்பட்ட நோய்களுக்கு ஹோமியோபதி மருத்துவ சிகிச்சை மூலம் பக்கவிளைவுகளற்ற நிரந்தர சுகம் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது.

ஜெர்மனியில் பிறந்து, அலோபதிவைத்தியத்துறையில் உயர்பட்டம் பெற்று, பின் ஹோமியோபதி சிகிச்சை முறையை தனது சிறந்த ஆராய்ச்சி மூலம் இருநூறு ஆண்டுகளுக்கு முன் உருவாக்கிய மருத்துவ மேதை சாமுவேல் ஹனிமன் பிறந்த நாள் ஏப்ரல் பதினொன்றில் வருகிற தருணத்தை நினைவு கூர்ந்து, ஹோமியோபதி சிகிச்சையின் உயரிய பயனைப் பெற்று ஆரோக்கிய வாழ்வு வாழலாம்"

-ஈ.கே.ஆர்.

**ஹோமியோபதி வைத்திய நிபுணர் டாக்டர் ஆர்.தியாகராஜனிடம் எந்த நோய் குறித்தும் இலவச ஆலோசனை பெற: 020 8144 1553.**



# ஆஸ்துமா




## ஹோமியோபதி மருத்துவம்
+
## உங்கள் ஒத்துழைப்பு
# 100% தீர்வு

ஆஸ்துமா நோயாளிகள் ஏற்கனவே உட்கொள்ளும் ஆங்கில மருந்துகளுடன் ஹோமியோபதி மருந்துகளையும் உட்கொண்டால் கண்பாதிப்பு, தோல் மற்றும் பிறப்பு உறுப்பு அரிப்பு, நரம்புகள் பாதிப்பு, ஆண்மை குறைபாடு, கிட்னி பாதிப்பு போன்றவைகளை தவிர்க்கலாம்.








**உயர்தர மருத்துவம் ▪ பாதுகாப்பான மருந்துகள் ▪ விரைவான சேவை**

### சிறப்பு சிகிச்சைகள்

- **உயர் இரத்த அழுத்தம்** (B.P/Hyper Tension)
- **கொலஸ்ட்ரால்** (Cholesterol)
- **சிறுநீரக கோளாறுகள்** (Kidney Diseases)
- **மூட்டு வலி** (Arthritis)
- **தோல் வியாதிகள்** (Skin Diseases)
- **ஹார்மோன் பிரச்சனைகள்** (Hormone Disorders)
- **மாதவிடாய் கோளாறுகள்** (Menses Disorders)
- **செக்ஸ் பிரச்சனைகள்** (Sex Disorders)
- **குழந்தையின்மை** (Infertility)
- **டயாபட்டிஸ்** (Diabetes)



**இலவச மருத்துவ ஆலோசனைக்கு**
**0208 144 1553**

## HOMOEO CARE

30 வருட சிறந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம்

போன்: 0208 144 1553

வெப்சைட்: www.homoeocare.com

இமெயில்: homoeocare@rediffmail.com

பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம்

THE FEDERATION OF SAIVA (HINDU) TEMPLES U.K

2-4 Bedford Road, Walthamstow, London E17 4PX | T: 0208 527 3819 | M: 07956 919 511

# 16வது சைவ மாநாடு

# "பெரியபுராணமும் சைவ வாழ்வியலும்"



## கூனம்பட்டி ஆதீனம்

**வணக்கத்திற்குரிய ராஜலிங்கம் மாணிக்க சுவாமிகள்**

**தலைமையில் நடைபெறும்.**

### பிரதம விருந்தினர்

கௌரவ அமைச்சர் மாண்புமிகு தே.ம.சுவாமிநாதன் பா.உ

இந்து கலாச்சார, மீள் குடியேற்ற அமைச்சர்





### கௌரவ விருந்தினர்கள்

### மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள்

கௌரவ சீ. யோகேஸ்வரன் பா.உ.

Hon. **Lee Scot** *MP - Ilford South*

Hon. **Gareth Thomas** *MP - Harrow South*

Hon. **Virendra Sharma** *MP- Ealing South*

### சிறப்புப் பேச்சாளர்கள்

பேராசிரியர் மா. வேதநாதன்

தலைவர். இந்து நாகரிகத் துறை - யாழ். பல்கலைக்கழகம்





இசையமைப்பாளர் கங்கையமரன் அவர்களின்

இசையுடன் கலந்த பேச்சு

கலாநிதி அன்பரசன்

பொதுச் செயலாளர் - மலேசியா சைவ சமயப்பேரவை

### கலை நிகழ்ச்சிகள்

காலை நிகழ்ச்சியாக **சுப்பர்சிங்கர் புகழ் கௌசிக் சௌந்தர்யாவின்** பக்கதிப் பாடல்களும்

மாலை நிகழ்ச்சியாக **பத்மஸ்ரீ நித்தியசிறி குழுவினரின்** பக்திப் பாடல்களும் இடம்பெறவுள்ளதால்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

தொடர்புகளுக்கு: 07956 919 511

**18** 04.2015 Saturday

**9.00am to 8.00pm**
Woodbridge High School
St. Barnbas Road
Woodford Green
IG8 7DQ

**19** 04.2015 Sunday

**9.00am to 8.00pm**
Alperton Community School
Ealing Road
Wembley
Middlesex HA0 4JE



Aarti tv
உலகின் மிகப் பிரமாண்டமான தமிழ் தொலைக்காட்சி நிலையம்!
35ற்கும் அதிகமான தமிழ் தொலைக்காட்சி சேவைகள் ஒரேதளத்தில்
பதிவில் இருக்கும் 7 நாட்களுக்குரிய நிகழ்ச்சிகளை எவ்வேளையிலும் பார்வையிட வசதியானது.
Local Time Broadcast: Indian Time / UK Time / European Time
சற்றலைற்றுகளை பொருத்த தேவை இல்லை.
எந் நேரத்திலும் எச் சாதனத்திலும் பார்வையிட
OVER 500 MOVIES AVAILABLE INSTANLY
Multi Room Viewing
ஒரே வீட்டில் பல தொலைக்காட்சிகளை வைத்திருக்கின்றவர்கள் தாங்கள் விரும்பிய தொலைக்காட்சி நிகழ்ச்சியை ஒரே நேரத்தில் பார்க்கமுடியும்
சிறப்பு சலுகை
12 Month SUBSCRIPTION
+
FREE SET TOP BOX
£99
24 மணிநேர வாடிக்கையாளர் சேவை இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்
100% LEGAL
UK 0203 318 2004
0783 276 9522
WEB WWW.AARTITV.TV
15 Days Money Back GUARANTEE

மகாலிங்கம் கௌரீஸ்வரன்

# தாழ்ந்து பறக்கும் தமிழ்க்கொடியை தாங்கி தூக்கிப் பிடிக்கும்



# தமிழ் அவைக்காற்றுக் கழகம்!

இலங்கைத் தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் தேசங்களில், பல வகையான கலை இலக்கிய வடிவங்கள் செழித்து வளர்ந்து வருகின்றன. குறிப்பாக, பரதநாட்டியம், கர்நாடக சங்கீதம் போன்றவை. அவை மக்கள் மத்தியில் சமூக அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக பிள்ளைகளுக்குப் பயிற்றப்படும் கலைவடிவங்களாக பிரபலம் அடைந்துள்ளன. ஆனால் நாடகக்கலை புலம்பெயர்ந்தோர் மத்தியில் குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சியடையவில்லை. அதற்கான முயற்சிகளும் பெரிதாக முன்னெடுக்கப்படவில்லை. நாடகம் என்ற அரங்கக்கலைக்கு கூட்டு முயற்சியும் நீண்டகாலப் பயிற்சியும் அடிப்படை என்பது அதற்கான ஒரு காரணியாக இருக்கலாம். இந்நிலையினை மாற்றப் பல வருடங்களாக புலம்பெயர் சமூகத்தில் அரும்பாடுபட்டு வருபவர்கள் பாலேந்திரா - ஆனந்தராணி தம்பதியினர். இவர்கள் இருவரும் புலம்பெயர்ந்த தமிழ் சமூகத்தின் முதலாவது நாடகப் பள்ளியினை லண்டனின் ஆரம்பித்து இருபத்தைந்து வருடங்களாக நடத்தி வருகின்றனர். எமது இளையோருக்கு தமிழுடன் கூடிய நவீன நாடக வடிவங்களை அறிமுகப்படுத்துவதில் முன்னிற்கின்றனர்.

பாலேந்திரா - ஆனந்தராணி தம்பதியினரின் அயராத உழைப்பிலும், வழிகாட்டலிலும் இயங்கும் தமிழ் அவைக்காற்று கழகமும், நாடகப் பள்ளியும் இணைந்து கடந்த ஜனவரி 17 ஆம் திகதியன்று சிறுவர்கள் மற்றும் இளையோர்களின் மாபெரும் நாடகவிழா ஒன்றினை பிரமாண்டமான வோட்டேர்ஸ் மீட் அரங்கில் வெகுவிமரிசையாக அரங்கு நிறைந்த மக்களுடன் நடாத்தினார்கள். அதன் தொடர்ச்சியாக லண்டனில் 'சிறுவர், இளையோர் நாடகங்கள் குறித்த கருத்தரங்கும், வெள்ளி விழா பற்றிய பார்வைகளும்' என்ற நிகழ்வினை 28.02.15 அன்று நடாத்தினார்கள். பாரதியின் பாஞ்சாலி சபதம் கவிதைகளுடன் நிகழ்த்தப்பட்ட "நெட்டை மரங்கள்", "அரசனின் புத்தாடை", சேக்ஸ்பியரால் எழுதப்பட்ட கடைசி நாடகம் என்று கருதப்படும் "The Tempest" நாடகத்தை அடிப்படையாகக்கொண்டு இந்திரா பார்த்தசாரதி அவர்களால் எழுதப்பட்ட "சூறாவளி" எனும் நாடகங்கள் குறித்த பார்வைகளும், இருபத்தைந்து வருட கால வரலாற்றை மீள்நோக்கி பார்ப்பது என்றும் அன்றைய பொழுது அமைந்திருந்தது.

பாரதியின் கன்னல் தமிழ்க்கவிதைகளை மேலை நாடுகளில் பிறந்து வளரும் தமிழ் இளைஞர்கள் அழுத்தம் திருத்தமான உச்சரிப்புடன் பொருத்தமான முகபாவனைகளுடன் நிகழ்த்தியதை பலரும் வியந்து பாராட்டினர். இந்த இசை நாடகத்தின் நடனவடிவங்களை அவைக்காற்றுக்கழகத்தின் இளையோர்களே அமைத்திருந்தனர் என்று ஆனந்தராணி பாலேந்திரா குறிப்பிட்டார். தற்போது சென்னையில் வசிக்கும் இலங்கையின் புகழ்பூத்த இசையமைப்பாளரான கண்ணன், பாடல்களிற்கு இசைவடிவம் அளித்திருந்தார். கண்ணனின் இசை மிகவும் தனித்துவமானது, அவரது இசை மூலம் நாடகங்களிற்கு புதிய பரிமாணங்களை தம்மால் கொடுக்கக்கூடியதாக இருந்தது என்று பாலேந்திரா குறிப்பிட்டார்.

மு.நித்தியானந்தன் மிக விரிவான ஆய்வுரை ஒன்றை வழங்கினார். சூறாவளி நாடகம் முகமூடி அணிந்து அரங்காடப்பட்டது பற்றிக் குறிப்பிட்ட அவர் முகமூடி இல்லாமல் பங்கேற்றியவர்களின் முகபாவனைகளை வெளிப்படுத்தும் விதமாக நாடகத்தை அமைத்திருக்கலாம் என்ற விமர்சனத்தை









முன்வைத்தார். தமிழர்களின் கூத்துமரபிலும், உலக நாடக மரபுகளிலும் முகமூடி அணிந்து நடிக்கும் நாடக வகைகளை எடுத்து கூறிய பாலேந்திரா பார்வையாளர்களின் பாராட்டுக்கள் இப்பரிசோதனை முயற்சி மக்களைப் போய்ச் சேர்ந்திருப்பதை எடுத்துக் காட்டுகிறது என்று பதிலளித்தார். நாடகத்தில் பங்கேற்றிருந்த செல்வி, முகமூடி அணிந்து நாடகத்தை புதியமுறையில் மக்களிற்கு அளித்தோம்; அதே போன்று இன்னொரு சந்தர்ப்பத்தில் முகமூடி இல்லாமல் முகபாவனைகளை வெளிப்படுத்தக்கூடிய மற்றொரு பரிமாணத்தில் தாம் கட்டாயமாக சூறாவளி நாடகத்தை அரங்காடுவோம் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

தமிழ் அவைக்காற்றுக் கழகத்தில் பயிலும் இளையோர்கள் தமது வாழ்வில் நாடகமும் தமிழ் அவைக்காற்று கழகமும் அளித்த வளங்களைக் குறிப்பிட்டு பேசினர். நடிப்பு பயிற்சி; தமிழ் மொழியை பேசவே சிரமப்பட்டவர்கள் கவிதைகளை பேசி நடிக்கும்





அளவிற்கு மொழி ஆளுமை கொண்டவர்களாக உருவாகியமை; பல்கலைக்கழக அனுமதிக்கான நேர்முகத்தேர்வுகளை எதிர்கொள்ள மேடைப்பயிற்சி அளித்த தன்னம்பிக்கை; தமிழ் அவைக்காற்றுக்கழகத்தில் நடிப்புப்பயிற்சிக்கு சென்றபோது, அறிமுகமானவர்கள்







நெருங்கிய நண்பர்களாக,தோழர்களாக கிடைத்தது என்று தங்களது வாழ்வில் தமிழ் அவைக்காற்றுக் கழகம் அளித்த கொடைகளை வியந்து பேசினர்.

அவர்களின் தாய்,தந்தையர் தமது குழந்தைகளிற்கு நண்பர்கள் கிடைத்தது போலவே நமக்கும் தமிழ் அவைக்காற்றுக் கழகம் என்ற குடும்ப உறவு கிடைத்துள்ளதாக நெகிழ்ந்து பேசினர். பள்ளிகள், கல்லூரிகளிற்கோ அல்லது வேறு வகுப்புகளிற்கோ தாய், தந்தையர் பிடித்து தள்ளினாலும் வேண்டாவெறுப்பாக செல்பவர்கள் நாடகப்பயிற்சிக்கு என்றதும் தாங்களாகவே செல்லும் அளவிற்கு அவர்களை நாடகமும், தமிழ் அவைக்காற்றுக் கழகமும் கவர்ந்திருக்கிறது என்று ஒரு தாய் நகைச்சுவையாக குறிப்பிட்டார்.

தமிழ் அவைக்காற்றுக் கழகத்தை இலங்கையிலும், இங்கிலாந்திலும் தொடங்கிய ஆரம்ப நாட்களில் பெண் பாத்திரங்களில் நடிக்க பெண்கள் முன்வராத காரணத்தால் ஆண்களே பெண் வேடம் போட்டதை நினைவு கூர்ந்த ஆனந்தராணி பாலேந்திரா, இன்று ஆண் வேடங்களில் பெண்கள் நடிக்கும் அளவிற்கு வளர்ந்ததை, தமிழ் அவைக்காற்றுக்கழகத்தின் முக்கிய சாதனைகளில் ஒன்றாகக் குறிப்பிட்டார். தமது நாடகங்களில் சிறு குழந்தைகளாக நடிக்க வந்தவர்கள் இன்று திருமணமாகி தாய்மை அடைந்து தமது குழந்தைகளுடன் நடிக்க வருவதை பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

மூன்றாந்தர தமிழ் திரைப்படங்கள், அவற்றின் பாதிப்புடன் நாடகம் என்ற பெயரில் நடத்தப்படும் கோமாளிக்கூத்துக்கள், மலிவான உணர்ச்சிகளை தூண்டுபவையே கலைகள் என்று இருக்கும் தமிழ்ச்சூழலில் தரமான நாடகங்களை மக்களிற்கு அளிக்கும் தமிழ் அவைக்காற்றுக் கழகத்தின் பணி அளப்பரியது. தாழ்ந்து பறக்கும் தமிழ்க்கொடியை தாங்கி தூக்கிப் பிடிக்கும் தமிழ் அவைக்காற்றுக் கழகத்திற்கு, தமிழ் நாடக ஆர்வலர்கள் சேர்ந்து தோள் கொடுப்போம். ●

# சீதனம்



**வெ**ளிநாடுகளில் வாழும் தமிழர்களால் -அங்கு வாழும் தமிழர்களுக்காகவே நடாத்தப்படும் தொலைக்காட்சி சேவையில் - அன்று - தமிழர்களிடையே நிலவும் சீதனக் கொடுமையை முற்றாக ஒழிப்பதற்கான வழி வகைகள் பற்றிய தமது கருத்துக்களை வெவ் வெறு நேயர்கள் தொலைபேசி மூலம் - ஆத்திரமாகவும் - ஆவேசமாகவும் - தெரிவித் துக்கொண்டிருக்கிறார்கள்.

நிகழ்ச்சியின் மத்தியில் வழமைபோல ஒரு தொலைபேசி அழைப்பு. அமைதியாகவும் - உறுதியாகவும் ஒரு குரல்:

நான் யார் என்பதோ - எனது பெயர் என்ன என்பதோ - இந்த விவாதம்போல ஒரு தேவை யற்ற விடயம். தயவு செய்து ஒன்றை புரிந்து கொள்ளுங்கள். சீதனக் கொடுமையை ஒழித்து விட்டால் மட்டும் எமது இன பிராணிகள் - ஆகா - ஓகோ - என்று வாழ்ந்து கிழித்து விடமாட்டார்கள்.

சீதனம் என்பது ஒரு நோய் அல்ல, அதை மாற்றுவதற்கு. அது ஒரு நோயின் அறிகுறி. நோயை தெரிந்து கொள்ளாமல் -அதை மாற்ற முயற்சி எடுக்காமல் - அதன் அறிகுறிகளை மாற்ற முற்படுவது - அதைப்பற்றி விவாதிப்பது - வீடு தீப்பற்றி எரியும்போது Fire alarm சத்தமிடுவதை நிறுத்த முயற்சிப்பதைபோல ஒரு முட்டாள் தனமான விடயம்.

எமது இனம் சிந்திக்கும் முறைதான் அதை பிடித்திருக்கும் மூல நோய்.

காலத்திற்கேற்ப - இடத்திற்கேற்ப - சுயமாக சிந்திக்கத் தெரியாமல் - நூறு வருடங்களுக்கு முன் ஒரு பெரியார் அப்படி சொன்னார் - ஐம்பது வருடங்களுக்கு முன் இன்னொரு பெரியார் இப்படி சொன்னார் - அவர்கள் வகுத்த வழி தான் நமது வழி - இது தான் நமது பழம் பெரும் பண்பாடு என்று முட்டாள்தனமாக பிதற்றிக்கொண்டு - அதற்கேற்ப - கோளாறு பிடித்தவர்கள் போல சிந்தித்துக்கொண்டு - தமது வாழ்க்கை முறைகளை அமைத்துக்கொண்டு - இது ஒரு உன்னதமான பண்பாடு என்று பிதற்றித் திரிவதுதான் நமது இனத்தை பிடித்திருக்கும் நோய்.

இந்த நோயின் அறிகுறிகள் ஏராளம். அவற்றுள் ஒன்றுதான் நீங்கள் இன்று விவாதிக்கும் சீதனம். அதை மாற்றி பாருங்கள். அல்லது சட்டம் போட்டு தடுத்து பாருங்கள். அதைவிட கொடுமையான ஒரு அறிகுறி - ஒரு சீர்கேடு - புதிதாக உருவாகும். அதற்காக நீங்கள் மீண்டும் விவாதிக்க வேண்டும்.

தயவு செய்து இப்படியான விவாதங்களை தொடக்கி மக்களின் நேரத்தை வீணடிக்க வேண் டாம் என்று பணிவாக கேட்டுக்கொள்கிறேன்.

நிகழ்ச்சியை பார்த்துக்கொண்டிருந்த பலருக்கு புதிதாக சில சந்தேகங்கள்:

திருவள்ளுவரை நம்பலாமா? ஒளவையாரை படிக்கலாமா?

# பக்தர்

**அ**வர் ஒரு மிக பிரபல சாமியார்.

அந்த பிரபல சாமியாரின் பல்லாயிரக் கணக்கான பக்தர்களுள் ஒரு பரம பக்தர் டாக்டர் குணசீலன்.

எதற்காக அவருக்கு இந்த பரம பக்தர் பட்டம்?

காரணங்கள் ஏராளம்.

அவருடைய வீட்டின் ஹாலில் அந்தச் சாமி யாரின் மிகப் பெரிய உருவப் படம் ஒன்று தொங்குகிறது.

அதற்கு விலை உயர்ந்த சந்தன மாலை ஒன்று நிரந்தரமாக அணிவிக்கப்பட்டிருக்கிறது.

வாரத்திற்கு இரண்டு தடவைகள் அவருடைய வீட்டில் பஜன் நடைபெறுகிறது.

எத்தனையோ பெரிய பக்தர்கள் இந்த பஜனில் கலந்துகொள்கிறார்கள்.


வருடத்திற்கு ஒரு தடவை அவர் இந்தி யாவிற்கு சென்று அந்த சாமியாரை தரிசனம் செய்கிறார்.

தனது நண்பர்களை சந்திக்கும்போது அந்த சாமியாரின் பெயரை பக்தியுடன் உச்சரித்து அவர்களை வாழ்த்துகிறார்.

இது தவிர - வாழ்க்கையின் நிலையாமை குறித்து -அடுத்தவர்களுக்கு உதவி செய்வது குறித்து - பணத்தின் நிலையற்ற தன்மை குறித்து - அவர் அடிக்கடி பேசுகிறார்.

எல்லாவற்றிற்கும் மேலாக - இந்தி யாவிலிருந்து இலண்டனுக்கு விஜயம் செய்யும் சாமியார்கள் அவரின் வீட்டிலேயே தங்குவதற்கு ஒழுங்குகள் வேறு செய்து கொடுக்கிறார்.

அதனால் தானோ என்னவோ - டாக்டர் குணசீலன் ஒரு அருமையான மனிதர் என்று எல்லோரும் பேசிக்கொள்கிறார்கள்.



கடந்த மாதம் கூட - இலண்டனுக்கு விஜயம் செய்த ஒரு மிக பெரிய சாமியார் வழமைபோல டாக்டரின் வீட்டிலேயே தங்கியிருந்தார். திரி காலமும் உணர்ந்த - பக்தர்களின் குறைகளை தவறாது தீர்த்து வைக்கும் அந்த சாமியாரை பக்தர்கள் தனிமையில் மட்டுமே தரிசனம் செய்ய முடியும்! பக்தர்கள் அவருடன் அந்தரங்கமாக பேசும் விடயங்கள் வேறு யாருக்கும் தெரிய வாய்ப்பில்லை.

அன்று ஞாயிற்றுக்கிழமை. டாக்டர் குணசீலன் வீட்டில் சாமியாரைச் சந்திப்பதற்காக பக்தர்கள் கூட்டம் அலை மோதுகிறது. யாருக்குத்தான் பிரச்சினைகள் இல்லை.

பக்தர்கள் எல்லோரும் வீடு சென்றபின் - பய பக்தியுடன் சாமியாரின் அறைக்கு சென்ற பரம பக்தர் - சேவையின் நாயகன்- பஜனை வேந்தன் - அருமையான மனிதர் - டாக்டர் குணசீலன் கேட்டார்:

சுவாமி! எனது நண்பன் ஒருவன் சில வருடங்களுக்கு முன் கடனாக வாங்கிய பணத்தை இன்னும் திருப்பி தரவில்லை. அவன் மீது வழக்கு தொடர்வதா? அல்லது காடையர்களை வைத்து மிரட்டுவதா என்று ஒன்றுமே தெரியவில்லை. தயவு செய்து அந்த பணம் எனக்கு திரும்பவும் கிடைக்க ஏதாவது அறிவுரை கூறவும்.

இங்கு எத்தனை சாமியார்கள்! எத்தனை பக்தர்கள்! எத்தனை டாக்டர்கள்!

அரோஹரா!



# என்ன உலகமடா? Doctor ஸ்ரீதரன்

## ஆப்பிழுத்த குரங்குகள்



**இ**ந்தியாவில் வசிக்கும் இளைப்பாறிய தபாலதிபர் பாலசுப்பிரமணியம் இலண் டனில் வாழும் தன் மகன் அரவிந் தனிடம் இரண்டு மாத விடுமுறையில் வந்திருக்கிறார்.

அன்று சனிக்கிழமை. நேரம் இரவு பதினொரு மணி. அரவிந்தன் தன் தகப் பனாருடன் பேசிக்கொண்டிருக்கிறான்:

அப்பா! விஞ்ஞானத் தொழில்நுட்பத்தின் உதவியுடன் நாம் அன்றாடம் செய்யும் எல்லா காரியங்களையும் மிக விரை வாகவும் இலகுவாகவும் செய்யும் வகையில் இந்த நாட்டில் எல்லாவற்றையுமே திட்டமிட்டு அமுல்படுத்தியிருக்கிறார்கள். இதனால் விலை மதிக்க முடியாத நேரம் மிச்சமாகிறது.

புகையிரத நிலையத்தில் ஐந்து நிமிடத்திற்கு மேல் காத்திருக்க வேண்டியதில்லை - பணம் தேவையானால் வங்கியில் நீண்ட கியூவில் நிற்க வேண்டியதில்லை - காருக்கு பெட்ரோல் தேவையானால் மிக விரைவில் அந்தக் காரியத்தை முடித்துக்கொள்ளலாம் - மளிகைச் சாமான்கள் தேவையானால் வீட்டிலிருந்தபடியே பெற்றுக்கொள்ளலாம் - நண்பர்களுடன் கம்ப்யூட்டரில் பேசிக்கொள்ளலாம்.

அரவிந்தன் பேசி முடித்ததும் தந்தை அமைதியாக கூறுகிறார்:

மகனே! நீ கூறுவதுபோல காலையில் விழித்ததிலிருந்து இரவு படுக்கைக்குப் போகும் வரையிலும் எல்லா விதத்திலும் நீங்கள் நேரத்தை சேமிப்பதாக இருந்தால் உன்னுடைய வாழ்க்கையில் நிறைய நேரம் இருக்க வேண்டும். நீ அமைதியாகவும் - அவசரப்படாமலும் - நிதானமாகவும் அமைதியாகவும் இருக்க வேண்டும். ஆனால் எனக்கு அப்படித் தெரியவில்லையே!

காலையிலிருந்து இரவுவரை-சுடு நீரைக் குடித்த ஏதோ ஒன்றைபோல அலைகிறாய்! உனது உணவை ரசித்து உண்ண உனக்கு நேரமில்லை-பிள்ளைகளுடன் கொஞ்சி விளையாட நேரமில்லை - மனைவியுடன் ஆற அமர்ந்து நீ பேசியதை நான் பார்த்ததில்லை - எத்தனையோ வருடங்களுக்குப் பின் சந்திக்கும் உன்னைப் பெற்ற உன் தகப்பனாரிடம் கூட நீ இதுவரை ஆறுதலாகப் பேசியதில்லை!

நீயே சொல்-எங்கே நீங்கள் மிச்சமாக்கும் நேரமெல்லாம்?

பட்டினத்தார் பாடியுள்ளார்:

ஆப்பிழுத்த குரங்குபோல-அகப்பட்டார்கள்-அகப்பட்டார்கள் -கிடந்து உழல அகப்பட்டார்கள். ■


## 'புதினம்' வெளியீடாக டாக்டர் ஸ்ரீதரனின் நிர்வாணம்

புலம் பெயர் நாட்டில் தமிழர்களின் போலி வேடங்களைத் தொட்டுக் காட்டிப் பரம்பரை நோய்களின் வேடங்களுக்கு மருந்துத் துளிகள் விடுகிறார் டாக்டர் ஸ்ரீதரன்.

'புதினம்' வெளியீடாக வந்துள்ள டாக்டர் ஸ்ரீதரனின் நிர்வாணம் நூலைப் பெற விரும்புகிறவர்கள் PUTHINAM என்ற பெயருக்கு தபால் செலவு உட்பட £10 பவுண்கள் .காசோலை அல்லது போஸ்டர் ஓடர் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

PUTHINAM, 38 Moffat Road,
London SW17 7EZ. 07735346890

தமிழன்

# ஊடகத்துறையில் சாதனைதான்!



கனடிய மண்ணில், ஈழத்தின் மூத்த பத்திரிகையாளர் எஸ்.திருச்செல்வத்தின் 'தமிழர் தகவல்' 24 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து, 25வது ஆண்டில் பாதம் பதித்துள்ளது. கடந்த 24 ஆண்டுகளாக ஒரு மாதம் கூடத் தவறாமல், வெளிவரும் இச்சஞ்சிகை, வருடா வருடம் சாதனையாளர்களை இனம் கண்டு இனம் கண்டு விருது வழங்கிச் சிறப்புச் செய்து வருகிறது.

கடந்த பெப்ரவரி 22ம் திகதி, ரொறன்ரோ நகர சபை அங்கத்தவர் பீடத்தில், 24வது ஆண்டு மலர் வெளியீடும், வருடாந்த விருதுகள் வழங்கலும் இடம்பெற்றன.

25 ஆண்டுகளுக்கு முன்னர் கனடா மண்ணில் குடியேறி சமீபத்தில் மறைந்த முன்னாள் மகாஜனாக் கல்லூரி அதிபர் பொ.கனகசபாபதி அவர்களுக்கு 'தமிழர் தகவல்' 24வது ஆண்டு மலரை அர்ப்பணம் செய்யப்பட்டிருக்கிறது.

இவ்வாண்டு விழாவில் பிரதம விருந்தினர் ஒன்ராறியோ சுற்றுச்சூழல் அமைச்சர் கிளன் மறேய்.

இருநூறுக்கு மேற்பட்ட தமிழர்கள் இதுவரை காலமும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வாண்டு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்கள்: அமெரிக்காவின் மூத்த விஞ்ஞானியும், சூழல், சுற்றாடல் கால நிலை மாற்ற நிபுணருமான எம்.சஞ்சயன், வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்றார். ஏனையோர், கதிர் துரைசிங்கம், உதயணன் ஆர்.சிவலிங்கம், திருமதி செந்தில் செல்வி சுரேஸ்வரன், திருமதி பிலோமினா கிருஷ்ணபிள்ளை, சந்திரன் இராசலிங்கம், தாமோதரம் பிள்ளை யோகநாதன், லெனின் எம்.சிவம், நதிஷா ஜெயகாந்தன்.

'இளங்கதிர் சுவடு' என்ற தலைப்பில், 'தமிழர் தகவல்' ஆண்டு மலர் வெளியிடப்பட்டது. 64 கட்டுரைகள் அடங்கிய அழகான மலர்.

"சமூகத்திடமிருந்து பெற்றதைச் சமூகத்துக்கே வழங்கி வருகிறோம் என்பதை ஒரு சாதனையாகக் கருதுகிறோம். எந்த ஒரு அரசிடமிருந்தோ, அல்லது எந்த ஒரு நிறுவனத்திடமிருந்தோ ஒரு சதம் கூடப் பெறாமல், கடந்த 24 வருடங்களாகத் தமிழர் சமூகத்தின் பலத்தில் நின்றே தமிழர் தகவலை வெளியிட்டுள்ளோம் என்பது ஒரு சாதனையில்லையோ?". என்று முதன்மை ஆசிரியர் எஸ்.திருச்செல்வம் நுழைவாயிலில் குறிப்பிட்டிருக்கிறார்.

-இது மட்டுமல்ல,

ஊடகத்துறையில் நீங்கள் செய்து கொண்டிருக்கிற ஒவ்வொன்றும் சாதனைதான்! இரண்டு தமிழ் நாளிதழ்களை யாழ்ப்பாணத்திலிருந்து நடாத்தி, ஒரே மகனைத் துடிக்கத்துடிக்கப் பறிகொடுத்து, இன்றுவரை தஞ்சம் புகுந்த கனடிய மண்ணில் நிகழ்த்திக் கொண்டிருப்பவை எல்லாமே சாதனைதான்! ■


## தயாவின் பதில்கள்

வானொலி, தொலைக்காட்சி, அச்சு என்ற துறைகளில் மூத்த ஊடகவியலாளரான இளையதம்பி தயானந்தா உங்கள் கேள்விகளுக்கு 'புதினம்' இதழ்களில் பதில் அளிக்கப் போகிறார்.

முகவரி: PUTHINAM, 38 Moffat Road, London Sw17 7EZ



## உடுவிலில் காணி விற்பனைக்கு

உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் ஐந்து பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தோட்டமும் செய்யலாம். வீடும் கட்டலாம்.

தொடர்புகளுக்கு - 07735346890 (லண்டன்)


## லண்டனில் தமிழ் அமைச்சர்

மீள் குடியேற்றம் புனரமைப்பு இந்து மத விவகாரத்துக்கான இலங்கை அரசின் புதிய தமிழ் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் இம்மாதம் 13ம், 19ம் திகதி லண்டனில் தங்கியிருப்பார். அவரது அமைச்சர் பற்றி தகவல்களை அவருடன் கலந்துரையாட ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்திருப்பதாகவும், விரும்புபவர்கள் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு ந.சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

தொடர்புகளுக்கு: 07788196426


## சுண்டுக்குழியில் காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சுண்டுக்குழியில் மூன்று பரப்பு வெறும் காணி விற்பனைக்குண்டு. மகளிர் கல்லூரியிலிருந்து பத்து நிமிட நடை.

தொடர்பு - 0740 44 87348


### முதல் பக்கத் தொடர்ச்சி

பிச்சை கொடுப்பதிலும் சில முறைகள் உண்டு.

தட்டினை ஏந்தியபடி வீதியோரத்தில் குந்தியிருக்கும் பிச்சைக்காரருக்கு, சில்லறைக் காசுகளை வீசி எறிந்துவிட்டுச் செல்வது 'மகிந்தர்' முறைமை.

பக்கத்தில் இருத்தி, 'நீ எனக்கு வாக்களித்ததால், உனக்கு பிச்சை போடுகிறேன்' என்பது மைத்திரி ரணிலின் அணுகுமுறை.

மைத்திரி ரணில் சந்திரிகா கூட்டின் யாழ். விஜயம் தென்னிலங்கை சிங்கள மக்களுக்கு என்ன செய்தியைச் சொல்லும்?. அதையும் பார்த்துவிடுவது நல்லது.

முழு நாடும் எமது இறைமையின் கீழ்தான் இருக்கிறது. நாம் கொடுப்பதை மட்டுமே பெறும் நிலையில் தமிழினம் வீழ்ந்து கிடக்கிறது என்பதை சிங்கள மக்களுக்கு புரிய வைக்கும் நிகழ்வுதான் இது.

இப்படியெல்லாம் எழுதினால், தமிழ் ஆட்களிடம் வெறும் 'உணர்ச்சி' மட்டும்தான் இருக்கிறது, 'புத்தி' கிடையாது என்று உலகமகா அரசியல் விற்பன்னர் போல் பேச எத்தனிப்பவர்கள், 'எமது நிலம் எமக்கு வேண்டும்' என்பதையும் இனவாதமாகத்தான் பார்ப்பார்கள்.

'தமிழ் தேசியம்' என்பது சிலருக்கு 'மண்ணாங்கட்டி'. எமக்கு அது 'இருப்பு'.


சக்தி சக்திதாசன் எழுதும்

'மனம் பேசுது'

அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து வெளிவரும்




திருமதி. வாசுகி பத்மநாதன்

## மரண அறிவித்தல்

வைரமுத்து இரத்தினம் பத்மநாதன் அவர்களின் அன்பு மனைவியும் விஜயலஷ்மி, செந்தூரன் ஆகியோரின் தாயாருமான திருமதி.வாசுகி பத்மநாதன் அவர்கள் திங்கட்கிழமை 23.03.2015 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலம்சென்ற நகுலேசு - சீதாவதி தம்பதிகளின் இளைய மகளும் சண்முகதாசன், பாரதி, வசந்தி ஆகியோரின் சகோதரியும். Dr. தேவகுமாரன், திலானி ஆகியோரின் மாமியும் கிருஷ்ணி, விஷாலா, தனஞ்ஜெய், டால்ராம், சந்தானலஷ்மி, ஆராதனா ஆகியோரின் பாட்டியும், இராமநாதன், லோகநாதன் ஆகியோரின் அண்ணியும், விஜயலட்சுமி, இராமநாதன், தனலஷ்மி (மல்லிகா) லோகநாதன் ஆகியோரின் மச்சாளும், மங்கையற்கரசி, காலம் சென்ற பத்மநாதன் காலம் சென்ற இராஜேந்திரன் ஆகியோரின் மைத்துனியும், Dr. சக்திதரன், அர்ச்சுனா, பிரகாஷ், செந்தில், சாந்தினி ஆகியோரின் சிறியதாயாரும் ஆவார்.

இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு: Pathmanathan 01279 757074 pathmanathan@live.co.uk
Ramanathan 01268 766624 / 07956369557 vrramanathan@hotmail.com
Loganathan 07956369557 vrlogan@hotmail.com

அன்னாரின் தகனக்கிரியை ஞாயிற்றுக்கிழமை 29.03.2015 அன்று காலை 11.30 மணிக்கு Parndon Wood Crematorium Harlow வில் நடைபெற்றது.

• இளைய அப்துல்லாஹ்

# லண்டனும் வயதாளிகளும்!



பெற்றோர்களை வயதான பிறகு கவனிக்கும் பண்பு தானாகவே வரவேண்டும். யாரும் சொல்லி வரமுடியாது - இரக்கமும் ஏனையோரை மதித்தலும், அதே போலத்தான் வயதான பெற்றோரைக் கவனித்தலும். தமிழர் கலாச்சாரத்தில் வந்து பார்த்துப்பழக வேண்டிய விஷயங்களில் ஒன்று - முதியோரைக் கனம் பண்ணுதல்.

நாங்கள் எப்பொழுதும் முதியவர்களைக் கரிசனையுடன் பார்த்துக்கொள்கிறோம். கலியாணம் முடித்த புது தம்பதிகளுக்கு, தலைப்பிள்ளை பொம்பிளை பிள்ளை பிறந்தால் சந்தோஷமாக இருக்கும். வயதான காலத்தில் தண்ணி வென்னி வைச்சுதர ஒரு பெண் பிள்ளை வந்துவிட்டதே என்ற மகிழ்ச்சிதான் அது.

வயதான பெற்றோர் பிள்ளைகளையே எப்பொழுதும் நம்பி வாழ்வார்கள். இலங்கையில் இது சர்வசாதாரணம். ஏன் எமது தமிழர் வாழ்வில் முதியவர்களைக் கனம் பண்ணுதல், மதித்தல், வாழ்தல் என்று ஒரு கலாச்சாரமே இருக்கிறது. இது சாதாரணமான ஒரு விடயமல்ல. ஏனெனில் வெளிநாடுகளில் முதியவர்களை ஒரு சுமையாகவே பிள்ளைகள் நினைக்கிறார்கள்.

முதியவர்களை வீட்டில் வைத்துப் பராமரிப்பது என்பது வெள்ளைக்காரர் மத்தியில் அரிதாகவே இருக்கிறது. கிராமப்புறங்களில் பெரிய வீடுகளில் இருக்கும் வெள்ளைக்காரர் தங்கள் முதிய பெற்றோர்களை வீட்டில் வைத்து நன்றாகக் கவனித்து அவர்களைச் சந்தோஷமாக வைத்திருப்பதையும் கண்டிருக்கிறேன்.

ஆனால், லண்டனில் நகர்ப்புறங்களில் முதியவர்களை அரசாங்கம் முதியோர் இல்லங்களில் வைத்துத்தான் பராமரித்து வருகிறது. எனது வீட்டுக்கருகில்கூட மூன்று பெரிய முதியோர் இல்லங்கள் இருக்கின்றன. அந்த முதியவர்களும் பிள்ளைகள் தொடர்பான அக்கறை இல்லாதவர்களாக தனிமையில் அரசாங்கம் கவனிப்பதை ஏற்றுக்கொண்டு வாழ்கிறார்கள். ஏனெனில் இப்பொழுது முதியோர் இல்லங்களில் இருக்கும் முதியோர்கள் ஏற்கனவே நல்ல திடகாத்திரத்துடன் இருந்தபோது அவர்களுடைய பெற்றோர்களை முதியோர் இல்லங்களுக்கு அனுப்பியவர்கள்தாமே! அதனால் இப்பொழுது அவர்கள் அனுபவிப்பது செய்தவினை.

அரசாங்கமும் எங்களிடம் இருந்து என்.ஐ. நம்பருக்கான பணம், வரிப்பணம் என்று மாதாந்தம் சம்பளத்தில் இருந்து வெட்டி எடுக்கிறது. அது நாங்கள் முதியவராக ஆன பிறகு எங்களுக்குத் தரும் பென்சன் மற்றும் எமது வயதான காலப் பராமரிப்புக்கான செலவு. இதை இப்பவே வெட்டி எடுத்து விடுகிறது அரசாங்கம்.




எங்களது வீட்டில் அம்மய்யாவும் அம்மம்மாவும் முதியவர்களாக எனது கண்காண இருந்தார்கள். இது நான் சொல்வது 43 வருஷங்களுக்கு முந்திய ஊர்க்கதை. அதில் இருவரும் நல்ல திடகாத்திரமானவர்களாக சாகும்வரை இருந்தார்கள். அம்மய்யாவுக்குத் தான் சாகுறதுக்கு ஒரு வருஷத்துக்கு முந்தி வருத்தம் வந்தது. அவருக்குச் சீனி வியாதி

> நேரத்துக்குச் சாப்பாடு, நேரத்துக்குச் சிற்றுண்டி, நேரத்துக்கு மருந்து. நேரத்துக்கு மருத்துவப் பரிசோதனை என்று எல்லாம் நடக்கிறதே தவிர அவர்களின் மனதறிந்து கதைக்க, மதிக்க முதியோர் இல்லங்களில் யாருமில்லை.

இருந்தது. ஆனால், அது அவருக்குத் தெரியாமலேயே போய்விட்டது. இப்போதுபோல சீனி வியாதி பரிசோதனை பண்ண என்று யாரும் ஆஸ்பத்திரிக்கு போனதை நான் அந்தக் காலத்தில் பார்க்கவில்லை.

நான் நினைக்கிறேன், அவருக்குச் சீனி கூடித்தான் வருத்தங்கள் வந்திருக்கின்றன. கடைசி காலத்தில் அம்மய்யாவை எங்களது அம்மா கண்கலங்காமல் பார்த்து வழி அனுப்பிவைத்தார். ஆனால், அவர் சாகும்போது அவருக்கு இருந்த கடைசி ஆசை என்னை ஒரு தரம் கண்ணால் பார்த்துவிட வேண்டுமென்பது. அது அவருக்கு நிறைவேறாத ஆசையாகவே செத்துப்போனார்.

நான் ஊர் ஊராக அலைந்து திரிந்துபோது அவர் கவலைப்பட்டிருக்கிறார். மூத்த ஆம்பிளைப் பிள்ளை நான். எனது வாழ்க்கை முழுவதும் திக்விஜயத்தில்தான் கழிந்தது. அம்மாதான் தூங்காமல் அம்மய்யாவைப் பார்த்து ஒப்பேற்றினார். அம்மம்மா திடகாத்திரமாக சாகும்வரை இருந்திருக்கிறார். அவவின் செத்த வீடுக்கும் நான் ஏதாவது ஒரு வெளிநாடொன்றில் இருந்திருப்பேன்.

இப்பொழுதுதான் லண்டனில் முதியோர் மீதான அக்கறை வந்திருக்கிறது. இளையவர்களுக்கு துடிப்பாக இருப்பவர்களுக்கு ஒரு அறிவித்தலை டேவிட் கமரூன் அரசு விட்டிருக்கிறது.

இங்கு லண்டனில் முதியோர் இல்லங்களில் இருக்கும் முதியவர்களைக் கவனித்துக்கொள்ள நேர்ஸ்மார் இருக்கிறார்கள். ஆனால், முதியவர்களோடு இருந்து ஆறுதலாகப் பேசி அவர்களின் சுக துக்கங்களில் பங்குகொண்டு அவர்களை ஆறுதல்படுத்த யாருமேயில்லை. நேர்ஸ்மாருக்குச் சம்பளம் வேறு.

நேரத்துக்குச் சாப்பாடு. நேரத்துக்குச் சிற்றுண்டி, நேரத்துக்கு மருந்து. நேரத்துக்கு மருத்துவப் பரிசோதனை என்று எல்லாம் நடக்கிறதே தவிர அவர்களின் மனதறிந்து கதைக்க, மதிக்க முதியோர் இல்லங்களில் யாருமில்லை. பிள்ளைகள் யேசுபாலன் பிறந்தநாள், புதுவருடம். பெற்றோரின் பிறந்ததினம் என்று மட்டும் வந்துவிட்டுப் போவார்கள். மற்ற நேரங்களில் முதியவர்கள் தனிமையில் வாடுகிறார்கள்.


எனவேதான் முதியவர்களை, உடல் ஊனமுற்றவர்களை அவர்களோடு இருந்து கவனித்துக்கொள்ள முன்வரும் இளைஞர்கள் தன்னார்வத் தொண்டாக இத்தப் பணியைச் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் முதியவர்களைப் பார்க்கும் நேரத்தைக் கணக்கில் எடுத்து அவர்கள் வயதாளிகளாக ஆகும் பொழுது பிறர் கவனித்துக்கொள்ளும்படியான ஒரு ஏற்பாட்டை நடைமுறைப்படுத்த பிரிட்டன் அரசு யோசிக்கிறது.

அமெரிக்காவில் ஒரு சில இடங்களிலும் ஜப்பானிலும் இந்த நடைமுறை இருக்கிறது. வயதாளிகளை ஒருவர் பார்த்துப் பராமரித்தால் அவர் வயதாகும்போது அவரை ஒருவர் பார்ப்பார்.

முதியோர்களைக் கவனிப்பது எங்கள் எல்லோரினதும் கடமை. அதை வெகுமதியை எதிர்பார்த்து செய்யக் கூடாது என்று ஒரு சாரார் சொல்கின்றனர். ஆனால் முதியோர் இல்லங்களில் பெற்றோர்களைக் கொண்டு போய்விடாமல் பிள்ளைகள் வைத்துப் பார்க்கும்படியான பயிற்சிகளைப் பெற்றோரின் பெறுமதியைப் பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டும் என்று ஒரசாராரும் கருத்து தெரிவிக்கின்றனர்.

சிக்கல் என்னவென்றால், இங்கு வெள்ளைக்கார நாடுகளில் சுதந்திரம் என்று விட்டுவிட்டு பிள்ளைகளை 18 வயதுக்கு மேல் அவர்கள் இஷ்டப்படி வாழலாம் என்று சொல்லி அதே மாதிரி வளர விட்டு விட்டு பிறகு பெற்றோர்களைக் கவனியுங்கள் என்றால் எங்கிருந்து வரப்போகிறது பாசமும் அன்பும்? ஆனால், ஸ்கொட்லாந்து, அயர்லாந்து போன்ற இடங்களில் இயல்பாகவே பெற்றோர்களை வயதான பிறகு கவனிக்கும் பண்பு இருக்கிறது. அது தானாக வரவேண்டும், யாரும் சொல்லி வர முடியாது- இரக்கமும் ஏனையோரை மதித்தலும். அதேபோலத்தான் வயதான பெற்றோரைக் கவனித்தலும். தமிழர் கலாச்சாரத்தில் வந்து பார்த்துப் பழக வேண்டிய விஷயங்களில் ஒன்று - முதியோரைக் கனம் பண்ணுதல். ●

வவுனியூர் இரா.உதயணன்



# போலிக் கௌரவங்கள்

நேரம் பதினொன்றைத் தாண்டிவிட்டது. நிருபா, இன்னமும் மகள் சுருதியைத் திட்டிக் கொண்டே இருந்தாள்.

சுருதியோ சுருண்டு படுத்திருந்து அழுது கொண்டிருந்தாள்.

"சனியனே இப்படிச் செய்து போட்டியே! உனக்காக எத்தனை விரதங்கள் பிடிச்சன்... இரவு பகலென்று எத்தனை பேரிட்டை கூட்டிக்கொண்டு போனன். எங்கட மானம், மரியாதை எல்லாத்தையும் காற்றில் பறக்க விட்டிட்டியே"

சுருதி இன்னும் பெரிதாக அழுதாள்.

"அம்மா! என்னைக் கொஞ்சநேரம் சும்மா விடுங்கோ. என்னால் முடிந்தளவு செய்தனான்தானே!"

"மூடுடி வாயை! ஏதோ பெரிசா வெட்டிக் கிழிச்ச மாதிரிக் கதைக்கிறாய். இனி கேட்கிறவையளுக்கு என்னடி பதில் சொல்லுறது?"

"உண்மையைச் சொல்லுங்கோ!"

"என்னடி சொல்லுறாய்! உண்மையைச் சொல்லச் சொல்லுறியோ... சனங்கள் சிரிக்கிறதுக்கோ?"

"இங்க சனங்கள் எங்கெயென்று காத்துக் கொண்டிருக்கு. இன்னும் கொஞ்ச நேரத்தில் போனடிக்கத் தொடங்காட்டி பாரடி! நீதான் போனை எடுத்து விடுப்புக் கேட்கிற சனங்களுக்குப் பதில் சொல்ல வேணும்"

"நான் ஆன்சர் பண்ணுறன்"

"வேணடாம்! என்ரை மானம் போயிடும். நான் ஆன்சர் பண்ணுறன்..."

"உன்ர கொப்பு உன்னை ஒழுங்காக கண்டித்திருந்தால் நீ இப்படி செய்திருக்கமாட்டாயடி. கொப்பு உனக்குக் கொடுத்த செல்லம்தான். உன்னை இப்படிக்கொண்டு வந்து விட்டிருக்கு"

"அம்மா ஏன் அப்பாவை இப்ப இழுக்கிறியள்"

"அந்த மனிசன் உனக்கு வக்காலத்து வாங்க, நீ அந்த மனிசனுக்கு வக்காலத்து வாங்க... எல்லாம் நல்லாயிருக்கடி...

உனக்கு I PHONE SIX வாங்கித்தந்து பேஸ்புக்கும் எடுக்க விட்டது அந்த மனிசன்தானே! நீ கேட்டதெல்லாம் வாங்கித் தந்து உன்னை நாசமாக்கிப் போட்டார். எத்தன தரம் அந்த மனிசனுக்கு சொல்லியிருப்பன். இப்ப அவளுக்கு ஒன்றும் வாங்கிக் கொடுக்காதேயுங்கே... எல்லாம் பிறகு பார்க்கலாம் என்று. மனிசன் நெனச்சதை செய்ய வெளிக்கிட்டு இப்ப நடந்ததைப் பாத்தியே!"

"அம்மா... நான் நல்லாச் செய்யாததிற்கு அப்பாவை ஏன் திட்டுறியள்? அவர் பாவம் அம்மா. எவ்வளவு கஷ்டப்பட்டு வேலை செய்யிறார்."

"இன்னொரு தடவை அந்த மனிசனுக்காகப் பேசினியோ, உன்னை அடிச்சுப் போடுவன்."

இரவு வேலைக்குப் போயிருந்த கிருபாகரன் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தார்.

"இந்த மனிசனுக்கு பிள்ளையில ஏதும் அக்கறை இருக்கே? 'ஓவர் டைம்' செய்திட்டு இப்பதான் வாரார். இங்க இவள் வெட்டிக் கிழிச்சிட்டு சுருண்டு படுத்திருக்கிறாள்"

கிருபாகரன் மாடிப்படிகளில் ஏறி நேரே சுருதியின் அறைக்கு சென்றார்.

"ஏன் இப்படி சத்தம் போடுறாய் நிருபா?"

"சத்தம் போடாமல் என்ன செய்யிறது? உங்கட மகளுக்கு செல்லம் கொடுத்துக் கொடுத்து இப்ப அவள் செய்த வேலையைப் பாத்தீங்களே! இதுக்கு நீங்களும்தான்..."

"சும்மா அவளை திட்டிக்கொண்டிராமல் வாயை மூடு! நான் சொல்லுறதை எப்பவாவது கேட்டியே. என்ர வார்த்தைக்கு ஏதாவது மதிப்புத் தாறனியே! மற்றச் சனங்கள் தங்கட பிள்ளைகளை பரதநாட்டியம், மிருதங்கம், வீணை வகுப்புகளுக்கு கொண்டு திரியுதுகள் எண்டு இவளையும் நீ சும்மா விட்டானியே! அவளை படிப்பில் மாத்திரம் கவனம் செலுத்தாமல் இதுகளுக்கெல்லாம் கொண்டு திரிஞ்சதும் ஒரு காரணம்."

"மற்ற பிள்ளையள் எப்படிப் படிப்பில் கவனமும் செலுத்திக்கொண்டு மேலதிகமாக கலைகளைப் படிக்குதுகள் என்று யோசித்துப் பார்த்தியளே"

"அவளுக்கு நீ கொடுத்த பிரசர் கொஞ்ச நஞ்சமே நிருபா? எப்பவும் உன்ர பிள்ளையை மற்றவர்களுடைய பிள்ளையோட 'கொம்பயர்' பண்ணிப் பாக்காதை! உன்ர பிள்ளை எல்லாவற்றிலையும் வெட்டிக் கிழிக்க வேணும் எண்டு எதிர்பார்ப்பது பெரிய தவறு. ஒவ்வொரு பிள்ளைக்கும் அந்தப் பிள்ளையின் 'கபாசிட்டி'க்கு ஏற்ற மாதிரி, ஏற்ற அளவுக்கு படிப்பிலேயும் மற்றக் கலைகளிலேயும் பங்குபற்ற விட வேணும். நீ அப்படிச் செய்யேல்ல! உன்ர பிள்ளையும் நீ நினைச்ச எல்லாவற்றிலேயும் திறமையாக வரவேணுமெண்டு நினைச்சால் ஏதாவது ஒன்றில சறுக்க வேண்டி வரும். அதுதான் இங்க நடந்திருக்கு"

தொலைபேசி கீழே வரவேற்பறையில் அலறும் சத்தம் கேட்டது.

"நிருபா போன் அடிக்குது. நான் போய் ஆன்சர் பண்ணிப்போட்டு வாரன்" கிருபாகரன் சொல்லிவிட்டுத் திரும்ப, "கொஞ்சம் பொறுங்கோ நான் போய் எடுக்கிறன்" என்று சொல்லிவிட்டு நிருபா கீழே ஓடினாள்.

எடுத்ததும் அடுத்த பக்கத்திலிருந்து ஒரு பெண்குரல், "எப்படி உங்கட மகளின்ர ரிசல்ட்?, என்ர மகனுக்கு போர் ஏ ஸ்டார்ஸ் FourAStars"

"இவளுக்கும் "போர் ஏ ஸ்டார்ஸ்"தான். மெடிசினுக்கு லீட்ஸ் யூனிவர்சிட்டி கிடைச்சது. இவதான் தூர இடத்தில் போய் இருந்து படிக்க மாட்டாளாம்.

எலும்பு, தசை, இரத்தத்தோட வேலை செய்ய விருப்பமில்ல, மனசை மாற்றிப் போட்டன். படிக்கமாட்டன் எண்டு அடம்பிடிக்கிறாள். அதோட சரியான "ஸ்ரெஸ்" (STRESS) ஆன வேலையென்று யாரோ சொல்லிப்போட்டினம். யாரோ இவளோட படிக்கிற பிள்ளையள்தான் மனசை மாற்றியிருக்க வேணும் எண்டு நினைக்கிறன்."

"அவவின்ர வழியிலேயே விடுங்கோ. வற்புறுத்த வேண்டாம். இந்த நாட்டில் எந்தத் துறையில படிச்சும் நல்லா வருலாம் தானே"

"நானும் கிருபாவும் அதைப் பற்றித்தான் யோசிச்சுக் கொண்டு இருக்கிறம். ஒரே மகள்தானே. எங்களுக்கும் தூர இடத்துக்கு விட்டுப் படிப்பிக்க மனதுக்கு கஷ்டமாயிருக்கு. ஏதோ நாங்கள் இரவு பகலாக ஓடித்திரிந்து படிப்பிச்சதற்கு "போர் ஏ ஸ்டார்ஸ்" எடுத்துப் போட்டாள். மெடிசின் செய்யமாட்டன் என்று கட்டிலில் சுருண்டு படுத்துக்கிடக்கிறாள். இனி அவளே தனக்கு விருப்பமான ஒரு 'கோர்சை' (COURSE) செலக்ட் பண்ணிப் படிக்கட்டும். என்ன செய்யிறது. நாங்கள் ஒன்றை விரும்ப, கடவுள் அவள் வேற கோர்ஸ்தான் படிக்க வேணும் என்று நினைக்கிறார் போல இருக்கு"!!

"அப்ப நான் போனை வைக்கிறன்" அடுத்த பக்கத்தில் போன் துண்டிக்கப்பட்டது.

நிருபா படிகளில் ஏறி மேலே ஓட கிருபாகரன் சத்தம் போடத் தொடங்கினார்.

"ஏண்டி, எப்ப உன்ர வாயால உண்மையை சொல்லப் போறாய். இவளின்ர உண்மையான முடிவுகளைச் சொன்னால் என்ன குறைஞ்சு போவியே... மற்றவர்களுக்காக வாழப் பழகாமல் உனக்காக, உன்ர குடும்பத்திற்காக வாழப் பழகு."

"சும்மா வாயை மூடிக்கொண்டு இருங்கோ, இங்க பள்ளிக்கூடங்களில் தனித்தனியாக கூப்பிட்டு என்வெலோப்பில போட்டுத்தானே "ரிசல்ட்ஸ்"ஐ கொடுக்கினம். ஒரு பிள்ளையின் ரிசல்ட்ஸ், மற்றப் பிள்ளைக்குத் தெரியாது. சொன்னால் தான் தெரியும். எங்கட ஊரில போடுற மாதிரி நோட்டீஸ் பலகையிலையும் போடுறேல்ல. பிறகு ஏன் யோசிக்கிறியள்."

"அம்மா நீங்கள் இப்படிச் சொல்லக் கூடாது! உண்மையான ரிசல்ஸ் ஐ சொல்ல வேண்டியதுதானே"

"பிள்ள, உன்ர உண்மையான "ரிசல்ட்ஸ்"ஐ சொன்னால் கிசுகிசு கதைக்க இங்க எவ்வளவு சனமிருக்கு தெரியுமே, அங்க இங்க எண்டு கொண்டு திரிஞ்சா, பிள்ளை கைவிட்டுப் போட்டுது எண்டு எள்ளி நகையாட எத்தனை வேலையில்லாமல் வீட்டில குந்தியிருக்கு."

"உனக்கு இப்ப போலி கௌரவம்தான் தேவையாயிருக்கு. எப்படி உன்ன திருத்தப் போறனோ தெரியாது."

"நீங்கள் சும்மா உங்கட அலுவலைப் பாருங்கோ! நான் யார் கேட்டாலும் இந்த விசயத்தை பார்த்துக் கொள்ளுறன்."

இரண்டு வாரங்கள் கழிந்து விட்டது. அன்று ஒரு சனிக்கிழமை. இரவுப் பார்ட்டிக்கு நிருபா குடும்பமும் இன்னும் பல சினேகித குடும்பங்களும் கூடியிருந்தார்கள்.

சுருதியின் நண்பியொருத்தி நெருங்கி வந்து "உன் ரிசல்ட்ஸ்க்கு வாழ்த்துக்கள்" என்று சொன்னாள்.


சுருதி கொஞ்ச நேரம் மௌனமாகியிருந்து விட்டு.

"துவாரகா! எனக்கு ஒரே 'கில்டி' (GUILTY) ஆக இருக்கு. நான் அந்த 'ரிசல்ட்' எடுக்கேல்ல. என்ர பெற்றோர்தான் அப்படிச் சொல்லினம்."

துவாரகா ஒன்றும் சொல்லவில்லை. "வாங்கோ ஓரேஞ் ஜூஸ் ஊற்றிக் குடிப்பம்" என்று சொல்லிவிட்டு, சுருதியையும் அழைத்துக் கொண்டு பானங்கள் வைக்கப்பட்டிருந்த மேசையை நோக்கி நடந்தார்கள். ●



## ஞாபகம் வருதே!



டாக்டர் நவரத்தினம் நினைவுகள்

# குரு பக்திக்கு திருச்சூர் ராமச்சந்திரன்

**கண்களை மூடிக்கொண்டு, அவர் பாடுவதைக் கேட்டால், ஜி.என்.பிதான் பாடுகிறார் என்றே நினைக்கத் தோன்றும். அவருடனும் சாருமதி யுடனும் பழகிய நினைவுகள் மனதோடு வாழ்கின்றன. திருச்சூர் ராமச்சந்திரனின் குரு பக்தியை நினைக்கிறபோது வியந்து சிலிர்த்திருக்கிறேன் என்று தன் இசை உலக நினைவுகளைப் பகிர்ந்து கொள்கிறார், லண்டனில் பல ஆண்டு காலம் வைத்திய நிபுணராகப் பணி செய்யும் டாக்டர் எஸ்.நவரத்தினம்.**

களைத்துப் போன உடலுக்கும், சோர்ந்து நிற்கும் உடலுக்கும் அரு மருந்து இசை.

நோய்க்கு மருந்து சொல்லும் வைத்தியத் துறையோடு என் நீண்ட பல ஆண்டுகள் கழிந்துவிட்டாலும், இசை மட்டும்தான் வித்தியாசமான ஒரு சுகானுபவத்தை ஏற்படுத்த முடியும்.

சிறுவயதிலிருந்தே இசையை ரசிப்பேன். தாயகத்தில் இருந்த காலத்திலும் சரி, இங்கு வந்த பின்னரும் நல்ல இசையை தேடிக் கேட்பதும், ஆண்டு தவறாமல் டிசம்பர் மாதத்தில் சென்னையில் இசை விழாக்களை கேட்டு ரசிக்கவும் இன்று வரை தவறுவதில்லை.

தமிழ் நாட்டில் நல்ல இசை நிகழ்ச்சிகளை வழங்கும் பலருடனும் நெருங்கிப் பழகுகின்ற வாய்ப்புக் கிடைத்தது. உயர்ந்த இசையை எமக்கு அளித்து, மன நிறைவையும், இறை உணர்வையும் ஏற்படுத்துகின்ற அந்த அற்புதக் குரலுக்குரியவர்களை இதயத்தால் நேசிக்கிறேன்.

அப்படியான ஒருவர்தான், திருச்சூர் வி.ராமச்சந்திரன். அவரை எனக்கு மிகவும் பிடிக்கும்.

அமுதம் உண்ட தேன் குரலில் பாடி பக்திவெள்ளமாகப் பெருகி, உள்ளத்தை பரவசமாக்கிவிடுவார். அந்த இசையுடன் இரண்டறக் கலந்து ஒரு புனித உலகுக்குப் பயண்மாகிற அனுபவத்தை அனுபவித்திருக்கிறேன்.

"திக்குத் தெரியாத காட்டினிலே..." என்ற திருச்சூர் ராமச்சந்திரன் பாடலைக் கண்ணை மூடிக்கொண்டு கேட்டால், சங்கீத மேதை ஜி.என்.பிதான் பாடுகிறார் என்றுதான் நினைக்கத் தோன்றும். அவர் பெயருக்கு மேலும் பெருமை சேர்க்க வந்தவர் என்று எண்ணுவேன்.

ஒவ்வொரு தடவையும் அவரது ஒரு இசைக் கச்சேரியாவது சென்னையில் கேட்டு ரசிப்பேன்.

*1985* ஆம் ஆண்டு. ஆச்வே உயர் வாசற் குன்று முருகன் ஆலயக் கட்டட நிதிக்காக இசைக்கச்சேரி லண்டனில் நடந்தது. லண்டனிலுள்ள கர்நாடக இசைப் பிரியர்களுக்கு அவரது 'ஜி.என்.பி. பாணி'யிலான கச்சேரி வெகுவாகக் கவர்ந்தது. அப்போது, நமது யோகர் சுவாமிகளின் பாடல் ஒன்றையும் பாடி நம்மவர்களை வெகுவாக உற்சாகப்படுத்தினார்கள். அவருக்கு எனது



பாராட்டுகளைத் தெரிவித்தேன். பின்னர், *1992* இலும் ஆச்வே ஆலயத்துக்காக பெரியார் செல்லத்துரை அவர்கள் ஏற்பாட்டில் நிகழ்ச்சிக்காக வந்தபோதும் சந்தித்துப் பேசினேன். இதற்கு முன்னதாக *1990* ஆம் ஆண்டு, சென்னை மியூசிக் அகடமியில், அவரது கச்சேரி என்னை வெகுவாகக் கவர்ந்தது.

பாவமும், பக்தியும் ஒருசேரக் கலந்து அவர் பாடும்போது, கேட்கிற உள்ளங்கள் அந்த இசையுடன் ஐக்கியமாகி, மெய்மறந்து, பக்தியில் திளைத்து, பரவச நிலையை அடையச் செய்கிற சக்தி அவர் குரலுக்கு இருந்தது.

அவரிடமே நான் மனம் விட்டுப் பாராட்டிச் சொல்லியிருக்கிறேன்.

அவரது நாரணீயம் சமஸ்கிருத பாடல்களை தொடர்ச்சியாகப் பாடும் பாணியையும், சண்முகப்பிரியா, தோடி ராகங்களில் அமைந்த பாடல்களை அவர் பாடும்போது, புதிய அனுபவமொன்றைப் பெறுவது போன்ற உணர்வு ஏற்படும். 'கனகசபேசன் திருநடனம் கண்டேன். ஆனந்தம் கொண்டேன்' என்று அவர் பாடுவதும், வயலின் இசை அப்பாட்டோடு சங்கமித்து விடுவதும், எல்லாமே நம்மை அப்படியே தூக்கி உட்கார வைத்து பரவசமாக்கிவிடுகிறது! குருவாயூரப்பன் மீது அவர் பாடிய பக்தி பாடல்கள் அளவற்றவை.

*1993* ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஒரு நாள். சென்னை நாரதகான சபாவில் திருச்சூர் ராமச்சந்திரன் - சாருமதி அழைப்பில் அவர்களது பதினாறு வயது ஒரே மகள் சுபஸ்ரீயின் சி.டி. வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டேன். ஓபிள் ரெட்டி என்ற தெலுங்கு கோடீஸ்வரர் பிரதம விருந்தினர். சிறப்பு விருந்தினராக என்னைப் பேசச் சொன்னார்கள். சுபஸ்ரீயின் சிடியை முன்னதாகவே என்னிடம் தந்ததால், அவரது பாடல்களை கேட்டிருக்கிறேன். பெற்றோர்களும் சில பாடல்கள் பாடியிருக்கிறார்கள்.

இசைக் கலைஞர்களான தாய் தந்தையர்களுக்கு மகள் சளைத்தவரில்லை என்றும், இரத்தத்தோடு ஊறிய இசைக் கலையை அவரிடம் காண்கிறேன் என்றும் பாராட்டிப் புகழ்ந்து பேசினேன். சங்கீத வித்தகர்கள், இசைப் பிரியர்கள், ஊடகவியலாளர்கள் என்று நூற்றுக்கணக்கானவர்கள் இவ்விழாவில், கலந்துகொண்டனர்.

திருச்சூர் ராமச்சந்திரன் மனைவி சாருமதியும், மகள் சுபஸ்ரீயும் லண்டன் வருவதற்கான ஒழுங்குகளை செய்து, இசை நிகழ்ச்சிகளை நடந்த ஏற்பாடுகள் செய்த நினைவுகளை வரும் இதழ்களில் மற்றொரு கட்டுரையில் பகிர்ந்து கொள்கிறேன்.

திருவான்மியூரில் உள்ள அவர்களது இல்லத்துக்கு சென்றிருக்கிறேன். திருச்சூரும், சாருமதியும் மிக அன்பாக உபசரிப்பார்கள். விருந்தோடு, அவர்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறபோது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும்.

*2010*ம் ஆண்டு சென்னை ரஷ்ய கலாச்சார மண்டபத்தில் ஜி.என்.பி நூற்றாண்டு நடந்தபோது, நானும் கலந்து கொண்டேன். முன்நின்று நடாத்தியவர்களில் திருச்சூர் ராமச்சந்திரனும் ஒருவர். பூஷணி கல்யாணராமன், சுதா ரகுநாதன், சாருமதி ஆகியோரும் பங்குகொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.

"டாக்டர்! லண்டனிலும் இப்படி ஒரு ஜி.என்.பி. நூற்றாண்டு விழாவை நீங்கள் நடத்தலாமே!" என்று அவ்விழா நடந்து கொண்டிருக்கிறபோது, திருச்சூர் ராமச்சந்திரன் உரிமையோடு கேட்டார்.

ஜி.என்.பி. என்ற அந்த இசை மேதைக்கு நூற்றாண்டு விழாவை லண்டனில் ஏன் செய்யக் கூடாது? என்று எண்ணத் தொடங்கியது என் மனம். அதன் விளைவு -

*2011* ம் ஆண்டு ஏப்ரல் மாதம். லண்டன் கர்நாடக இசைக் கல்லூரி சார்பில் ஜி.என்.பி. நூற்றாண்டு விழாவை ஏற்பாடு செய்தோம்.

எனக்கு மிகப் பக்க துணையாக சங்கீத ரசிகன் ரவீந்திரன், தம்பு, சச்சிதானந்தன், ராஜி நடராசா உதவினார்கள். லூய்ஷியம் சிவன் மண்டபம், WOOD FORD மண்டபம் ஆகிய இரண்டு இடங்களில், இரு நாட்கள் நடந்த இவ்விழாவில் திருச்சூர் ராமச்சந்திரனுடன் ஜி.என்.பி.யின் சிஷ்யர்களின் மாணவர்களான சாருமதி, சுதா ரகுநாதன், பூஷணி கல்யாணராமன் ஆகியோரும் பங்குகொண்டு பாடினார்கள். திருச்சூர் தம்பதிகளின் புதல்வி சுபஸ்ரீயும் பாடினார்.

வயலின் ராகவேந்திரராவ், மிருதங்கம் நெய்வேலி சுப்பிரமணியம் - இருவருமே நன்றாக பாடகர்களுக்கு ஈடு கொடுத்தார்கள். திருச்சூர் ராமச்சந்திரனுடன் மிக நெருக்கமாகப் பழகுகின்ற வாய்ப்பு அந்தச் சமயத்தில் எனக்குக் கிடைத்தது.

என்னைப் போன்றே ஒரு டாக்டராக வரவேண்டிய வருடைய வாழ்க்கை எப்படி, ஒரு சங்கீத வித்தகராக்கியது என்பதே ஒரு சுவையான கதை.

திருச்சூர் ராமச்சந்திரனின் தாயார் கமலாம்பா, இயற்கையிலேயே இசையில் பெரிதும் ஆர்வம் கொண்டவர். சுமாராகப் பாடுவார். கேரளாவில், திருச்சூர் அவரது தாயகம்.

*1944* ஆம் ஆண்டு, அப்போது நான்கு வயது. "வெண்ணை உண்ட கண்ணா" பாட்டைப் பாடினார் தாயார். தன் 'குட்டி' மகனுக்கு அவர் அந்தப் பாட்டைச் சொல்லிக் கொடுத்ததில்லை.

- தொடர்ச்சி அடுத்த பக்கம்

**3ம் பக்கத்தின் தொடர்ச்சி**

நான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட பெண்களைப் பராமரிக்கும் நிலையத்தில் இவ்வாறு பாதிக்கப்பட்ட பெண்கள் பலர் இருந்தார்கள்.

சொந்த உறவுகளால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சிறுமியரும் அந்நிலையத்தில் இருந்தனர். இவர்கள் யாவரும் நிலையத்தில், நிரந்தரமாகத் தங்குவதில்லை. தேவையான உடல், உள சிகிச்சைகள் அளிக்கப்பட்டு அவர்கள் சமூகத்தில் இணைத்துக்கொள்ளப்படுகிறார்கள்.

யுத்தநாட்களில் அரசபடைகளாலும் அவர்களின் ஆதரவுக் குழுக்களாலும் கர்ப்பிணிகளாக்கப்பட்ட திருமணமாகாத பெண்களுக்காக யாழ்நகரின் மத்தியில் ஒரு வரவேற்பு இல்லம் ஆரம்பிக்கப்பட்டது. அந்த இல்லம் இன்றும் இயங்கி வருவதுதான் சோகம். இன்று எம்மவர்களால் ஏமாற்றப்பட்ட பெண்கள் பலர் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். கிறிஸ்தவ சகோதரிகளால் இந்த இல்லம் நடாத்தப்படுகிறது.

செல் தொலைபேசி போன்ற தொடர்புச் சாதனங்கள் மலிந்து கள்ளத்தொடர்புகள் இலகுவாகி விட்டன. விடுதிகள் என்ற பெயரில் எம்மவர்களால் நடாத்தப்பட்ட பாலியல் கூடங்கள் சில யாழ்ப்பாணத்தில் பொலிசாரால் சீல் வைக்கப்பட்டதை நினைவில் கொள்ளலாம். இவற்றுக்கு அப்பால் பற்றைவெளிகளில்கூட பாலியல் அசிங்கங்கள் நடந்தேறியுள்ளன.

கடந்த மாவீரர் நாளன்று யாழ்ப்பாணத்தில் "மீண்டும் புலிகள் வேண்டும்" என்ற துண்டுப் பிரசுரத்தை விநியோகித்த இளைஞர் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

விசாரணையின்போது அந்த இளைஞர் கூறியது இதுதான்: "தமிழீழம் பெறுவதற்காக இந்தப் பிரசுரத்தை நான் அச்சிடவில்லை. புலிகளின் காலத்தில் இனம் ஒழுக்கக் கட்டுப்பாட்டோடு வாழ்ந்து வந்தது. ஆனால் இன்று ஒழுக்கச் சீர்கேடுகள் மலிந்துவிட்டன. பண்பாட்டைச் சிதைத்த ஒரு இனம் நீண்ட காலம் வாழ்ந்ததாகச் சரித்திரம் இல்லை. அதற்காகவே மீண்டும் புலிகள் வேண்டும் என்ற பிரசுரத்தை அச்சிட்டேன்."

அந்த இளைஞனின் கோபம் இன்றைய எமது சமூகத்தின் அவலத்தைக் காட்டி நிற்கிறது!

அனுபவித்த சோகங்கள்தான் இவை. இதற்கு மேலே கைவிடப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட சமூகமாகப் போராடிய - குறிப்பாக ஆயுதம் ஏந்திய போராளிகளின் மறுவாழ்வு பேரவலமாக இருப்பதை வன்னிப் பகுதிகளில் பார்க்கலாம்.


கொஞ்சம் ஊடறுத்துப் பார்த்தால் உண்மையில் யாழ்ப்பாணம் வேறுவிதமான 'அந்த மாதிரி' இருப்பதைக் காணலாம்.

இதிலிருந்து விடுபட்டுப் பாதிக்கப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்காகத் தம்மை அர்ப்பணித்திருக்கும் நிலையங்கள், இல்லங்களுக்குப் புலம்பெயர் மக்கள் பெருமளவிலான உதவிகளைச் செய்ய வேண்டும்.

*நன்றி: கனடா 'தமிழர் தகவல்'*
*(24வது ஆண்டு மலர்)*

**'தோல்வி தற்காலிகமானது'**

# ஈழத் தமிழர்களை நேசித்த சிங்கப்பூரின் தந்தை லீ!



சிங்கப்பூரின் தந்தை எனப் போற்றப்படும் லீ - குவான்யூ தமது 91வது வயதில் 22ம் திகதி காலமானார். 1965இல் மலேசியாவிடமிருந்து விடுதலை பெற்ற தற்போதைய சிங்கப்பூருக்கான அடித்தளத்தை அமைத்த லீ, மக்கள் செயல் கட்சியைத் தொடங்கி அந்நாட்டின் முதல் பிரதமரானார். 1959-1990 பிரதமராகப் பதவி வகித்தார். இவரது கால கட்டத்தில் பிரிட்டிஷிடமிருந்து முழு அதிகாரத்தையும் அந்நாடு பெற்றது. 31 ஆண்டுகள் பிரதமராகப் பதவி வகித்தார். துறைமுக நகரமாக மட்டுமே அறியப்பட்ட சிங்கப்பூரை பிரமிக்கும் வகையில் வர்த்தக நகரமாக உருமாற்றினார். சுத்தமே முதல் நோக்கமாகக் கொண்ட அவர், ஆயிரக்கணக்கான தொண்டு நிறுவனங்களை அழைத்து, அவர்களுடன் இணைந்து சிங்கப்பூரைச் சுத்தம் செய்தார். இதற்குப் பின்னரே சுத்தத்தின் மதிப்பையும், அவசியத்தையும் உணர்ந்த சிங்கப்பூர் மக்கள் அவர் வழியில் நடந்து வருகின்றனர். லீயின் மறைவையொட்டி சிங்கப்பூர் அரசு சார்பில் ஏழு நாட்கள் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது. அவரது உடல் அரச மாளிகையில் வைக்கப்பட்டு, 28ம் திகதி பொதுமக்கள் அஞ்சலிக்காக நாடாளுமன்றத்தில் வைக்கப்பட்டது. 29ம் திகதி இறுதிச் சடங்கு நடைபெற்றது.

லீக்கு தமிழர்கள் மீது பெரும் மதிப்பு உண்டு. இலங்கைத் தமிழர் விவகாரத்தில் வெளிப்படையாக இலங்கை அரசைக் கடுமையாக விமர்சித்தவர் அவர்.

"இலங்கை கட்டாயம் ஒரு சந்தோஷமான நாடாக இருக்க வாய்ப்பில்லை. யாழ்ப்பாணத்தில் வாழும் தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதியைப் பார்த்துப் பொறுக்க முடியவில்லை. இலங்கையில் சிங்களர்கள் இருந்த காலம் தொட்டுத் தமிழர்களும் இருந்துவருகின்றனர். இந்த நிலப்பரப்பில் இரு இனத்தவர்களுக்கும் உரிமை உண்டு. ஆனால், திறமையில் தமிழர்களைக் காட்டிலும் பின்தங்கிய சிங்களர்கள் தாழ்வு மனப்பான்மையால் தமிழர்களைக் கொன்று வருகின்றனர். அதை எதிர்த்து ஈழத் தமிழர்கள் தொடுத்த போர் என்னைப் பொறுத்தவரை நியாயமானதே!

நான் ராஜபக்சவின் சில பிரச்சாரங்களையும், மேடைப் பேச்சுக்களையும் கேட்டிருக்கிறேன். அதை எல்லாம் வைத்துப் பார்க்கும்போது அவர் ஒரு 'சிங்கள வெறியர்' என்றுதான் தோன்றுகிறது. வெற்றிக்காக எதையும் துணிந்து செய்யக்கூடியவர் என்று புரிகிறது. இந்தப் போரில் தமிழர்களின் தோல்வி தற்காலிகமானது. அவர்கள் வெகுநாட்கள் அமைதியாக இருக்கப் போவதில்லை. கூடிய விரைவில் மீண்டு வருவார்கள்" என்று கூறியிருக்கிறார். ■

# குரு பக்திக்கு...

கொண்டிருந்துவிட்டு, பாடினான். எந்தவித முயற்சியும் எடுத்துக்கொள்ளாமலே- இப்படிப் பாட ஆரம்பித்தான்.

இவனுக்கு நல்ல குரல் வளம் இருக்கிறது என்பதைக் கண்டு கொண்ட தாயார், வரகலா சுப்பிரமணிய பாகவதர் என்ற சங்கீத ஆசிரியரிடம் சேர்ப்பித்தார். எட்டு வயதானபோது, ஆர்.கிருஷ்ணா ஐயரிடம் முறைப்படி சங்கீதத்தை படிக்கத் தொடங்கினார். பதினான்காவது வயதில் முதலாவது மேடைக் கச்சேரி நடந்தது. சிறப்பான நிகழ்வாக அமைந்தது. அவரது 18வது வயதில் 'ஆல் இந்தியா ரேடியோ'வில் பாடகராக இணைக்கப்பட்டார்.

1960 ஆம் ஆண்டு. 20 வயது ராமச்சந்திரன், வித்துவான் ஜி.என்.பி. வீட்டில், தயார் கமலாம்பாவுடன் கீழ் வராந்தாவில் காத்திருந்தார். படிகளில் அந்த மேதை நடந்து வரும் அழகை ரசித்தார். உயரமான, பொன்னிறமான, கம்பீரமான அவர் தோற்றம் மகனையும், தாயாரையும் வசீகரித்தது.

ஜி.என்.பியிடம் மேலும் சங்கீதத்தைப் பயில வேண்டும் என்ற ஆர்வ மேலீட்டால் அவரைத் தாயார் சென்னைக்கு அழைத்துச் சென்றிருந்தார். முன் கூட்டியே தெரிந்திருந்ததால், "எனக்காக என்ன பாடப் போகிறாய்?" என்று ஜி.என்.பி. கேட்டார். கணீரென்ற குரலில் பாடினார். ஜி.என்.பிக்குப் பிடித்துக் கொண்டது.

சில வாரங்களின் பின், ஜி.என்.பியிடமிருந்து கடிதமொன்று வந்தது. "நன்றாகப் பாடினாய். உனக்கு சங்கீதத்தில் நல்ல எதிர்காலம் இருக்கிறது. உனக்கு நான் பாடம் சொல்லித் தருகிறேன்" என்று எழுதியிருந்தார்.

தனது மகன் டாக்டராக வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டிருந்தார் கொச்சின் உயர் நீதிமன்ற நீதிபதியான வைத்தியநாதர் - ராமச்சந்திரனின் தந்தை அவர்! 'கெமிஸ்ரி' பட்டதாரியாகச் சித்தி பெற்றார் சந்துரு. அந்தச் சமயத்தில் தான் ஜி.என். பியைத் தாயாருடன் சென்று சந்தித்து, அவரிடமிருந்து தன்னிடம் மேலதிக சங்கீதம் படிக்கலாம் என்ற அழைப்புக் கடிதத்தைப் பெற்றிருந்தார். உடனேயே சென்னைக்குச் சென்று, ஜி.என்.பியிடம் சங்கீதத்தை உற்சாகத்தோடு படிக்க ஆரம்பித்தார். ஆனால், சில



வாரங்களுக்குள்ளே கேரளா, கோழிக்கோடு மெடிக்கல் கல்லூரியில் இடம் கிடைத்ததால், டாக்டராக வேண்டும் என்ற 'அரைகுறை' விருப்பத்தோடு, அங்கு சென்றார். ஒருநாள், மருத்துவ விரிவுரையாளர் பிணமொன்றை 'கீறிக்கிளறி' விளக்கியபோது, அந்தக் 'கொடூரத்'தைப் பார்க்க முடியாமல், இறுகக் கண்களை மூடி, மீண்டும் அங்கு போவதை நிறுத்திக்கொண்டார். அடுத்த ஓரிரு நாட்களில் சென்னைக்கு ரயிலேறி, ஜி.என்.பியிடமே மீண்டும் சென்றுவிட்டார். "சரியான முடிவை இப்போது எடுத்திருக்கிறாய்!" என்ற ஜி.என்.பியின் வார்த்தைகள் ராமச்சந்திரனுக்கு மகிழ்ச்சியை அளித்தது.

அந்த ஐந்து வருடங்களும் ராமச்சந்திரன் வாழ்க்கையில் மறக்க முடியாத நாட்கள். அவரிடமிருந்து நிறையவே கற்றுக் கொண்டார். கடினமாக உழைத்தார்.

1965ஆம் ஆண்டு. ஜி.என்.பி உடல் நலம் மிகவும் பாதிக்கப்பட்டது. ராமச்சந்திரன் தன் குருவின் நிலை கண்டு துயரத்தில் மூழ்கினார். "உங்களிடம் எப்பொழுதோ வந்திருக்க வேண்டும்" என்று தன்னை மறந்து கூறியபோது குரு சொன்ன வார்த்தைகள்: "சரியான நேரத்தில்தான் வந்தாய். இப்போது சங்கீதக் கலையை உன்னால் முழுமையாகப் புரிந்து கொள்ள முடிகிறது." 1965 மே 1ம் திகதி ஜி.என்.பி என்ற மாபெரும் இசை மேதை மறைந்தபோது, ராமச்சந்திரன் அநாதைபோலத் தவித்து விட்டார்.!

ஜி.என்.பி. பாணியை அவரது கணீரென்ற கம்பீரமான குரல் கொண்டிருந்ததால், இசைப் பிரியர்களின் அன்பைப் பெறத் தொடங்கினார்.

1973ம் ஆண்டு பாடகி சாருமதியை திருமணம் செய்துகொண்டார். எம்.எல்.வசந்த குமாரியின் முதல் மாணவி என்ற பெருமைக்குரியவர் சாருமதி.

உலக நாடுகள் பலவற்றுக்குப் போயிருக்கிறார். லண்டன், அமெரிக்கா, பிரான்ஸ், மலேஷியா போன்ற பல நாடுகளில் அவர் இசை நிகழ்வுகள் நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கின்றன.

இந்திய அரசின் பத்மபூஷண் விருது, சென்னை மியூசிக் அகடமியின் சங்கீதக் கலாநிதி விருது, சங்கீத நாடக அகடமியின் உயர் விருது போன்றவை இவருக்குக் கிடைத்த முக்கிய விருதுகள்.

"ஐந்து தசாப்தங்களாக இசைப் பயணத்தை வெற்றிகரமாக நடாத்துகிறேன் என்றால் அதற்கு எனது குருவே காரணம், எல்லாம் எனக்கு அவரே! முடிவும் அவரே!" என்று என்னிடம் மனம் விட்டு கூறியிருக்கிறார். ராமச்சந்திரன். அவர் குரு பக்தியை நினைத்து வியந்திருக்கிறேன். ●



ப.வை.ஜெயபாலன்

# நம்மவர்கள் பொது இடங்களில் நாகரீகம் பேண வேண்டும்!



புலம் பெயர் நாடுகளில் பொது இடங்களில் எம்மவர்கள் அநாகரீகமாக நடந்து கொள்கிறார்களா? என்பது குறித்த ஒரு உரையாடல், சந்திப்பு ஒன்றில் ஆரம்பமானது. ஜேர்மனி, சுவிஸ், பிரான்ஸ், டென்மார்க் நாடுகளில் வாழ்வோரும் அந்த லண்டன் சந்திப்பில் கூடியிருந்தார்கள். தொழில்கூட உணவுச்சாலை, திருமணம் அரங்கேற்றம், பூப்புனித நீராட்டு, ரயில், பேருந்து பயணங்கள், ஆலயம், தமிழ்ப் பள்ளி உட்பட ஏனைய இனத்தவர்களும் இணைந்து கொள்ளும் வேலை வாய்ப்பு, பணியகம் மற்றும் தபாற்கந்தோர் என பொது இடங்களில், எம்மவர்கள் தம்மை அறியாமலும், அறிந்தும் நடந்து கொள்ளும் சின்னஞ் சிறு அநாகரீக முறைகள் கூட எவ்வளவு உன்னிப்பாக மற்றவர்களால் பார்க்கப்படுகிறது என்பதை அந்த இரு மணிநேர உரையாடலில் பலரும் குறிப்பிட்டார்கள். நாம் எவ்வளவு தூரம் மாற வேண்டும், எப்படி யார் இந்த திருத்தங்களை ஏற்படுத்த முடியும் என்ற ஆதங்கமும் அந்த உரையாடலில் தொனித்தது.

ஜேர்மனி, டென்மார்க் நாடுகளில் வாழும் பெண்மணிகள் தம் தொழிற்கூட உணவு சாலையில் எல்லா நாட்டு தொழிலாளர்களும் ஒன்றாக இருந்து உணவருந்தும்போது எம் தாய் நாட்டவர்கள் உணவு அருந்தும் முறை ஏனையோரை அருவருக்கச் செய்வதாக குறிப்பிட்டனர். கதிரை மேசையில் இருந்தவாறே உணவுக்கோப்பையை கையில் தூக்கி பிசைந்த உணவுடன் வாயருகே கொண்டு சென்று உண்ணுவது, இறைச்சி போன்றவற்றை 'நறநற' என சத்தம் கேட்கக் கடித்து துப்புவது, முருங்கைக்காயைச் சப்பி கோப்பையில் வைப்பது, பொது வரிசையில் நின்று தேவைக்கு அதிகமாக கோப்பையில் எடுத்து விட்டு மீதி என்று பெருமளவை குப்பைத் தொட்டியில் கொட்டுவது, தட்டில் குவிக்கப்பட்டிருக்கும் பலகாரங்களை தம்பிள்ளைகள் விருப்பப்படி அளையவிடுவது, மதுபானத்தை அருந்திவிட்டு அளவுக்கு அதிகமாக அசிங்கமாக கதைப்பது, நடந்து கொள்வது, நீள்வரிசை பின்னே நிற்க தமக்கு வேண்டியவர்களை தம்முடன் இணைத்துக்கொள்வது என்று பொது இடங்களில் எம்மவர்களின் ஒழுக்கவீனம் பலதும் அலசப்பட்டது. பிற நிற இனத்தவரும் அழைக்கப்பட்டு அவர்களும் வந்து நிற்கும் எம்மவர் சொந்த விழாக்களில்கூட இவ்வாறு நடைபெறுவது தானும் ஒரு தமிழன் என்பதால் தனக்கு தலைக்குனிவை தருவதாக ஒருவர் குறிப்பிட்டார். இவற்றை பார்க்கும்போது நாங்கள் எங்கள், எங்கள் நாடுகளில் நடக்கும் வைபவங்களிலும் ஆலயங்களிலும் காணும் காட்சிகள் நினைவுக்கு வருவதாக பலரும் குறிப்பிட்டனர். ஆக, இது மொத்தத்தில் தமிழருக்கு உரிய பழக்க வழக்கமாக எங்கும் தொடர்வதை அவதானிக்க முடிகிறது.





இவற்றில் கருத்து உரைத்தோர், கைகளால் பிசைந்து எந்நாட்டு உணவு, கறிகளை உண்பதை ஏற்றுக் கொண்டார்கள். சிந்தாமல், சிதறாமல் உண்ண வேண்டும் என்பதே முக்கியம் எனக் கூறினார்கள். தொழில்கூட உணவகத்திலே தங்களைப் பார்த்து உள்ளூர்க்காரர்களும் கையால் சாப்பிட தொடங்கியுள்ளதாகவும் டென்மார்க் பெண்மணி குறிப்பிட்டார்.

வழிபாட்டுக்குச் செல்லும் ஆலயங்களில்கூட இலவசமாக பிரசாதம் என்று உணவு வழங்கப்படுவது வழமையாக உள்ளது. பின் வரிசையில் உள்ளவர்களுக்கு உணவு இல்லையோ என்ற எண்ணமே இல்லாது வீட்டுக்கும் எடுத்துச்செல்வோர் எம்மிடையே உள்ளனர். திருமணம், பூப்புனிதம் என்ற வைபவங்களுக்கு வரும் ஒவ்வொருவரையும் மேசையைச் சூழ் இருத்தி சிறுவர் முதல் பெரியோர்வரை ஒவ்வொருவருக்கும் பேப்பர் தட்டில் மூன்று, நான்கு சிற்றுண்டிகளை கொடுப்பது எங்கும் வழமையாகிவிட்டது. இதில் சில மீதியாதலும் கொடுத்தவர் கையால் தொட்டுக்கூட பார்க்காத மீதி சிற்றுண்டிகள் குப்பை பைக்குள் கொட்டி மேசை துப்புரவாக்கப்படுவதும் துயரத்தை தரும் நிகழ்வுகள். ஆறு அல்லது எட்டுப் பேர் அமரும் மேசையில் நாலுதட்டில் தனித்தனி சிற்றுண்டிகளை வைத்து தத்தம் தட்டில் எடுத்துப்போட கரண்டியும் வைத்தால் சிற்றுண்டிகள் வீணாவதை தடுக்கலாம் என்பதும் உண்மை. நீள்வரிசையில் நின்று பரிமாறுவோர் அளவாக சிறுவர்களுக்கு பரிமாறுவதும் விரும்பாத கறிகளை தவிர்ப்பதும் கூட நல்லது.

திருமண நிகழ்வில் அறுகரிசி போட்டு வாழ்த்துவதற்கு நீள்வரிசையில் நிற்கும்போதுகூட நெரிபாடு வரிசைக்கு இடையை நுழைவது என வழமையாகிவிட்டது. சுவ்ற்காமில், இந்த வரிசை நெரிபாட்டில் ஒரு பெண்மணியின் சேலை காலில் மிதிபட்டு நழுவி கீழே சரிந்ததும்கூட எடுத்துக்கூறப்பட்டது.

அமைதி காக்க வேண்டிய ஆலயங்களில்கூட உரக்கப்பேசுவது, ஓடித்திரிந்து சத்தம் போட்டு விளையாட பிள்ளைகளை அனுமதிப்பது, சாமி வாகனம் தூக்கிகொண்டு சத்தமிடுவது, அப்படிப்போ, இப்படிச்செய் என்று அதிகாரதொனியில் தன்னை முக்கியஸ்தராக காட்டிக்கொள்வது என பல சிறுமைத்தனங்களை பார்க்க முடிகிறது.

ஆலய பூசகர்களின் காலைக் கழுவி காலுக்கு விபூதி, சந்தனம், குங்குமம் வைத்து விழுந்து வணங்குவதுமான சடங்கு என்ன அர்த்தத்தை கொண்டது என்ற தன் ஐயப்பாட்டையும் ஒருவர் வெளிப்படுத்தினார். குருத்துவ நிறைவுகளை கொண்டவர்கள் இத்தகைய மரியாதைக்கு உரியவர்கள் என்றும் விளக்கப்பட்டது.

காது குடைவது, மூக்கு நோண்டுவது, நாற்றம் வீசும் குளிர் ஆடைகளை அணிவது போன்றவையும் பொது இடங்களில் ஏனையோர்க்கு அசௌகரியம் தரும் என்பதும் வயமூத்தவர்கள் குறிப்பாக அவற்றை கவனிக்க வேண்டும் என்பதும் கூட குறித்து உரைக்கப்பட்டது.

இந்த சந்திப்பில் பேசப்பட்ட எல்லாமே காலகாலமாக புலம் பெயர் நாடுகளில் எம்மவர்களிடம் காணப்படும் குறைபாடுகள்தாம், இங்கு வளரும் எம் எதிர்கால சந்ததிகள் இவற்றில் பலவற்றை தவிர்ப்பார்கள் என எதிர்பார்க்கலாம், அப்படியானால் ஐந்தில் வளையாததால் ஐம்பதில் வளைந்து எங்களை மாற்ற பெற்றோர்களாகிய நாங்கள் இயலாதவர்களாகிவிட்டோமா?





# தங்கத் தாத்தாவுக்கு லண்டனில் பெருவிழா



## இலண்டன் இலக்கிய சங்கமம் நடாத்தியது


புலவர் சிவானந்தன்


பாரிஸ்டர் ஜோசெப்பு


மு.நித்தியானந்தன்


திருமதி வி.ஆர்.ராமநாதன்


பண்ணிசை பரமசிவம்


ஜமுனா தர்மேந்திரன்


அமைப்பாளர் சிவதணிகாசலம்


'நாழிகை' மாலி


சட்டத்தரணி காயித்திரி தேவி



ரவீந்திரமோகன்


ஒப்பிலாமணி


ஆச்வே குகேந்திரகுருக்கள்


சங்கீதபூஷணம் சற்குணராசா


இளையதம்பி தயானந்தா


பரந்தாமன்

அந்நிய மண்ணில் அடைக்கலம் புகுந்த தமிழர்களை, தாயக மண்ணையும், தாய்த் தமிழையும் மறக்காது தமிழோடு வாழவைக்கிற பெரும் பணியை சில அமைப்புகள் செய்து வருகின்றன. இந்தவகையில் இலண்டனில் இலக்கிய சங்கமம் என்ற அமைப்பு செய்து வருகிறது.

இணுவில் கிராமத்தில் பிறந்த தட்சணாமூர்த்தி என்ற உலகத் தவில் மேதைக்கும், நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கும் லண்டனில் விழா எடுத்த இலண்டன் இலக்கிய சங்கமம், சமீபத்தில் தங்கத் தாத்தா நவாலியூர் சோமசுந்தரப்புலவருக்கு வெம்பிளி, அல்பேர்ட்டன், சென்ற் ஜேம்ஸ் மண்டபத்தில் விழா நடாத்தினார்கள்.

தமிழறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள், தமிழ் உணர்வாளர்கள் நூற்றுக்கு மேலானவர்கள் நிறைந்திருந்த மண்டபத்தில், தாயகத்தின் மாபெரும் கவிஞர் சோமசுந்தரப் புலவரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து, மங்கல விளக்கேற்றி, வாழ்த்துப்பா பாடி விழா ஆரம்பமானது.

இலண்டன் இலக்கிய சங்கமத்தின் ஆணிவேராகவும், அமைப்பாளராகவும் செயல்படும் சிவ தணிகாசலம் விழாவின் நிகழ்ச்சிகளை தன் பணிவான, கம்பீரமான உரையுடன் ஆரம்பித்தார். சைவமுன்னேற்றச் சங்க நிறுவனரும், தமிழ் தொண்டனுமான வி.ஆர்.இராமநாதன், 'பெரியபுராணம் உணர்த்தும் அறநெறி'யை இலகு தமிழில் அழகு வார்த்தைகளில் விளக்கினார்.

புலவர் பாரம்பரியத்தின் 'கொடுமுடி' என்று புலவர் க.சிவானந்தனும், 'தாயுத்தமிழ்' என்று ஊடகவியலாளர் இளையதம்பி தயானந்தாவும், 'ஏறாத மேட்டுக்கு இரண்டு துலா' என்று பாரிஸ்டர் எஸ்.ஜே.ஜோசெப்பும், புலவரின் தனித்துவமான கவிதைச் சிறப்புக்களை பேராசிரியர் மு.நித்தியானந்தனும், தமிழகத்தில் புலவருக்கு இருந்த மதிப்பை 'நாழிகை' மாலியும் எடுத்துக்கூறினார்கள். சட்டத்தரணி காயித்திரிதேவி கதிர்காமநாதன் உரையும், திருமதி யமுனா ராஜேந்திரனின் உரையும் சபையோரைக் கவர்ந்தது.

தங்கத்தாத்தா முதன் முதலில் பாடிய 'மூத்தண்ணா' என்ற விநாயகர் துதியையும், "அஞ்சு முகத்தவர் கொஞ்சி முகந்திடும் ஆறுமுகப் பதுமம்" என்ற முருகன் பாடலையும் சங்கீத்பூஷணம் சற்குணராஜன் இசைக்க, இலக்கியச் சபை பேரானந்தத்தில் மூழ்கியது. இலக்கிய சங்கமத்தின் இளையோர் குரலாக பரந்தாமன் குரல் ஒலித்தது. வரவேற்புரை: சிவானந்தன்; வாழ்த்துரை வழங்கிய ஈலிங் கனகதுர்க்கை அம்மன் அறங்காவலர் கலாநிதி தேவசகாயம், ஆசியுரை நிகழ்த்திய ஆச்வே அர்ச்சகர் குகேந்திரக் குருக்கள் ஆகியோர் உரைகளுடன், சங்கமத்தின் செயலாளர் ஒப்பிலாமணி நன்றியுரை நிகழ்ந்தது. இரவு விருந்துபசாரத்துடன் பேரவை கலைந்தது.

இவ்விழாவின் முக்கிய சிறப்பு அம்சம்: 'அப்பன் மகனாகி, வளர்ந்து உயர் ஓய்தல் அற்று உணர்வு ஒன்றினை நாடவே உண்மை' என்னும் வகையில் விழாவின் இடையில் சோமசுந்தரப் புலவரின் பேரன் டாக்டர் பாரதி இளமுருகனார் அவுஸ்திரேலியாவில் இருந்து பாடிப், பேசி அனுப்பிவைத்திருந்த வாழ்த்துச் செய்தி சபையில் காட்சிப்படுத்தப்பட்டது. செல்வி ராணி சிறினிவாசம் அதனை நெறிப்படுத்தினார். மூத்த பத்திரிகையாளர் பொன் பாலசுந்தரம் வாழ்த்தும் மிகச் சிறப்பாக அமைந்திருந்தது.

சரோஜினி சந்திரகோபால்

# அந்தணர் அடிபோற்றி ஆகம வள்ளலை அகம் நிறைந்து வாழ்த்துவோம்!



ESSEX TAMIL SOCIETY இன் பதினைந்தாம் ஆண்டு நிறைவையொட்டி, கடந்த 01.03.2015 அன்று WOODFORD BRIDGE HIGH SCHOOL இல் கலை விழாவுடன் பரிசளிப்பு வைபவமும் நடைபெற்றது. மாலை ஐந்து மணி முதல் ஆசிரியர், மாணவர், பெற்றோர், ஆதரவாளர் என நிறைந்து களை கட்டியது மண்டபம். மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்து, கழக கீதம், திருக்குறள், மூதுரை, கோலாட்டம், காவடி, அபிநயப்பாட்டு, நடனம், கவியரங்கம், பாரதியார் சரிதம், மிருதங்கம், பட்டிமன்றம், பரதநாட்டியும் என எசெக்ஸ் தமிழ்க் கழக மாணவர்கள் தொடர்பாக மேடை ஏறிச் சபையோரை மகிழ்வித்தனர்.

வில்லுப்பாட்டு மூலம் பாரதியார் சரிதத்தினைத் தெள்ளத்தெளிவாக விளக்கிய மாணவர்தம் தமிழ் மொழிப் புலமை பாராட்டத்தக்க ஒன்று. "மகாபாரதத்தில் சுவையான பாத்திரம் எது" எனும் பட்டிமன்றத்தில் அத்தனை பாத்திரங்களுமே, சுவை மிக்கவையே என்று சொல்லுமளவிற்கு மாணவர்களது விவாதத்திறமை சிறப்பாக அமைந்திருந்தது. வழமையாக தமிழ்ப் பாடசாலைகளில் கலைவிழாக்கள், பரிசளிப்பு விழாக்கள் நடைபெறுவதும், மாணவர்கள் போட்டி போட்டுக் கொண்டு தம் இயல், இசை, நாடகத் திறமைகளை மேடைகளில் வெளிப்படுத்துவதும் இயற்கையே.



இருப்பினும் 'எசெக்ஸ் தமிழ் கழகம் பாடசாலை' ஆண்டு விழாவினை கடந்த மூன்று ஆண்டுகளாக சிறிது வித்தியாசமாகவே கொண்டாடி வருகின்றது. தகைமை மிக்க சான்றோரைக் கௌரவித்துப் பட்டமளித்து பாராட்டிப் பெருமை சேர்க்கும் ஒரு சிறந்த சேவையினைத் தொடர்ந்து இலண்டனில் செய்து வரும் ஒரே தமிழ்ப் பாடசாலை 'எசெக்ஸ் தமிழ்க் கழகம்' ஒன்றாகத்தான் இருக்க முடியும்.

2013 இல் எசெக்ஸ் தமிழ் கழகம் இயங்கி வரும் NEWBURY PARK PRIMARY SCHOOL -இன் தலைமை அதிபர் MR. COLIN WHITEHEAD அவர்களுக்கு 'உலகம் தழுவிய உத்தமன்' என்ற பட்டம் வழங்கப்பட்டது. நம் தமிழ்ச் சிறார்களின் தாய் மொழி வளர்ச்சியில் மிகவும் அக்கறை காட்டி உதவிய இந்த வெள்ளை நிற நல்ல மனிதர் ஐரோப்பிய ரீதியில் வழங்கப்படும் "COMMUNITY LANGUAGE AWARD" ஐயும் பெற்றுக்கொண்ட பெருமைக்குரியவர். ஒரு வெள்ளை இனத்தைச் சேர்ந்த சான்றோனுக்கு 'உலகம் தழுவிய உத்தமன்' என்ற பட்டத்தைக் கொடுத்த முதல் தமிழ்க் கழகம் எனும் பெருமை எசெக்ஸ் தமிழ் கழகத்தையே சேரும்.

2014ம் ஆண்டில் சட்டத்தரணி, அறிஞர் செல்லத் தம்பி சீறிக்கந்தராஜாவுக்கு 'செந்தமிழ் நாவலன்' எனும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது இத்தமிழ்க் கழகம். இந்(த) தமிழர் நாவில் செந்தமிழ் சொந்தமாக, சுவையாக, சுதந்திரமாக நடம் புரிவதை எவரும் அறிவர். நாம் வாழும் காலத்தில் திறமை மிக்கவர்களை வாழ்த்துவது பண்பு. வாழ்த்தும் போது தகுந்தவர்களை வாழ்த்துதல் பெரும் பண்பு. 'செந்தமிழ் நாவலன்' எனும் பட்டம் செந்தமிழ் நாவலனுக்கே கொடுக்கப்பட்டமை சிறப்பம்சம்.

2015ம் ஆண்டில் பாடசாலையின் 15வது ஆண்டு விழாவில், அதாவது இவ்வருட விருது ஈஸ்ற்காம் முருகன் கோவில் பிரதம குரு கயிலை இராம நாகநாத சிவம் சிவாச்சாரியாருக்கு வழங்கப்பட்டது. தமிழ் சார்ந்த விழாக்களிலெல்லாம் தரிசனம் தரும் இத்தன்னலமற்ற சிவாச்சரியார், அன்றைய விருதுக்குத் தானே சொந்தமானவர் என்பதை அறியாமலேயே சபையில் அமர்ந்திருந்தார். "ஆகம அண்ணல்" எனும் அரும்பெரும் விருதினைப் பெறுவதற்காக, சிவாச்சாரியார் அவர்கள் மேடைக்கு அழைக்கப்பட்டபோது, ஒரு கணம் தடுமாறி நின்றார் இத்தரும சீலர்.

சிவஸ்ரீ சுந்தரேசக்குருக்கள், இராமநாதக் குருக்கள், திருமதி பர்வதவர்த்தினி தம்பதியினரின் தவப்புதல்வரான சிவாச்சாரியார் அவர்கள், மயிலாடுதுறை மணல் மேட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரது அன்புத் துணைவியார் பெயர் கௌரி மனோகரி. அதே 'கௌரி மனோகரி' இராகத்திலான முருகன் கீர்த்தனையில் திருமதி பத்மினி குணசீலனின் நெறியாள்கையில், எசெக்ஸ் தமிழ் கழக மாணவிகள் நடனம் ஸ்ரீநாகநாத சிவம் சிவாச்சாரியார் அவர்களை மேடையில் வரவேற்று அவரது கண்களைக் குளமாக்கின. தன் அன்பு மனைவியாரே அவர் கரம் பற்றி மேடைக்கு அழைத்துச் சென்ற உணர்வை சிவாச்சாரியார் பேச்சு உறுதிப்படுத்தியது. ஆகமசீலர் எனும் பெருங்கௌரவத்தை அவருக்கு அளித்தபோது ஜெயஸ்ரீ, காயத்ரி, கயிலாஷ் எனும் மூன்று செல்வங்களை அவரோடு விட்டுச் சென்ற 'கௌரி மனோகரி' அம்மையாரையும் நினைவூட்டிய பெருமை யாரைச் சேரும்?

ஏறத்தாழ இருபத்தியேழு வருடங்களுக்கு மேலாக, இலண்டன் ஸ்ரீ முருகன் ஆலயத்தோடு தன் வாழ்க்கையினை இணைத்து வாழும் 'பெரிய ஐயா'வை அறியாதவர்கள் இல்லை. அன்பானவர், பண்பானவர், மொழிப்பற்று மிக்கவர், தர்மசீலர், சிறந்த பேச்சாளர், எவர் மனதையும் புண்படுத்தாது பழகும் சிறப்பான குணம் கொண்டவர்; எந்த வயதினருடன் பேசினாலும் அந்த வயதிற்கான முறையில் அறிவு பூர்வமாகப் பேசுபவர்; குருக்கள்; தாயுமானவர்.

அடுக்கிக் கொண்டே போகக்கூடிய "அந்தணர் யாரென்பார்க்கு இலக்கியம் ஆனாய் ஐயா" என "செந்தமிழ் நாவலன்" வழக்கறிஞர் செ.சிறீக்கந்தராசாவினால் வாழ்த்தப் பட்ட இந்த வள்ளல் அவர்களுக்கு 'ஆகம வள்ளல்' எனும் பட்டம் சாலவே பொருந்தும்.

'ஆகம வள்ளல்' எனும் பட்டம் பொறிக்கப்பட்ட கேடயத்தினை, சைவ முன்னேற்றச் சங்கம், வ.இ.இராமநாதன் வழங்கிக் கௌரவித்தார். வாழ்த்துப் பாவினை அண்ணலதும், அனைவரதும் செவிகளுக்குச் சேர்ப்பித்தவர் 'செந்தமிழ் நாவலன்' திரு.செ.சிறிக்கந்தராசா. பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை ஆற்றிய தற்போதைய NEWBURY PARK PRIMARY SCHOOL தலைமை ஆசிரியர் MR. R. FAIRCLOUGH அவர்களும் அண்ணலை வாழ்த்தத் தவறவில்லை. கராத்தே நிறுவன அதிபர் SENSEI எம்.ராமதாஸ் மாணவர்கட்கான பரிசில்களை வழங்கினார். மாணவர்களது திறமை மதிப்பீட்டில் பங்கு கொண்ட நடுவர்களும் கௌரவிக்கப்பட்டனர். இனிதே நிறைவேறியது விழா. ●



## வாசகர் கடிதம்

### காலக் கண்ணாடி

நிகழ்காலச் சம்பவங்களின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கும் காலக் கண்ணாடியாக இடம்பெறும் ஆசிரியர் தலையங்கம் இம்முறை புது வீறு கொண்ட ஒரு நடையினைக் கொண்டுள்ளது. ஆனால் இறுதியில் நம்பிக்கை வறட்சியின் கீற்று இளையோடுவது சௌக்கியமானதன்று.

பல அலைவரிசைகளில் சஞ்சாரம் செய்யும் விமலும், ஆய்வுகளின் தளத்திலிருந்து வரும் ஆணித்தரமான கருத்து வீச்சுக்கொண்ட இதயச்சந்திரனும், தமது புனித யாத்திரையில் வாசகர்களை பயணிக்க வைக்கும் கலாநிதி தியாகராஜாவும், மூன்றாவது மனிதனாக நின்று மானுடத்தை விமர்சிக்கும் டாக்டர் சிறீதரனும், கே.ஜி.மகாதேவா, இளைய அப்துல்லாஹ், ஹோமியோபதி டாக்டர் தியாகராஜன், டாக்டர் எஸ்.நவரத்தினம், சரோஜினி, நட்டலுக்கு எடுத்துக்காட்டான கதிர் துரைசிங்கம், பலருடைய விடயதானங்கள் பத்திரிகையை மேலும் மெருகூட்டுவதுடன் சிந்தனையையும் மீட்ட வைக்கின்றது.

கோவில் மணியை ஆராய்ச்சி மணி எனக் குறித்த தவறு காணப்பட்டபோதும் புதினத்தின் தரம் உயர்ந்துள்ளது என்பதற்கு இந்த வார இதழ் ஒரு பதம். பல தசாப்தங்களைக் கண்டு முதிர்ந்த 'தலைமை' தொடர்ந்தும் இளமைத் துள்ளலுடன் நடை போட்டு, வாசகர்களை வசீகரிக்கும் என நம்புகின்றேன்.

**க.மனோகரன்** M.A, Morden

### மாபெரும் கலைஞர்

தாயகத்தைப் பிரிந்து இந்த மண்ணில் குடியேறி 25 ஆண்டுகளாகிவிட்டன. ஆனாலும் அந்தப் பெரும் கலைஞர் 'சின்னமணி'யை எப்படி மறக்க முடியும்? கடந்த 'புதினம்' இதழின் மூலம் அவர் மறைவுச் செய்தியை அறிந்தேன். அவர் வில்லிசையை கேட்டு, ரசித்து, மகிழ்ந்த நினைவுகள்... கண்கலங்கிவிட்டேன்! தமிழீழம் மதித்துப் போற்றி சிலை எழுப்பப்பட வேண்டிய மாபெரும் கலைஞர் வரிசையில் அவரும் ஒருவர்!

**கி.குணசிங்கம்**, WATFORD

### மெய் சிலிர்த்தேன்

'உலகின் எட்டாவது அதிசயம்' என்று நமது தவில் மேதை தட்சணாமூர்த்தியை தமிழக எழுத்தாளர் எழுதிய கட்டுரையைப் படித்து மெய்சிலிர்த்தேன். இளம் வயதிலே மரணத்தைத் தழுவிக்கொண்டாலும், தமிழகத்தையே வியக்கவைத்த அந்த மேதைக்கு நிகர் அவர்தான்!

**எஸ்.ராஜ்குமார்**, EDGWARE

### வண்ணமயமான 'புதினம்'

'புதினம்' மார்ச் இதழைப் பார்த்தேன். படிப்பதற்கு முதல் பக்கம் பக்கமாகத் தட்டிப் பார்த்தேன். வண்ணமயமாக இருந்தது. பக்கத்துக்குப் பக்கம் படங்களுடன், அழகாக இருந்தது. ஒவ்வொரு பக்கத்தையும் படிக்கத் தூண்டியது.

**- ரகு ராமநாதன்**, EASTHM

### விமலுக்காகப் படிப்பேன்!

விமல் சொக்கநாதன் IBC வானொலியில் 'களம் பல காண்போம்' என்ற நிகழ்ச்சியைச் செய்கிறபோது, ரசித்துக் கேட்பேன். அந்த நிகழ்ச்சியைக் கேட்டால்தான் எப்படிச் செய்கிறார் என்பதை ரசிக்கலாம். உதாரணமாக மகிந்தா என்ற நபர் பேசுகிறபோது எப்படிப் பேசுவார் என்பதை அவர் குரலில் கேட்பது ஒரு தனிச்சுவை. அப்படித்தான் 'விமலின் பக்கம்' புதினத்தில். அதற்காகவே தவறாது புதினம் எடுத்துப் படிப்பேன்.

**- என்.நவரத்தினராஜா**, CLAYHALL

### இவர்களை மறக்கலாமா?

லண்டனில் நடக்கிற நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது மகிழ்ச்சி. தமிழை வளர்ப்பவர்களையும், தமிழ் கலையை மக்களுக்கு வழங்குபவர்களையும் நாம் மறக்கக்கூடாது. 'புதினம்' பணியைப் பாராட்டுகிறேன்.

**- திருமதி அகிலாதேவி**, CROYDON

ராஜகோபால்

## திருக்குறள் செம்மல் மணிமொழியன்

# அகவை எழுபது பெருமங்கல விழா காணும் தம்பதி

திருக்குறளை நெஞ்சில் சுமந்து கொண்டு வாழ்கிற அற்புதமான மனிதர்! தொழில் அதிபராக இருந்தாலும், 1330 குறள்களும் மனப்பாடமாக, அவரது வாழ்வின் ஒவ்வொரு அசைவுகளிலும் திருக்குறள் உணர்வு மேலோங்கி வாழ்கிறது!

எத்தனை ஆயிரம் மேடைகள் கண்டிருப்பார்! திருக்குறள்களை எடுத்துக்கூறி, விழாவுக்கு ஏற்ற கருத்துக்களை மிக அழகாகச் சொல்லுவார்.

தமிழ்நாட்டில் நான் சந்தித்த நல்ல உள்ளம், 'திருக்குறள் செம்மல்' மணிமொழியன். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேலாக எங்கள் குடும்ப நண்பர்களாக, ஒவ்வொரு ஆண்டும் சந்தித்து நீண்ட நேரம் பழகுகின்ற வாய்ப்பு எங்களின் பாக்கியம்.

விநாயகா மிஷனஸ் பல்கலைக்கழகங்கள், மருத்துவ நிலையங்கள் என்ற சாம்ராஜ்யத்தை உருவாக்கியவர் மறைந்த சேர்மன் ஏ.சண்முகசுந்தரம். இன்று தந்தையின் பொறுப்புகளை ஏற்று நடாத்திக் கொண்டிருக்கிற டாக்டர் ஏ.எஸ்.கணேசன், டாக்டர் அனுராதாவுடன் ஏற்பட்ட நெருங்கிய நட்பே, மணிமொழியன் குடும்பத்தாருடனும் சேரவைத்தது. டாக்டர் அனுராதா, மணிமொழியன் - கமலாதேவி தம்பதியின் மகள்.

ஆம், அந்த உயர்ந்த மனிதர் ந.மணிமொழியனுக்கு அகவை எழுபது. அவர் அன்பான மனைவி கமலாதேவி மணிமொழியனும் இணைந்த பெருமங்கல விழா 01.04.2015 மதுரையில் நடைபெறுகிறது. இனிய தம்பதியருக்கு மதுரை தமிழ்வேள் பி.டி.ராஜன் மண்டபத்தில் இவ்விழா நடைபெறுகிறது. அழகான அழைப்பிதழ் ஒன்றை அனுப்பியிருந்தார் மகள் அனுராதா கணேசன்.

நெஞ்சார மணிமொழியனையும், கமலா தேவியையும் திருக்குறள் வழி நின்று வாழும் புலம் பெயர்ந்த தமிழர்களோடு இதயத்தால் இணைந்து வாழ்த்துகிறோம்.

தமிழக மகாசந்நிதானங்கள் அருள் ஆசியுரை, கவியரசு வைரமுத்து சொற்பொழிவு, சாலமன் பாப்பையா பட்டிமன்றம், சீர்காழி சிவசிதம்பரம் இசை நிகழ்ச்சி போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடை



பெறுகின்றன.

மதுரை என்றாலே நியூகாலேஜ் ஹவுஸ் என்றளவுக்கு நிமிர்ந்து நிற்கும் அந்தப் பிரமாண்டமான ஹோட்டலின் அதிபர் அவர்! அவருக்கும் திருக்குறளுக்கும் என்ன சம்பந்தம்?

கல்லூரியில் அவர் படித்தது பொருளாதாரம். என்றாலும் பத்தாம் வகுப்பிலே திருக்குறளை மனனம் செய்ய ஆரம்பித்து விட்டார். நாளடைவில் திருக்குறள் செம்மல் மணிமொழியன் என்றே பட்டம் கூடக் கொடுத்து விட்டார்கள். திருக்குறளில் 'வெறி'யனாக இருந்தாலும் பொருளாதாரத்தில் முதுநிலைப் பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு திருக்குறளை தன் வாழ்வோடு இணைத்துக் கொண்டார்.

மதுரை நியூகாலேஜ் ஹவுஸ் பற்றிக் கேட்டால் அடக்கமாக அவர் சொன்ன பதில், "மிகச் சாதாரண நிலையில் இருந்து படிப்படியாக உயர்ந்து தொழில் துறையில் உயர்ந்த இடத்தை அடைந்தவர் என்னுடைய மாமா திரு.வி.கே.கே. கல்யாண சுந்தரசெட்டியார். மதுரை நியூகாலேஜ் ஹவுஸை வாங்கி அதன் தரத்தை உயர்த்தினார். அவரின் மகள் கமலாதேவியை மணம் முடித்து அவரது குடும்பத்துடன் என்னை இணைத்துக் கொண்டேன்."

ஒருவரிடம் பணம் இருந்தால் குணம் இருக்காது. குணம் இருப்பவரிடம் பணம் சேர்ந்திராது. இரண்டும் இணைந்திருப்பது பெரியதொரு வாழ்க்கை நலம். அன்பும் பண்பும் இணைந்தவராக இருப்பதால் அவரிடம் திருக்குறள் உணர்வு மேலோங்கியுள்ளது. திருக்குறள் அவர் உயிரினும் மேலாக இதயத்தில் வாழ்கிறது. குன்றக்குடி அடிகளாரோடு ஏற்பட்ட நெருக்கத்தினால் திருக்குறள் பேரவை என்ற அமைப்பை நிறுவி அதன் ஊடாக தமிழ் நாட்டில் மட்டுமல்ல, உலகமெங்கும் வள்ளுவத்தை மக்கள் மத்தியில் வளப்படுத்தி வருகிறார். தன் வாழ்விலும் கடைப்பிடித்து ஒழுக்க சீலராக வாழ்ந்து வருகிறார். வெளிநாட்டுத் தமிழ் அன்பர்களின் அழைப்பில் மணிமொழியன் தன் துணைவியாருடன் அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, அரபு நாடுகள் என்றெல்லாம் சென்று திருக்குறளைப் பற்றி உரையாற்றி திருக்குறள் பேரவை அமைத்து அங்கு வாழும் தமிழ் இதயங்களை வென்றார்! எனது மாமா வி.கே.கே. அவரிடம் கற்றுக்கொண்ட பாடங்கள் ஏராளம். ஒரு நல்ல தொழில் அதிபராவதற்கு கடுமையான உழைப்பு, புத்திக் கூர்மை, நல்ல உறவு, சான்றோருடைய ஆசி ஆகியவை முக்கியம். இவற்றை எல்லாம் கற்றுக்கொடுத்தவர் அவர். நானும் எடுத்தவுடன் இந்த நிலைமைக்கு வரவில்லை. மதுரை காலேஜ் ஹவுஸின் தரத்தை உயர்த்தி வருகிறேன்" என்றார். அன்பான மனைவி கமலாதேவி (இவரது சகோதரி சாந்தியைத்தான் சீர்காழி கோவிந்தராஜன் மகன் பாடகர் டாக்டர் சிவசிதம்பரம் மணம் முடித்தார்.), ரோட்டரி. இன்னர், வீல் கிளப் தலைவி, வி.கே.கே. மெட்ரிகுலேஷன் பள்ளியின் தாளாளர் எனப் பல பொறுப்புகளை ஏற்று வருபவர். இரண்டு பெண் பிள்ளைகள், இரண்டு ஆண் பிள்ளைகள், கவிதா ரெங்கநாதன், அனுராதா கணேசன் (விநாயகா மிஷன்) மகன்களில் மூத்தவர் பொறியியல் பட்டதாரி கார்த்திகேயன். தந்தைக்கு உதவியாகவும் இருக்கிறார். இரண்டாமவர் அமெரிக்காவில் படித்துப் பட்டம் பெற்ற கல்யாணராஜன். திருக்குறளைப் பற்றி மணிமொழியனுடன் பேசத் தொடங்கி, அவர் குடும்பத்தினருடனும் நெருங்கிப் பழக கிடைத்த வாய்ப்பு இறைவன் தந்த அருள். 'நல்லவர் மணிமொழியன்' என்று அவரை நன்கு தெரிந்த அன்பர்கள் சொல்வதையே நானும் சொல்கிறேன். குணக்குன்று அவர். அவர் இதயத்தில் திருக்குறள் வாழ்கிறது! ●

# மணிமொழியனார் வாழ்க வாழ்க பல்லாண்டு!

■ கவிஞர் இரா.இரவி



மதுரையின் பெருமைகளில் ஒன்றானவர் மணிமொழியனார். 'தோன்றின் புகழோடு தோன்றுக' என்ற திருக்குறளுக்கு இலக்கணமானவர். எந்த விழாவாக இருந்தாலும் அந்த விழாவிற்கு பொருத்தமான திருக்குறளை மேற்கோள் காட்டி பேசுவதில் வல்லவர். இவருடன் ஒருமுறை உரையாடிவிட்டால் உரையாடியவர்கள் வாழ்நாள் முழுவதும் அவரை மறக்க மாட்டார்கள். கணக்கின்றி திருக்குறளுக்காக செலவு செய்து வரும் புரவலர், நல்லவர்!

மணிமொழியனார் மதுரை மட்டுமல்ல, உலகளாவிய இலக்கியத் தொடர்பு உள்ளவர். சிங்கப்பூர், மலேசியா மட்டுமல்ல லண்டன் 'புதினம்' இதழின் ஆசிரியர் இனிய நண்பர் ராஜகோபால் அவர்களுடன் குடும்ப நட்பு உள்ளவர். ராஜகோபால் எப்போது மதுரைக்கு வந்தாலும் காலேஜ் ஹவுஸ் விடுதியில்தான் தங்குவார். வரும்போது தகவல் தந்து விடுவார். நான் சென்று வரவேற்று மகிழ்வேன். அவருடன் பேசும்போது மணிமொழியனார் பற்றி மிக உயர்வாக எடுத்து இயம்புவார். இப்படி ஒரு மனிதரை, ஒரு புரவலரை எங்கும் பார்க்க முடியாது. இயந்திரமயமான உலகில் மனதர்களும் இயந்திரமாகவே மாறி வரும் காலத்தில் மாமனிதராக விளங்குகிறார் மணிமொழியனார் என்பார். இலண்டனில் மணிமொழியனார் தலைமையில் உலகத் திருக்குறள் பேரவையை அங்குள்ள அறிஞர்கள் ஆரம்பித்தார்கள். லண்டனில் பிரபலமான நடன ஆசிரியை ராகினி ராஜகோபாலின் மாணவியின் அரங்கேற்றத்தில் சிறப்புரையாற்றி, குறள்களுக்கு ஏற்ப நடன நிகழ்ச்சி ஒன்றை அமைத்து அரங்கேற்ற வேண்டுமென்ற கோரிக்கையையும் விடுத்தார்.

மூத்த பத்திரிகையாளர் கலாநிதி பொன்.பாலசுந்தரம் லண்டனில் வாழ்கிறார். அவர் எனக்கு குடும்ப நண்பர். லண்டனில் மணிமொழியனாரை சந்தித்த பொன். பாலசுந்தரம், மணிமொழியனார் பற்றி அற்புதமான கவிதை ஒன்று எழுதி அவரது நூல் ஒன்றையும் இணைத்து மணிமொழியனாரிடம் என்னை ஒப்படைக்க வேண்டினார். நான், அய்யா மணிமொழியனாரைச் சந்தித்து நூலையும் கவிதையையும் வழங்கினேன். பெற்றுக்கொண்டு திரு.பொன்.பாலசுந்தரம் அவர்களையும், ராஜகோபால் அவர்களையும் பாராட்டி மகிழ்ந்தார்.

முன்பு எனது நூல் வெளியீட்டு விழா நடந்திட அவரது காலேஜ் ஹவுஸ் விடுதி அரங்கைக் கேட்ட போது நன்கொடையாக அரங்கை வழங்கி விழாவிற்கும் வருகை தந்து சிறப்புரையாற்றி சிறப்பித்தவர் மணிமொழியனார்.

நீதியரசர் கற்பக விநாயகம் தொடங்கி குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் வரை பலரை வரவழைத்து திருக்குறள் திருவிழா நடத்தி மகிழ்பவர் மணிமொழியனார். இங்கு நீதியரசர் கற்பக விநாயகம் அவர்களின் சிறப்பான உரை கேட்டு அவருக்கு மடல் எழுதி தொடங்கிய நட்பு, நூலிற்கு மதிப்புரை வாங்கும் அளவு வளர்ந்து நீதியரசர் மதுரை வரும் போதெல்லாம் இலக்கிய இணையர் தமிழ்த்தேனீ இரா.மோகன், தமிழ்ச்சுடர் நிர்மலா மோகன் அவர்களுடன் சேர்ந்து சென்று சந்திக்கும் அளவிற்கு வளர்ந்தது. நீதியரசருடனான நட்புக்கு காரணமாக இருந்தது மணிமொழியனார் நடத்திய திருக்குறள் திருவிழா.

விருதுகள் பல பெற்ற போதும் தலைக்கனம் இல்லாதவர். மென்மையானவர், மேன்மையானவர்.

உலகப் பொதுமறையான திருக்குறளை இவர் அளவிற்கு வேறு யாரும் நேசிக்கவில்லை என்றே சொல்ல வேண்டும். அந்த அளவிற்கு நேசிப்பவர். திருக்குறள் திருப்பயணம் மேற்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் தருண் விஜய் அவர்கள் மதுரைக்கு வந்தபோது, மகாகவி பாரதியார் ஆசிரியராகப் பணிபுரிந்த சேதுபதி மேல்நிலைப்பள்ளியில் அவரை வரவேற்று தேசிய நூலாக அறிவிக்க ஆவன செய்ய வேண்டுமென்ற கோரிக்கையையும் வைத்து வழி அனுப்பி வைத்தார்கள்.

திருக்குறள் தேசிய நூலானால், மணிமொழியனார் மட்டற்ற மகிழ்ச்சி அடைவார். எனவே அவர் மட்டுமல்ல, உலகத் தமிழர் யாவரும் மகிழ்ச்சி அடையும் வண்ணம் திருக்குறளை உடனடியாக தேசிய நூலாக்கிட அனைவரும் குரல் கொடுப்போம். மணிமொழியனாரின் 70வது பிறந்த நாள் விழாவில் திருக்குறளை தேசிய நூலாக்கியே தீருவோம் என்று அனைவரும் உறுதி ஏற்போம். மணிமொழியனார் வாழ்க பல்லாண்டு. திருக்குறள் போல வாழ்க பல்லாண்டு!

# மதுரை உலக தமிழ்ச் சங்க கருத்தரங்கில்

## லண்டன் எழுத்தாளர் இளைய அப்துல்லாஹ்

'உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை' நடாத்திய உலகத்தமிழ் எழுத்தாளர்களுக்கிடையிலான பன்னாட்டு பரிமாற்றக் கருத்தரங்கத்தில், லண்டனிலிருந்து எழுத்தாளரும், ஒளிபரப்பாளருமான இளைய அப்துல்லாஹ் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். கடந்த மார்ச் 13ம், 14ம் திகதிகளில் மதுரை சங்கம் ஹோட்டல் மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.






புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் இலக்கிய பணி பற்றிய காத்திரமான இவரது கட்டுரையும் தேர்ந்து எடுக்கப்பட்டு, கருத்தரங்கில் ஏனைய அறிஞர்களின் கட்டுரைகளுடன் வாசித்தளிக்கப்பட்டது. லண்டனில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழரான எம்.என்.எம். அனஸ் என்ற இயற்பெயர் கொண்ட எழுத்தாளர் 'இளைய அப்துல்லாஹ்' லண்டன் 'தீபம்' தொலைக்காட்சி ஆரம்பித்தது முதல் பத்து ஆண்டு காலத்துக்கு மேலாக ஒளிபரப்பாளராகக் கடமையாற்றியுள்ளார். பிரபல தமிழகப் பத்திரிகைகளிலும் எழுதி வருகிறார். 'புதினம்' இதழிலும் தொடர்ந்து எழுதி வருகிறார். பல நூல்களை வெளியிட்டிருக்கிறார்.

உலகத் தமிழ் சங்கத்தின் தனி அலுவலர் முனைவர் க.பசும்பொன் அவர்களின் நெறிப்படுத்தலில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையை சேர்ந்த அரசு செயலாளர் முனைவர் மூ.இராசாராம் கலந்துகொண்டு சிறப்பித்த இப்பன்னாட்டு கருத்தரங்கில் முப்பத்தைந்து அறிஞர்கள் கலந்துகொண்டனர்.



இக்கருத்தரங்கில் லண்டன் இளைய அப்துல்லாஹ், பிரான்ஸ் பேராசிரியர் சச்சிதானந்தம், மலேசியா முனைவர் வே.சபாபதி, முனைவர் வீரலட்சுமி, சிங்கப்பூர் மா.அன்பழகன், பஹ்ரைன் திருமதி ஹன் கல் கனி ஆகியோரோடு தமிழ் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் திரு.அழகு மருதுராஜ், முனைவர் கா.மு.சேகர், முனைவர் கோ.விசயராகவன், செந்தில், முனைவர் இரா.இளங்குமரன், பேராசிரியர் பா.மதிவாணன், பேராசிரியர் இரா.மோகன், மணா, முனைவர் சே.கணேஸ்ராம், முனைவர் தெ.வெற்றிச் செல்வன், முனைவர் பா.ஆனந்த குமார், திருப்பூர் கிருஷ்ணன், இந்திரா சௌந்தரராஜன், அரவிந்தன், க.வேணுகோபால், சுரேஷ்குமார இந்திரஜித், முனைவர் சா.உதயசூரியன், கடற்கரய், கவிஞர்கள் தேவேந்திர பூபதி, யௌவனிகா சிறீராம், கரிகாலன், பேராசிரியர் அ.இராமசாமி, முனைவர் நா.முருகேச பாண்டியன், திருமதி தமிழ்ச் செல்வி, கர்ணன், அ.முத்துகிருஷ்ணன் ஆகிய அறிஞர்கள் கலந்துகொண்டனர்.



### ஈழ தவில் மேதை தட்சணாமூர்த்தி ஆவணப்பட வெளியீடு

ஈழத்தின் தவில் சக்கரவர்த்தி 'லய ஞான குரே பூபதி' இணுவில் வி.தட்சணாமூர்த்தியின் ஆவணப் பட (DVD) வெளியீட்டு விழா FELTHAM நட்சத்திர மண்டபத்தில் 26.04.2015 ஞாயிறு மாலை 5.30 மணிக்கு நடைபெறவிருக்கிறது. உலகத் தவில் மேதையான இவர் அமரராகி 40 வருடங்களின் பின் அவரது ஆவணப்படமும், இலங்கை, இந்திய தவில் மேதைகளுடன் வாசித்த பிரபல கச்சேரி ஒலிப்பதிவுகளின் குறுந்தகடும் வெளியிடப்படவுள்ளது. இவரை நினைவு கூறும் இந்நாளில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். விபரங்களுக்கு: நற்குணம் - 07984420173

சத்தியமூர்த்தி 07940726376 சியோன் 07961155560

### ஈலிங் கனக துர்க்கை புதிய தலைவர்



ஈலிங் கனக துர்க்கை அம்மன் ஆலயத்தின் புதிய நிர்வாக சபைத் தலைவராக பிரபலமான சட்டத்தரணி ஆர்.டி. இரத்தினசிங்கம் அதிகப்படியான வாக்குகளைப் பெற்றுத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஆலயம் உருவான காலத்தில் இருந்து இன்று வரை, பெரும் பணி ஆற்றியவர் இவர். செயலாளராக க.கேசவன், பொருளாளராக எஸ்.சர்வானந்தன், உப தலைவராக சாரதா கணேசராஜா, உப செயலாளராக சாந்தா சுந்தரலிங்கம், உத்தியோகப் பற்றற்ற உறுப்பினராக கணபதிப்பிள்ளை ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அறங்காவல் சபை புதிய தலைவராக எஸ்.சிறீரங்கன், செயலாளராக அ.தேவசகாயம் ஆகியோர் பணியாற்றுவார்கள்.

### லண்டனில் சஹானா சங்கீத சபா ஆண்டுவிழா



லண்டன் பிரபல சங்கீத ஆசிரியை திருமதி கல்பனா செகராஜசிங்கத்தின் சஹானா சங்கீத சபா சங்கீத மாணவர்களின் ஆண்டு விழா கடந்த மாதம் 14ம் திகதி ஹாயிஷியம் சிவன் மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. லண்டனின் பல பகுதிகளிலுமுள்ள அவரது நூற்றுக்கு மேலான மாணவர்களின் நிகழ்ச்சிகள் மிகவும் ரசிக்கக் கூடிய தரத்தில் அமைந்திருந்தன. அரங்கேற்றம் கண்ட மற்றும் சிரேஷ்ட வயலின், மிருதங்கம், புல்லாங்குழல், மோர்சிங் மாணவர்கள் பக்க வாத்தியம் வழங்கினார்கள். லண்டனில் தமிழ்க் கலை உணர்வாளர் டாக்டர் எஸ்.நவரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

## கலைத்தம்பதியினருக்கு லண்டனில் பொன் விழா

மண வாழ்விலும், கலை வாழ்விலும் ஐம்பது ஆண்டுகளைக் கடந்த கலைத் தம்பதிகளான 'நாடக நாவலர்' ஆறுமுகசாமி, சங்கீத பூஷணம், திருமதி விஜயலட்சுமி ஆறுமுகசாமி ஆகியோரின் பொன்விழா லண்டன், குறொய்டன் லான்பிராங் பாடசாலை மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. கடந்த பல ஆண்டுகளாகக் கலைப்பணியாற்றும் விஜயலட்சுமி ஆசிரியையின் மதுரகான சபா மாணவர்கள், பெற்றோர்கள் இவ்விழாவை ஏற்பாடு செய்திருந்தார்கள். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளோடு, தம்பதியினரின் சிறப்புகளுக்கு கௌரவம் அளிக்கப்பட்டது. அவர்கள் புகழ் கூறும் செய்திகளோடு வண்ணமலர் ஒன்றையும் மாணவ மணிகள் வெளியிட்டு மகிழ்ந்தனர்.



"தமிழகத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், இசை அரசு எம்.எம்.தண்டபாணி தேசிகர், கும்பகோணம் இராசமாணிக்கம் பிள்ளை போன்ற இசை வித்தகர்களிடம் சங்கீத ஞானம் பெற்றவர் விஜயலட்சுமி ஆறுமுகசாமி. லண்டன் மதுரகான சபா ஊடாக 40க்கு மேற்பட்ட மாணவர்களைச் சங்கீதத்தில் பட்டயம் பெற வைத்தவர். வில்லுப்பாட்டு, நாடகம், பட்டிமன்றம் என்று இங்குள்ள இளைய தலைமுறையினருக்கு பயிற்சி அளித்து மதுரகான சபாவை வளர்த்தவர் அவர் கணவர் ஆறுமுகசாமி. இந்தக் கலைத்தம்பதியின் அரும்பணி இன்னும் ஆண்டாண்டு காலம் தொடரட்டும்" என்று மூத்த ஊடகவியலாளரும், அறிஞருமான கலாநிதி பொன் பாலசுந்தரம் மலரில் அளித்துள்ள வாழ்த்துக்களுடன், தமிழ் கலையுள்ளங்கள் வாழ்த்தி மகிழ்கின்றன.

# HAIR LOSS ? NOT ANYMORE !

Are you suffering with the following conditions?

FREE CONSULTATIONS

LANDMARK
HAIR REPLACEMENT STUDIO OF LONDON.
www.landmarkhair.com

- Thinning Hair
- Male Pattern Balding
- Receding hair line
- Alopecia
- All forms of hair loss conditions are solvable




STOP HAIR LOSS NOW!

HARLEY STREET TREATMENTS


MedContour

CHANGING LIVES IN OVER 50 COUNTRIES



After 1hr Treatment

Left side treated after 30mins, Right side untreated





After 4 treatments




www.med-contour.co.uk

Daily Mail
'No.1 Flab Zapper'

# STUBBORN FAT ? NOT ANYMORE !

LONDON
32 - 34 Great Marlborough Street,
London. W1F 7JB
Tel : + 44 (0)20 7734 7113

BRISTOL
21 St Georges Rd.
Bristol. BS1 5UU
Tel: + 44(0) 117 302 0129

TAMIL No
Please call
Tel: + 44 (0) 7958 407643

LANDMARK

# Great News for All our Sri Lankan Customers

## LycaFly is now open in COLOMBO

No 8 , Kinross Avenue. Colombo 04 | (0) 117 62 32 32 | www.Lycafly.lk







We will look after you throughout

## COLOMBO Specials




TURKISH AIRLINES from £399 Incl. taxes

OMAN AIR from £404 Incl. taxes

JET AIRWAYS from £427 Incl. taxes

QATAR AIRWAYS from £462 Incl. taxes

**CALL US 24x7 on 0207 132 32 32**

Need a visa? Call our visa experts on 0207 132 32 32 or email visas@lycafly.com

PLUS **FREE** LYCAMOBILE TOP-UP WHEN YOU BOOK WITH US

(hundreds & thousands of free minutes worldwide)

* The free Lycamobile top-up offer is offered to each fully paid adult return ticket and will not be offered to child/infant and one way tickets. Offers are not valid for Emirates Airlines. LycaFly reserves the right to withdraw this offer at any time.

LycaFly

CANARY WHARF
Walbrook Building, 195 Marsh Wall
London E14 9SG · 020 7132 0100

EAST HAM
180 High Street North,
East Ham E6 2JA · 0207 132 0056

WEMBLEY
14 Ealing Road, Wembley,
London HA0 4TL · 0207 132 0055

IATA



Lycamobile
Call the world for less
Special rates with UK plan
SRI LANKA
3p /min
Landline + Mobile
£12 a month
1000 UK mins
2GB DATA
Unlimited UK texts
Unlimited calls and texts from Lycamobile to Lycamobile
To buy: Text 12044 to 3535
Official Partner
DreamWorks
HOME
ONLY IN CINEMAS
No Roaming Charges
when you use your Lycamobile abroad in 17 destinations
Australia Austria Belgium Denmark France Germany Ireland Italy Netherlands Norway Poland Portugal Romania Spain Sweden Switzerland USA
Order your free SIM at www.lycamobile.co.uk or call 020 7132 0322
Top-up your SIM online or where you see the following signs:
TESCO Sainsbury's ASDA WHSmith Martin McColl
Lyca mobile
Call the world for less